வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

தரம் தெரிந்தவர்கள்
பாவிப்பது

மில்க் வைற்

நீல சோப்

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 பங்குனி திங்கள் 21-ம் நாள் 4—4—1966 | திங்கட்கிழமை துல்ஹஜ் 12 | இதழ் 45

திருமலை துறைமுக அபிவிருத்தி

மட்டக்களப்பு-கல்முனை ரயில் பாதை அமைப்பு

கிழக்கு மாகாண எம். பி. கள் சமர்ப்பித்துள்ள திட்டம்

திருமலைத் துறைமுகத்தில் ஒரு பிரயாணிகள் இறங்குதுறை அமைப்பதன் மூலம் நவீன பிரயாணிகள் கப்பல்களையும் இங்கு திருப்பி விடுவதற்கு வசதியாக இருக்கும் என்றும், திருமலைத் துறைமுக வட்டத்தில் புதிதாக பண்டகசாலைகளைக் கட்டுவதன் மூலம், இத்துறைமுகத்தினூடாக நடைபெறும் வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்தலாம் என்றும் திருமலைப் பிரதிநிதி திரு எஸ்.எம். மாணிக்கராசா தற்காலிகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் சமர்ப்பித்த திருமலை மாவட்டத்திற்கான அபிவிருத்தி பற்றிய திட்டங்களில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் கிழக்கு மாகாணப் பா. உறுப்பினர்கள் தற்காலிகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களை அலரி மாளிகையில் சந்தித்து கிழக்குமாகாண அபிவிருத்திக்கான திட்டத்தைக் கையளித்து கலந்துரையாடினார்கள்.

மட்டக்களப்புக்கும் கல்முனைக்குமிடையில் ரயில் பாதை ஒன்று உடனடியாக நிறுவப்பட வேண்டுமென பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வற்புறுத்தினார். கிழக்கு மாகாண அபிவிருத்தி பற்றிய பேச்சு வார்த்தைகளில் கிழக்கு மாகாண தமிழரசுப் பா. உறுப்பினர்களான திரு. சி. மூ. இராசமாணிக்கம், ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி, திரு. எஸ். எம். மாணிக்கராசா ஆகியோருடன் ஏனைய கி. மா. உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு விளையாட்டரங்கிற்கு நிதி சேர்ப்பதற்காக நடைபெறவிருக்கும் கலை நிகழ்ச்சிக்கு தமிழ் நாட்டுக் கலைஞர்கள் சிலரை அழைப்பதற்காக தமிழ் நாடு சென்றிருப்பதால் மட்டக்களப்பு முதல் உறுப்பினர் திரு. செ. இராசதுரை இச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் திரு. இராசதுரை எழுத்து மூலம் திரு. இராசமாணிக்கத்திடம் சில திட்டங்களைச் சமர்ப்பித்திருந்தார். அத் திட்டங்கள் பற்றி திரு. இராசதுரை தமிழ் நாட்டிலிருந்து திரும்பியதும் இராஜாங்க அமைச்சருடன் விவாதிப்பார் என்று தெரிகிறது.

கிழக்கு மாகாண அபிவிருத்தி பற்றி தமிழரசுப் பா. உறுப்பினர்கள் சமர்ப்பித்த திட்டங்கள் வருமாறு:

★ மட்டக்களப்புக்கும் கல்முனைக்கு மிடையில் ரயில் பாதை நிறுவப்பட வேண்டும். மட்டக்களப்பின் தென் பகுதியிலே கூடுதலான நெல் விளைவதால் இந்த நெல்லை மட்டக்களப்புப் புகையிரத நிலையத்துக்குக்கொண்டு வர அரசாங்கத்துக்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவாகிறது. மட்டக்களப்பு - கல்முனை புகையிரதப் பாதை விஸ்தரிக்கப்பட்டால் அரசாங்கத்துக்கு இந்தச் செலவு குறைவதுடன், மட்டக்களப்பு மாவட்டமும் பொருளாதார அபிவிருத்தி பெற வழியேற்படும்.

★ மட்டுநகரில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் ஒரே நிலையத்தில் இயங்கக் கூடியதான முறையில்

(9-ம் பக்கம் பார்க்க)

அதிகாரியின் மனைவியும் அரசாங்க காரும்

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் உயர் பதவியிலுள்ள அதிகாரி ஒருவர் காரியாலயப் பாவனைக்கான அரசாங்க மோட்டார் வண்டியை தனது சொந்தப் போக்குவரத்திற்குப்பயன் படுத்தி வருகிறாராம்.

இந்த அதிகாரியின் மனைவி அங்காடி சென்று மீன் வாங்குவதற்கும், மாதர் சங்கங்களுக்குச் செல்வதற்கும் இதே மோட்டார் வண்டியை பயன்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

இதுபற்றி வங்கியில் உள்ள வேறு சில அதிகாரிகள் நிதி அமைச்சருக்கு முறையிட்டிருக்கிறார்களாம்.

தமிழ் மொழிக்கு உயிர் வடித்துக் கொடுத்த தலைவனைச் சிலை வடித்துக் கொடுத்தான் புதுமைச் சிற்பி புல்லுமலை நல்லரத்தினம்.

வடபகுதியில் உள்ளூராட்சி அமைச்சர்

புதிய பாதைப் பகுதியைப் பார்வையிட்டார்

பூநகரி—மன்னார் புதிய பாதை அமைக்கப்படவிருக்கும் இடங்களைக் கடந்த வாரம் உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார். இப் புதிய வீதி அமைக்கப்படுவதன் மூலம் நன்மையடையவிருக்கும் சில கிராமங்களுக்கு அமைச்சர் கால் நடையாகச் சென்று அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றிற்கான பரிகாரம் காண்பதாகவும் கூறியுள்ளார்.

வடபகுதிப்பொருளாதார அபிவிருத்திபற்றி தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரிவானஒருதிட்டத்தை தற்காலிகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனாவிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சர் கடந்த வாரம் வடபகுதியில்ஒரு சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார்.

பூநகரி—மன்னார் புதிய பாதை அமைப்பது பற்றி கனம்மு. திருச்செல்வம் அதிக கவனம்செலுத்தியிருக்கிறார். இப்புதிய வீதியை அமைப்பதன் மூலம் ஏற்படக் கூடிய நன்மைகளையிட்டு நேரடியாகத் தெரிந்து கொள்ள விரும்பிய அமைச்சர் கடந்த 27 ம் திகதியன்று இப்பகுதிகளுக்குச் சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்துள்ளார். இப்புதிய பாதை அமைக்கப்படுவதன் மூலம் நன்மையடையவிருக்கும் வேராவில் பகுதிக்கு அமைச்சர் நடந்து சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியிருக்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு மோட்டார் வண்டியில் சென்ற கனம் திருச்செல்வம் முக்கியமான கிராமங்களில் எல்லாம் தங்கிச் சென்றிருப்பதுடன் உள்ளூர்ப்பகுதிகளுக்கு நடந்து சென்றும் மக்கள் குறைகளை அறிந்துள்ளார். வேராவில் பகுதியில் பஸ் போக்குவரத்துக்கும்உடனடியாக ஒழுங்கு செய்து கொடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். முடிக்குரிய காணிகளையும் அமைச்சர் பார்வையிட்டுள்ளார். இப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கு மீன் பிடிக் கூட்டுறவு மூலம் மீன் விற்பனைக்கு வசதி செய்து கொடுக்கவும் அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பொன்னுத்துரை.

மூன்றும் பகுதி

திங்கள்

'திங்கட்கிழமை போயா விடுமுறை. லீவுநாள் என்றாலே நாள் ஊர்ந்து செல்லும் என்பது செந்தில்நாதனின் அனுபவம். மிகவும் ஆறுதலாகவே அவருடைய திருப்பள்ளியெழுச்சி நடைபெறுகின்றது. அவர் எழுந்திருக்கும் பொழுது பிள்ளைகள் எழுந்து வெகு நேரமாகி விட்டது என்பது நன்றாகத் தெரிகிறது. காலைப் படிப்பை முடித்த அவர்கள் மாங்கொட்டையடி விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

'லீவெண்டால் கேழ்ப்பானேன்? ஒரே கும்மாளம். விடிஞ்சால் பொழுதுபட்டால் விளையாட்டுத்தான். மாலினி இஞ்சவா' மூத்தவளுக்கு ஏதோ வேலை கிடைக்கப்போகின்றது.

'நான் வருமட்டும் எனக்காக நீ விளையாடு' என்று தனக்கு ஒரு 'சிஸ்' நியமித்து விட்டு அடுக்களைப் பக்கம் போகிறாள்.

'அவள் தங்கம்மா சனிக்கிழமைதான் கூப்பன் எடுத்தவள். அவளிட்டை நான் கேட்டனெண்டு ஒரு சம்பல் இடிக்கிற அளவுக்கு 'மாஸ்' வாங்கிக் கொண்டு வா நாளைக்கு எங்கடை கூப்பனிலை எடுத்துத் திருப்பித் தாருவாம் என்டு சொல்லுமோனை.'

செல்லப்பாக்கிய ஆச்சி காலைப் பலகாரக் கடையைப் பெரிய ஆர்ப்பாட்டத்தோடு செய்து முடித்தாள். தோசைக்கு அன்னலட்சுமி இடிக்கிற மாசிச் சம்பல் நல்ல உவப்பான சாமான் தான். செந்தில்நாதன் காலைப்பசி ஆறிவிட்டு, விருந்தையிலே போட்டிருந்த ஈச்சேரில் வந்தமர்வதற்கும், மாணிக்கம் கிடுகுக் கட்டுடன் வருவதற்குஞ் சரியாக இருந்தது.

கிணற்றடிக் குறுக்கு வேலியை மாணிக்கம் பிரிக்கத் தொடங்க செந்தில்நாதன் தன்னையே கையுதவி ஆளாக நியமித்துக் கொள்ளுகின்றார். பிரித்தகிடுகுகளை எடுத்து மாட்டுக் கொட்டிலடியில் பக்குவமாக அடுக்கி வைக்கின்றான். 'ஆபத்து அந்தரத்துக்குச் சுடு தண்ணி வைச்சுக் குளிக்க உதவும் அடுப்பு மூட்ட உதவும். ஏன் பாழ்படுத்துவான்?' என்பது அவருக்குத் தெரியும் உக்கி இறந்துபோன கதிகால்களுக்குப் பதிலாகப் புதுக் கதிகால்கள் நாட்டப்படுகின்றன. சின்ன வேலியானபடியால் வேலை சீக்கிரமே முடிகின்றது. 'வரிச்சு'ங் கட்டி கீழ்க் கூந்தலையும் அறுத்துவிட்டதும் மாணிக்கம் போகத் தயாராகான்.

'மாணிக்கம், என்ன பறக்கிறாய்? உந்த ஓலையளையும் கூட்டி அந்தக் கிடங்கைநிரப்புவம் ஏணேய், எங்களுக்குக் கோப்பி போடெனை...'

'அங்கை கூப்பிரமணியத்தாரின்ரை வீட்டிலை ஊரிப்பட்ட வேலை கிடக்கு, உதை முடிச்சுப் போட்டு அங்கை ஓடிப்போகலாம் எண்டு ஓடி கூந்தனான்...' என்று மாணிக்கம் புறுபுறுத்தான்.

'இப்ப மாணிக்கனுக்குக் காசு வேணும் எண்டாலும் அம்மா தானே வரவேணும்' என்று நிலைமையை விளங்கப்படுத்துகிறாள் அன்னலட்சுமி.

நேற்று எண்ணெய் தேய்த்து நின்ற பொழுது எடுத்துக் கொண்டகிடங்கை நிரவும் பணி இப்பொழுது பூரணமாகி விட்டது.

அவர் கைகால் அலம்பிக் கொண்டு விருந்தையில் வந்தமர்ந்தார். இருப்புக் கொள்ளாதநிலையில் மாணிக்கம் முற்றத்தில் உலாத்துகின்றான்.

'உது மனிஷர் செய்யிற வேலையே? நானும் ரெண்டு மூண்டு இடத்திலை ஓடியாடி வேலை செய்தால் தானே நாலு காசை உழைக்கலாம். ரோட்டிலை கண்ட மனுஷி, 'போய் வேலியை அடை மாணிக்கம்; நான் துப்பல் வத்துற நேரத்துக்குள்ளை வந்திடுறன்' எண்டவ...' என்று மாணிக்கனின் புறுபுறுப்புத் தொடருகின்றது.



செல்லப்பாக்கிய ஆச்சி காணியைப் பிரிக்க எண்ணிய முறை

அன்னலட்சுமி செந்தில்நாதனுக்கு கிளாஸிலே கோப்பி கொண்டந்து கொடுத்தாள். மாணிக்கனுக்கு ஒரு பெரிய சிரட்டையிலை கோப்பியை ஊற்றிக் கொண்டு வந்தாள்.

'கோப்பியே? எனக்கு வேண்டாம். எனக்குச் சரியான தலைப்பித்து. கோப்பியைக் கண்ணாலும் பாக்கப் படாதெண்டு பரியாரியார் சொன்னவர்' என்று ஒற்றைக்காலில் நின்று கோப்பி குடிக்க மறுத்து விட்டான்.

'உவனுக்குத் தலைப்பித்தமோ? தலைக்கெறு! சிரட்டையிலை குடுத்திட்டம் எண்டதுக்கு உந்த ராங்கி காட்டுறான். கொழும்பிலை உதுகளைப் பாக்கேலாதுதான் உவங்கடை சாதிலை படிச்சு உத்தியோகம் பாக்கிறவங்களோடை நாங்கள் சரிசமமாயிருந்துதானே சாப்பிடுறனாங்கள் அதுகள் கொழும்போடை இருக்கவேணும். இதுகள் இஞ்சை இருக்க வேணும்'... செந்தில்நாதன் தத்துவ பூர்வமாக நினைத்துக் கொள்ளுகின்றார்.

மாணிக்கனின் பொறுமையை மேலும் சோதிக்க விரும்பாதவளைப் போல செல்லப்பாக்கிய ஆச்சி வந்து சேர்ந்தாள். கையிலே கொண்டு வந்த பனங்குடலையை அன்னலட்சுமியிடம் கொடுத்துவிட்டு, பணம் எடுப்பதற்காக அவசரமாக வீட்டுக்குள் நுழைந்தாள்.

காசை எண்ணிப் பார்த்த மாணிக்கத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. 'கிடுகுக் காசுபோக, ஒரு றூவாயே கூலி? றூவாக்குஎத்தனையார் எண்டு துணி வாங்கின காலமெண்டது ஆச்சியின்ரை நினைப்பாக்கும் நான் சும்மா செய்யுதாறன். உந்த அருக்காணிய ஞாயத்தாலை தானே இஞ்சை வாறதுக்கு நான் ஏர்வைப் படுறதில்லை நீங்கள் தந்த கண்டறியாத கூலியை நீங்களே வைச்சுக் கொள்ளுங்கோ...' என்று ஒரு ரூபாய்க்குத்தியை நிலத்திலே போட்டான்.

'என்ன மாணிக்கம் பெரிய [illegible] தியால் வேலை, அவருந் [illegible] செய்தவர். வேணுமென்டால் ஒரு ஐம்பேசத்தைக் கூடக் கூட்டு வாங்கிக் கொண்டு போறதை விட்டிட்டு, திங்கக்கிழமை காத்தாலை சண்டை புடிச்சுக் கொண்டு நிக்கிறாய்?' என்று சொல்லிக் கொண்டு சேலைத் தலைப்பிலிருந்த முடிச்சொன்றை அவிழுக்கிறாள்.

'நீங்கள் தனிய வரச் சொன்னபடியால் வந்தன். இல்லாட்டி அவன் குட்டியனைக் கூட்டியந்திருக்க மாட்டனோ? என்ரை பொடியன் கூட இன்டைக்கு லீவிலை நிக்கிறான்.'

கூலியில் சமரசம் ஏற்படுகின்றது. முடிச்சிலிருந்து ஆச்சி ஒரு ரூபாய் கொடுக்க, கீழே விழுந்த ஒரு ரூபாய்க் குத்தியையும் எடுத்துக் கொண்டு மாணிக்கன் போய் விட்டான்.

'உதுகளுக்கெல்லாம் ஒரு 'நாக்' தேவை அவனுக்கு ரெண்டு ரூவா கூலி குடுக்க வேணும் எண்டு அவனுக்குத் தெரியும். அதுதான் மற்றைய ஒரு ரூபாயை முடிச்சிலை வைச்சிருந்தவ முதலிலை ரெண்டு ரூபா குடுத்திட்டுப் பாருங்கோ. அப்பவும் போதாது எண்டுதான் நாண்டு கொண்டு நிப்பாங்கள். எளிய பஞ்சமச் சாதியள்' என்று செந்தில்நாதன் நினைத்துக் கொள்ளுகின்றார்.

'இது 'பங்கு' இறைச்சியேனை' என்று அன்னலட்சுமி கேட்கின்றாள்.

'ஓம், புள்ளை. அவன்நாகன் அடிச்சவன். உவரும் நிக்கிறாரே எண்டுதான் வாங்கிக் கொண்டு வந்தனான்.'

கொழும்பு உத்தியோகத்தர் அதிகம் நிற்கிற நேரம் பார்த்து நாகன் ஒரு ஆடு 'அடிக்கிறது' வழக்கம் 'இண்டைக்குக் கொழும்பார் கனபேர் பயணம் வைச்சிருப்பினம். இறைச்சிக்கும் வலு 'மான'மாக இருக்கும்' என்பதும் அவனுக்குத் தெரியும்.

எங்கேயாவது ஆடு 'அடித்தால்' மட்டுமே ஆச்சி இறைச்சி வாங்குவாள். கடையிலே விற்கிற இறைச்சியைப் பற்றி ஆச்சியிடம் பேசக்கூடாது. அது ஒறுப்பு என்பது மட்டுமல்ல. மாட்டிறைச்சிக் கடை ஊருக்குள் வந்த பிறகு கடையில் இறைச்சி வாங்குவதில்லை என்பதை அவள் கண்டிப்பான விதியாக்கிக் கொண்டாள்.

செந்தில்நாதன் கொழும்பில் 'பெரியதும்' சாப்பிடுகிறவர்தான். கொழும்பிலே உதெல்லாம் பார்த்தால் பட்டினி கிடந்துசாக வேண்டியதுதான் ஏன்? நாய்க்கு ஒரு கொஞ்சம் என்று இங்கையும் எல்லோரும் போய் வாங்கிறவைதான்.'

பங்கு இறைச்சி வாங்க வந்த மகன் நவரத்தினத்தை ஆச்சி பார்த்துவிட்டு வந்திருந்தாள். சும்மா நிற்கிற செந்தில்நாதனை நவரத்தினத்திடம் அனுப்பிக் கனகாலமாக இழுபடுகிற பனங்காணிச் 'சள்'ளையைத் தீர்த்துக் கொள்ள ஆச்சி விரும்பினாள். எப்பவோ தீர்த்திருக்க வேண்டிய விஷயம் இது.

'அவன் நவரத்தினமும் இறைச்சி வாங்க வந்திருந்தான். புள்ளை, நேரமிருந்தால் ஒருக்கா அவனைப் போய்ப் பாத்திட்டு வரச் சொல்லன். எவ்வளவு நாளாத் தான் அந்தக் காணி விஷயத்தை இழுத்தடிச்சுக் கொண்டு போறது?'

செந்தில்நாதன் நவரத்தினத்திடம் போக ஆயத்தமாகி விட்டார்.

'அந்தக் காணியிலை சரி அரைவாசி எங்களுக்கு. அதிலை அவன் ஒரு பிசகும் சொல்லேல்லை. அவள் நெல்லியடியானும் தலையணை மந்திரம் ஓதுக்கிறை வைச்சிருப்பான்... அதைப் புறிக்கிறதிலைதான்... நாங்கள் எப்படியும் முன்துண்டை எடுக்க வேணும். கிழக்கு மேற்கா வேலியைப் போடுவமெண்டு சொல்ல வேணும்.'

நவரத்தினம் தற்பொழுது ஒரு மண்குடிசை கட்டிக் கொண்டு சீவித்து வரும் பனங்காணியின் படம் செந்தில்நாதனின் மனதிற்கு வருகின்றது.

:கிழக்கு மேற்காப் புறிச்சு முன்துண்டை எடுத்தால் 'மெயின் ரோட்' துண்டாயல்



செந்தில்நாதன் காணியைப் பிரிக்க ஒத்துக்கொண்ட முறை

(12-ம் பக்கம் பார்க்க)

அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

பண்டார மந்திராச்சாரியார்
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடப்பிரியன்,
திராவிடர் பழுகாமம்

கே: 'அறிஞர் அண்ணா'வின் கொள்கையைப் பின்பற்றி நான் சென்ற ஆண்டில் கலப்புத் திருமணம் செய்தேன். இதையிட்டு திராவிடர் பழுகாமம் வாழ்கின்ற சாதித் தலைவர்களும் அவர்களின் சகாக்களும் கண்ட மாருதப் பண்ணுகிருர்களே இவர்களைப் பற்றியுள்ள பிணியைப் போக்கும் பரிகாரம்தான் என்ன?

ப: பரிகாரத்தைதான் நீங்கள் ஏற்கனவே செய்துவிட்டீர்களே! அதுதான் கலப்புத் திருமணம்! உங்கள் ஊரின் திருநாமத்தைப் பார்த்தால் சாதிப்பாகுபாடே உங்கள் ஊரில் இருக்கக் கூடாதே.

ஃ

நாரனூர் லிங்கன்,
கம்பளை

கே: காதலுக்குக் கண் இல்லை என்கிருர்களே கண் இல்லாமலா காதலிக்கிருர்கள்?

ப: காதலுக்குக் கண் மட்டுமா இல்லை? காதுமில்லை. காதல் ஏற்படும் போது கண்ணும் காதும் சரியாகத்தான் இருக்கிறது. ஏற்பட்ட பிறகுதான் அவை உண்மையைப் பார்க்கவும் கேட்கவும் மறுக்கின்றன.

ஃ

வி. புவனு,
மீசாலை

கே: கொழும்பிலே ஆண்களின் இரத்தத்தைக் குடிக்கும் ஓர் மர்ம மங்கை (மாயமோகினி) உலாவுகின்ருளாம்! உண்மைதானு?

ப: அப்படித்தான் வதந்தி உலாவுகிறது. கறுப்பாக வாந்தி எடுத்தவன் காக்கையை வாந்தி எடுத்ததாக ஒரு சில மணி நேரத்தில் ஊரில் செய்தி பரவிவிட்டதாம். அவ்வாறு ஆதாரமற்ற வதந்திகளுக்கு உயிர் கொடுத்து உயிர்வாழும் சில பத்திரிகைகள் செய்த சித்து விளையாட்டுதான் இது.

ஃ

.....
காங்கேசன்துறை

கே: நாங்கள் பல வருடக்காதலர்கள்! ஆனுல் சில சந்தர்ப்பங்களில் மனத்தாங்கல் ஏற்பட்டு மனவேதனை அடைகிறோம், ஆகவே எங்களில் யார் விட்டுக் கொடுத்து நடந்தால் மனத்தாங்கல் ஏற்படாதிருக்கும்?

ப: மனத்தாங்கலும், மனவேதனையும் காதலை வளர்க்க அவசியமானவைகளே! இப்பொழுதே இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பழகிக் கொள்ளுங்கள்.

ஃ

'கன்னல்தமிழன்',
பலாங்கொடை

கே: இளம் நெஞ்சங்களிலே காமம் எனும் நஞ்சை ஊட்டும் வண்ணம் ஆபாசப் படங்களைப் பிரசுரிக்கும் வார இதங்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க கலாசார அமைச்சர் முன்வரக் கூடாதா?

ப: பத்திரிகைகளைப் பகைத்துக்கொள்ள எந்த அமைச்சரும் விரும்பமாட்டாரென்பது உங்களுக்குத் தெரியாதா?

ஃ

இ. மகேஸ்வரி,
ஸ்பிரிங்வெலி

கே: தான் படித்து, பட்டம் பெற்றவன் என்று காவம் உடையவனை எப்படி அடக்கலாம்?

ப: நீங்கள் ஒன்றும் அடக்க வேண்டியதில்லை! அவன் வேலையில்லாப் பட்டாளத்துடன் சேர்ந்து வேலை தேடி ஓரிரு வருடங்கள் காரியாலயங்களின் படிகளில் கால் கடுக்க ஏறியிறங்கும் போது கர்வம் எல்லாம் பறந்தோடிப் போய் 'இந்தப் பாழாய்ப் போன பட்டப் படிப்பை ஏன்தான் படித்தேனே' என்று அங்கலாய்க்க ஆரம்பித்துவிடுவான்.

எம். ஏ. ரமீம்,
மாத்தளை

கே: ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர். ஜயவர்தனுவைப் பற்றி சில வரிகள்?

ப: இந்நாட்டில் எல்லாப் பத்திரிகைகளின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஒரே தலைவர்.

கே: தளபதி திரு. உடுகம பதவியிலிருந்து நீக்கப்படுவாரா?

ப: நீக்குவதென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக பேச்சு அடிபடுகிறதெனக் கூறப்படுவதாக ஒரு வதந்தி நிலவுகிறது.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணுர்பண்ணை

கே: ஓர் எழுத்தாளன் எவ்வாறு எப்படிப் பட்டவனாக இருத்தல் வேண்டும்?

ப: பண்பு, பண்பு எனக் கூறிக்கொண்டே வறுமையால் வாடி வதங்கத் தெரிந்தவனாக இருத்தல் வேண்டும்.

சார்பில் நின்று வாதாடுவார்? வங்கிச் சிப்பந்திகள் சங்கத்தின் தொழிற் தகராறு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட போது அவர் வங்கி முதலாளிகள் சார்பில் நின்று வாதாடி வெற்றிபெற்றதே இக் கேள்விக்கு சரியான விடையாகும்.

ஃ

வி. ஜி. சேகரன்,
கொழும்பு-5

கே: ஜனநாயகம் என்பதென்ன? சோஷலிஸம் என்பதென்ன? விஞ்ஞான சோஷலிஸம் என்பதென்ன? ஜனநாயக சோஷலிசமென்பதென்ன? சோஷலிஸ ஜனநாயகமென்பதென்ன?.....

ப: நிறுத்தும்! போதும்! தலை வலிக்கிறது. ஜனநாயகம் என்பது பாராளுமன்ற ஆட்சி முறை என்று சிலர் கூறுகின்றனர். அது ஒரு வாழ்க்கை முறை என்பது என் கருத்து. சோஷலிஸம் என்பதை இதுவரை யாரும் சரிவர விளக்கியதாகத்

ஊர் மக்கள் கேலி செய்வார்கள் என்று யோசிக்கிறேன்?

ப: சற்று பொறுங்கள்! 4வது நபரையும் அவள் காதலிக்கும் வரை உங்களால் பொறுக்க முடியுமானுல் ஊர் மக்களுடன் நீங்களும் சேர்ந்து கொள்வீர்கள்!

ஃ

சி. கனகலிங்கம்,
கொக்குவில்

கே: நீங்கள் நாட்டிற்கு செய்யும் நன்மையையும் தீமையையும் கூற முடியுமா?

ப: உங்களைப் போன்றவர்களின் கேள்விகளைத் தூக்கி குப்பையில் எறியாமல், அவைகளுக்குப் பதிலளிக்கிறேனே, அதுதான் நாட்டுக்கு நான் செய்யும் தீமை நன்மைகளை உடனுக்குடன் மறந்துவிடுவது என் பழக்கம். அவற்றை மீண்டும் நினைவு படுத்தவும் முயற்சி செய்ய மாட்டேன்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை

கே: குயுக்தியாரே, மனிதர்களை விட தாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு அதிக அந்தஸ்து கொடுப்பவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர்கள் நிலப் பிரபுத்துவ மனப்பான்மையுள்ளவர்கள்! முதலாளித்துவ மனப்பான்மையுள்ளவர்களே மனிதன் நாயைவி—உயந்தவனென்று கருதுகின்றனர். சோஷலிஸ மனப்பான்மையுள்ளவர்களோ நாயையும் மனிதனையும் சமமாகக் கருதுகின்றனர்.

ஃ

டி. மகேஸ்வரி,
கண்டி

கே: மந்திரிகளை வெளிநாடுகளுக்கு அனுபவி வைக்கும் நமது அரசாங்கம் ஒரு மந்திரியைச் சந்திரனுக்கு அனுப்பி வைத்தால் என்ன?

ப: ஏன்? சந்திரன் இலங்கைக்கு கடன் உதவி வழங்கத் தயாராக இருக்கிருனு? குறைந்த பட்சம் உணவு பொருட்களையாவது கொடுத்துதவ அவன் தயாரா? தயாரென்ருல் தகவல் தெரிந்து அரசாங்கத்துக்கு அறிவியுங்கள். உடனே ரஷியா விடமோ, அமெரிக்காவிடமோ ஒரு றொக்கட்டைக் கடனுதவியாகப் பெற்று ஒரு உதவி மந்திரியை

யாவது சந்திரனுக்கு அனுப்பி வைப்பார்கள்.

ஃ

டி. சௌந்தரகுமார்'
கம்பளை

கே: இந்தியாவை போல இலங்கையிலும் உணவுப் பஞ்சம் ஏற்படுமா?

ப: மேலைய நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு உதவி செய்ய முன்வந்திருக்கின்றன. அமெரிக்கா போதுமான அளவு மாவு அனுப்பப் போகிறது. எனவே உணவுப் பஞ்சம் ஏற்படாது. இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம் உணவுக்காக வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்பதால் தன் மானத்துக்கு பங்கம் ஏற்படும்என்று அந்நாடு எண்ணியதுதான்.

ஃ

கே. முருகன்,
யாழ்ப்பாணம்

கே: படித்த வாலிபர்களுக்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறதே, என்ன செய்யலாம்?

ப: 'படித்த வேலையில்லாதோர் சங்கங்களை' ஆங்காங்கு அமைத்து நடத்தலாமே.

ஃ

ந. சுகுமார்,
கரவெட்டி

கே: தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை நிரு. பொன்னம்பலம் பெற்றுத் தருவாரா?

ப: அவரால் எப்படி முடியும்? தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைத் தமிழ் பேசும் மக்களதான் மீட்டுக் கொள்ள வேண்டும்.

ஃ

எம். லோகநாதன்,
இராயந்துரைதோட்டம்,

கே: 1970-ம் ஆண்டு நிரு. எஸ் தொண்டமான் அரசாங்கம் விண் வெளிக்கு அனுப்ப போகிறதாமே!

ப: விண் வெளியில் நாடற்றவர்கள் யாருமில்லையே காங்கிரசுக்குச் சந்தாப் பணம் வசூலிக்க!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-13.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டி யனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே சுவனத்திற்கு எடுக்கப்படும்.

காதல் நீடிக்குமா?

'அண்ணல்'

உள்ளத்தில் ஏதோ உறுத்தத் துடிக்கின்றேன்
வெள்ளத்தில் அள்ளுண்ட வேகத்தில் —பள்ளத்தை
நாடிப்பறக்கும் நதியோ இவருள்ளம்
கூடிக் கிடந்தால் குளிர்

மல்லிகையின் மொட்டை மதிபோல் ஒளிமுத்தை
பல்லுக் குவமைப் படங்காட்டி—நில்லாது
எள்ளுப்பூ நாசி இதழ் கோவை என்றெல்லாஞ்
சொல்லிச் சுவைப்பார் அவர்.

கண்டால் பெருங்காதல் கற்கண்டுத் தேன்பேச்சு
வண்டாடுங் கண்கள் வதனமலர்—உண்டாலோ
வேற்று மலர்நாடி வானில் இசைபாய்ச்சிப்
போற்றும் பிறிதோர் இடம்.

தெய்விகம் என்று திரிக்கும் கயிறெல்லாம்
பொய்யாகி வாழ்க்கை பிரளயமாய்—நெய்யாகித்
தீயில் கரையும் தசையுணர்வைக் காதலெனும்
மாயம் அறியா மனம்.

சங்குக் கழுத்து தனச்செம்பு கூந்தல் வகை
பொங்கு முடலின் பூரிப்பு—தங்காத
காதல் தரியாது காற்றோடு பஞ்சிழைகள்
போதல் அறிவி பிறகு.

உள்ளம் பிணைந்தே உயிர்கள் ஒருமைக்குள்
செல்லும் வகையில் தினம் பேசி—கொள்ளையிலே
போன மனங்கள் குதித்துத் திசைமாறி
நாணந் துறக்கும் நவி.

சோடிக்காய் ஒன்றுஞ் சுவைக்குப் பிறிதொன்றும்
நாடிப் பொறுக்கும் நயனங்கள்—வேடிக்கை
ஆடிக் களிக்கும் அளிகள்! இவர் காதல்
நீடிக்கு மாமோ நிலம்.

வி. கருப்பையா,
மாத்தளை

கே: தனிப்பெருந் தலைவர் தொழிலாளர்களின் தனிப்பெருந் தலைவராக மாறிவிட்டதாகக் கேள்விப்பட்டோம். உண்மைதானு?

ப: அவர் ஜன. 8-ல் இடதுசாரிகளின் தொழிலாளர் அணியில் ஏற்பட்ட குழப்ப நிலையைப் பயன் படுத்தப் பாராகிருர். அதனுல் இடதுசாரிகள்தான் பயன் பெறுவர். ஏனெனில் உண்மை அம்பலமாகும்போது அவர் தலைமையிலுள்ள தொழிற் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் இடதுசாரிகளிடமே ஓடிவிடுவார்கள். அவர் மட்டும் எஞ்சி நிற்பார். அவரது தொழிற் சங்க உறுப்பினர்கள் [illegible] உயர்வு கோரி வேலை [illegible] தம் செய்தால், அவர் யாரு

தெரியவில்லை. அது ஒருறப்பர். தனக்கு தேவையான அளவு அதை ஒவ்வொருவரும் இழுத்துக் கொள்கின்றனர். விஞ்ஞான சோஷலிஸமென்பது மார்க்சீயம். ஜனநாயக சோஷலிசமென்பது இடது பக்கம் எருமையையும், வலது பக்கம் காளையையும் பூட்டும் ஒரு வண்டி. சோஷலிச ஜனநாயகமென்பது வலது பக்கம் எருமையையும் இடது பக்கம் காளையையும் பூட்டும் வண்டி.....

ஃ

ராசா,
காங்கேசன்துறை

கே: எனது மாமா மகள் ஏற்கனவே இருவரைக் காதலித்து [illegible] எனக்கும் விருப்பம். ஆனுல்

'மாய ஜோதி' ஊது பத்திகள்
"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?
★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.
நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டத்தை முறியடிக்க முயற்சி

திரு. பண்டா வழியை திரு. ஜீ. ஜீ. பின் பற்றுகிறார்

'தமிழ் மொழிச் சட்ட விதிகளை தமிழினத்தின் நன்மை கருதி நான் ஆதரிக்க வில்லையா? அதேபோல் இந்துப் பல்கலைக் கழகத்திற்கும் நான்முயற்சி யெடுக்கும்போது, தமிழினத்தின்நன்மையைக் கருதி மற்றையோரும் ஆதரிக்கலாமல்லவா? ஆதரிக்காவிட்டாலும், பேசாமலிருந்திருக்கலாமே.'

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

திரு. ஜீ. ஜீ. வெளியிட்டிருக்கும் இக் கருத்து அழ்ந்த சிந்தனைக்குரிய தொன்றாக இல்லாவிட்டாலும் அதைத் தட்டிக் கழித்துவிடுவது இன்றைய சூழ்நிலையில் நல்லதல்ல. தமிழ்பேசும் மக்களுக்கு தனியானதொரு தமிழ்ப்பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கை இன்று நேற்று எழுந்ததல்ல. அல்லது இக்கருத்தை முன் வைத்தவர்கள்அரசியல்வாதிகளுமல்ல. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் உள்ள தமிழ்ப் பேரறிஞர்கள் இக்கருத்தைத் தமிழ் பேசும் மக்கள் முன் வைத்தனர்.

தெய்வீக பலத்தினால்

ஆண், பெண் இருபாலாருக்கும் மனதிலுள்ள விஷயங்களை இரகசியமாய் நிறைவேற்றிக் கொள்ள ஒரு வழி உண்டு.

விபரம் எழுதிக் கேளுங்கள்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர்

பி.எம்.தீசாநாயக்க,

நான்கு கோயில்களின் தர்மகர்த்தா

கம்பளை.

டெலிபோன் : 454

த. பெ. 1281,

கொழும்பு.

இயக்கத்தின் வரலாறு

கலாநிதி ஏ. டபிள்யூ. மயில்வாகனம், கலாநிதி ஆ.சின்னத்தம்பி கலாநிதி கே. குலரத்தினம், கலாநிதி வண. தனிநாயக அடிகள், கே. நேசையா, போன்ற பேராசிரியர்கள், திரு. மாணிக்க இடைக்காடர், திரு. சி. பாலசிங்கம், திரு. சி.சூரியதுமாரன் போன்ற உயர் பதவியில் உள்ள அறிஞர்கள் ஆகியோர் 1956ம் ஆண்டு ஒன்றுகூடி உருவாக்கிய திட்டமே தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கமாகும்.

இந்த இயக்கம் படிப்படியாக வளர்ந்து பல இலட்ச ரூபாய்களை பொதுமக்களிடமிருந்து திரட்டியது. 1959ம் ஆண்டளவில் வட—கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் ஏனைய பொது இயக்கங்களினதும் ஆதரவுடன் திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கான கட்டிடத்தின் ஒரு பகுதி இன்று முற்று பெறும் நிலையை அடைந்து விட்டது. இந்த ஆண்டு முடிவிற்குள் திருமலையில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னோடியாகவே கொழும்பில் 'நாவலர் மண்டபம்' செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. பூரண பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதும் நாவலர்மண்டபம் கலைக்கப்பட்டுவிடும்.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தை அங்கீகரிக்கும் வண்ணம் கடந்த அரசாங்கத்தை முன் கூறிய தமிழறிஞர்கள் பல முறை வற்புறுத்தியிருந்தார்கள். அவர்களுடன் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும்சேர்ந்துமுன்னைய பிரதமர் திருமதி சிறீமாவோவிடம் பலமுறை தூதுசென்றார்கள். இவர்களின கோரிக்கையை ஏற்க திருமதி சிறீமாவோவினதும், திரு. பண்டாரநாயக்காவினதும் வகுப்புவாத அரசாங்கங்கள் மறுத்துவிட்டன.

தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்தை முறியடிக்கும் நோக்கத்துடனேயே பண்டாரநாயக்காஅரசாங்கம் இந்துப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தது. இந்த முயற்சியை இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சகல தமிழ்ப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் ஒரு முகமாக எதிர்த்தனர் இவர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஏதோ இந்துப் பல்கலைக் கழகத்தை உடனேயே ஆரம்பிக்கப் போவதாக முந்திய அரசாங்கங்கள் அறிவித்தன.

பூர்விகம் என்ன?

தமிழ்ப் பல்கலைக் கழகத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் இந்துப் பல்கலைக் கழகத்திற்கு கடந்த அரசாங்கம் நூறு ரூபாவுக்கும் உட்பட்ட ஒரு தொகையை அடையாள மானியமாக ஒதுக்கியது. கடந்த அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு மறைந்த பெரியார் கலாநிதி சு. நடேசபிள்ளையும் ஒத்துழைத்தார். அதன் பயனாக திரு. நடேசபிள்ளைக்குஅன்று மூதவை உறுப்பினர் பதவியும் கிட்டியது.

இது 1956 முதல் 1965 வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள். இவையனைத்தையும் மதிப்புக்குரிய

பூங்குன்றன்

> முழுமை பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகமா அல்லது கலாசார இந்துப் பல்கலைக் கழகமா வேண்டுமென்பதல்ல இன்றைய பிரச்சினை. எப்படியும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதை முறியடிக்க வேண்டுமென்பதே சிலரின் திட்டமாக இருக்கிறது. இதே திட்டத்துடன்தான் மறைந்த பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இந்துப் பல்கலைக் கழகத் திட்டதை முன் வைத்தார். திரு. பண்டாரனின் வழியைப் பின்பற்றி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் இன்று அம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இம் முயற்சியில் திரு. பண்டாரநாயக்காவிற்குக கிடைத்த தோல்வியே திரு. ஜீ. ஜீ. க்கும் ஏற்படும்.

யாழ்ப்பாணப்பிரதிநிதி திரு. ஜீ ஜீ பொன்னம்பலம்அவர்கள் அறிந்திருக்க முடியாது. பாவம், அவர் அறிந்திருக்க நியாயமுமில்லை.

பழம் பெரும் 'பாளிமென்ரேறியனான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்' நாலு ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் துறவறம் பூண்டு மூலையில் முக்காடு போட்டு குந்தியிருந்தவரல்லவா? அவருக்கு இச்சம்பவங்கள் நினைவிருக்கும் என்றோ அல்லது தெரிந்திருக்கும் என்றோ தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்ப்பது தவறாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் பற்றிய பூர்விகத்தையோ அல்லது இந்துப் பல்கலைக் கழகம் பற்றிய பூர்வீகத்தையோ தெரிந்து கொள்ளாத திரு. பொன்னம்பலம் ஏதோ தனது மனதிற் பட்டதையெல்லாம் உளறிக் கொட்ட முற்பட்டிருக்கிறார்.

ஜ. நா. வில்

சேசிய அரசாங்கத்தின் வெளிநாட்டு நடுநிலைக் கொள்கைக்கு முரணான முறையில் கம்யூனிஸ்டுச் சீனாவை வைது பேசினார் திரு. ஜீ ஜீ இதனால், ஐ.நா. சபையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு மாசு கற்பிக்கப்பட்டதுடன், திரு. பொன்னம்பலத்தின் அறியாமையும் அம்பலமாகியது இந்த உண்மையைச் சாதாரண பொது மக்கள் அறியாது இருக்கலாம் ஆனால் உலகம் அறியும். இது பற்றி இலங்கைப் பாராளுமன்றத்திற் கூட கேள்வி எழுப்பப்பட்டது. இதே போன்று இந்துப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றிய பூர்வீகங்களைப் திரு. பொன்னம்பலம் அறியாமல் இருக்கலாம், ஆனால் பொது மக்கள் இவற்றின் உண்மையை அறிந்திருக்கிறார்கள்.

இன்று திரு. ஜீ ஜீ. உரிமை பாராட்டும் இந்துப் பல்கலைக் கழகம் அவரின் திட்டமா? அல்லது தமிழ்ப் பல்கலைக் கழகத்தை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் காலஞ் சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா உருவாக்கிய திட்டமா என்று கேட்கவிரும்புகிறோம்? அதே போன்று தமிழ்ப் பல்கலைக் கழகமும் தமிழரசுக் கட்சியின் திட்டமா?

மாற்றான்பின்கா

அரசாங்க ஊழியராக கனம் மு. திருச்செல்வம் கியூ. சி. கடமையாற்றும் பொழுது தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். இதைத் தவிர தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் தமிழரசுக் கட்சிக்கு நேரடியான தொடர்பு எதுவும் கிடையாது. ஆனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள பேரறிஞர்கள் எல்லாம் ஒன்று பட்டு இந்த இயக்கத்தை உருவாக்கியிருப்பதுடன், அது நீதியானதாகவும், இன்றைய சூழ்நிலையில் அவசியம் தேவையான ஒன்றாகவும், தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தும் ஓர் இயக்கமாகவும்இருப்பதனால் தமிழரசுக் கட்சி அதற்கு தனது ஆதரவைக்கொடுத்து வருகிறது. இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாத திரு ஜீ. ஜீ. யாரோ பெற்ற பிள்ளைக்கு தந்தை முறை கொண்டாட முற்பட்டிருக்கிறார்.

ஊரா வீட்டுப் பிள்ளை மீது உரிமை கொண்டாடும் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அதற்கு சன்மானமும்வேறு கேட்கிறார்.

வாக்களித்தாரா?

தமிழ் மொழி சட்ட விதிகளை தமிழினத்தின் நன்மை கருதி, தான் ஆதரித்ததாகவும் அதற்குப் பிரதிஉபகாரமாக தமிழரசார், இந்துப் பல்கலைக்கழகத் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமாம். முதலில் திரு. ஜீ. ஜீ தமிழ் மொழிச் சட்ட விதிகளை ஆதரித்து வாக்களித்ததாக தனது உள்ளத்தைத் தொட்டுப்பதில் கூறுவாரா என்று கேட்க விளைகிறோம். அந்த உண்மையைச் சுட்டிக் காட்டுவது இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியமற்றதாகத் தோன்றலாம், என்றாலும் திரு. ஜீ ஜீ. யின் சில பச்சை புளுகுகளை அம்பலப் படுத்த சில கசப்பான உண்மைகளை கூற வேண்டியது அவசியமாகிறது.

தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப் படுத்த திரு ஜீ. ஜீ. விரும்புவதாகவும் அதற்குத் தமிழரசார் இடையூறாக நிற்பதாகவும் திரு. பொன்னம்பலம் கதையளக்கிறார். திரு. ஜீ. ஜீ, கூறுவது உண்மையானால் தமிழ்ப்பல்கலைக் கழகமா அல்லது இந்துப் பல்கலைக்கழகமா தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தும் என்று கேட்க விரும்புகிறோம்.

இந்துக்களுக்கு இந்துப் பல்கலைக்கழகம் என்றால், முஸ்லிம்களுக்கு முஸ்லிம் பல்கலைக்கழகம் அதே போன்று கத்தோலிக்கர்களுக்கு கத்தோலிக்கப்பல்கலைக்கழகம். இது திரு. ஜீ ஜீ. கூறும் திட்டம். அப்படியானால் தமிழ்க் கத்

(5-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி

சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது

புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

சி. சின்னத்துரை அன் பிரதர்,

44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பல்கலைக் கழகம்

திருகோணமலையிலேயே நிறுவப்பட வேண்டும்

பேராசிரியர் மயில்வாகனம் உறுதியான கருத்து

'வடக்கினையும், கிழக்கினையும் இணைத்து தமிழ் பேசும் மக்களின் கேந்திர நகராக விளங்கும் திருகோணமலையில்தான் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்பது தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் முடிந்த முடிவாகும். இதில் ஐயத்துக்கோ, பிரச்சினைகளுக்கோ கொஞ்சமும் இடமில்லை. தமிழ் பேசும் மக்களும், திருமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதைத்தான் முழு மனதுடன் வரவேற்கின்றனர். இவ்வாறு தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவர் பேராசிரியர் ஏ. வி. மயில்வாகனம் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் ஆண்டுக் கூட்டம் சென்ற திங்கட்கிழமை நாவலர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு ஏராளமான இயக்க உறுப்பினர்களும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், கல்விமான்களும் வருகை தந்திருந்தார்கள். காலந்தாழ்த்தாது திருகோணமலையிலுள்ள உப்பு வெளியில் பூர்த்தியாக்கப்பட்டு வரும் கட்டடத்தில் விரைந்து மாணவர்களைச் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுமாறும், அகில இலங்கை ரீதிப்படையில் பிரச்சாரம் செய்து அரசாங்க திணைக்களங்களிலும், கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்து பணம் திரட்டும்படியும், கூட்டத்தில் பலர் வற்புறுத்தினர்.

ஒரு அங்கத்தினர் பேசுகையில், தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம், தமிழ் பேசும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் யாவருக்கும் பொதுவான இயக்கமென்றும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் பொறுப்பாளராக விளங்குபவர்கள், மத மாச்சரியங்கள் அற்றவராக விளங்க வேண்டுமெனவும் கூறினார்.

தலைவர் பேராசிரியர் மயில்வாகனம் பேசும்போது கூறியதாவது:-

'நாம் 1956 முதல் 1966 வரை இந்தப் பத்தாண்டு கால இடைவெளியில் மிகக் துரிதமான முறையில் பணியாற்றி வந்திருக்கிறோம். இப்பல்கலைக் கழகத்துக்காக உழைத்து வரும் சகலருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் போவதாகக் கூறப்படுகிறது. எது எப்படியிருந்தாலும், தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் தன் பணியைத் தொடர்ந்து நடாத்தும்.

'தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் முயற்சியில், எவ்வித வேறுபாடுகளுமின்றி ஒன்று படுழைக்க வேண்டுமென தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

'தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் ஒரு பெண்மணி ஒரு லட்சம் ரூபா தருவதாக வாக்களித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் பலர் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தருவதாக வாக்களித்துள்ளனர். தமிழ் பேசும் மக்கள் தங்களாலியன்ற வரையில் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு பொருள் கொடுத்துதவ முன்வர வேண்டும்'

இயக்க நிர்வாகிகள் தேர்தலில் பேராசிரியர் ஏ. வி. மயில்வாகனம் மீண்டும் தலைவராகவும் திரு. பீ. செல்வரத்தினம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். எழுபத்தைந்து பேர் கொண்ட ஆட்சிக் குழுவும் அமைக்கப்பட்டது.



பென்ஷன் எடுத்திட்டியள்... ஒரு கந்தோரிலை தூங்கினமாதிரி வீட்டிலை தூங்கக் கூடாது.

அப்ப நீர் ஒராட்டுல் பாடினால்தான் நான் தூங்காமல் இருக்கலாம்.

தமிழ்ப்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோலிக்கர்களுக்கு வேறாகவும், சிங்களக் கத்தோலிக்கர்களுக்கு வேறாகவும் தனித்தனி இரு பல்கலைக் கழகங்கள் நிறுவப் படுமா? இந்த அடிப்படை உண்மைகளை திரு. ஜி. ஜி. உணர்ந்திருப்பதாகவோ அல்லது விளங்கியிருப்பதாகவோ தெரியவில்லை.

சாதித்தது என்ன?

திரு. ஜீ. ஜீ. இற்றைவரை எதையாவது உருப்படியாகச் சாதித்திருக்கிறாரா? எப்பொழுதும் நல்லகாரியத்திற்குக் குறுக்கே நிற்பதுதான் அவரின் சாதனை.

1. அன்று 50க்கு 50என்று கோரி அறுபதிற்கு நாற்பது என்ற திட்டத்தைஎதிர்த்தார். ஈற்றில் கிடைத்தது என்ன?

2. மூவர்ணக் கொடி தவிர்ந்த வேறு எக்கொடியையும் ஏற்க மாட்டேன் என்று சபதம் பூண்டார். முடிவில் நடந்தது என்ன?

3. வட்டமேசை மாநாடுகூட்டியே திருவேன் என்றார். முடிவில் வட்டமேசை மாநாடு வேண்டாம் என்றார்.

4. 1947 ம்ஆண்டு தேர்தல் முடிவடைந்ததும் தேசிய இடைக்கால அரசுக்கும் சட்ட நிர்ணய சபைக்கும் வாதாடுவோம் என்றார். முடிவில் அதையா நிறைவேற்றினார்?

5. தமிழ் மொழிச் சட்ட விதிகள் தமிழினத்திற்கு ஆபத்தானது என்று கடந்த ஆண்டு கூறினார். இப்பொழுது தமிழினத்தின் நன்மை கருதி அவற்றை ஆதரித்தேன் என்கிறார்.

6. சமஷ்டி அரசியல் முறையையோ அல்லது மாவட்ட சபைத்திட்டத்தையோ முழு மூச்சுடன் எதிர்ப்பேன் என்றார். ஆனால் கடந்த அரியணை உரையில் மாவட்ட சபை அமைக்கப்படும் என்று கூறப்பட்டதை ஆதரித்தார்.

முடிவு

'பழம் பெரும் பாரிமென் ரேறிய ஆனை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்' சாதித்தது என்ன? ஒன்றுமில்லாத ஒன்றை திரு ஜீ. ஜீ. சாதித்திருக்கிறார். அதுதான் சுய நலம். அது அவர் நலம்.

மறைந்த திரு. பண்டாரநாயக்காவால் உருவாக்கப்பட்டு மறைந்த திரு சு நடேசன் தலையில் கட்டியடிக்கப்பட்ட இந்துப் பல்கலைக் கழகத் திட்டத்திற்கு சொந்தம் கொண்டாடும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் இத்திட்டத்தையும் கைவிடும் நாள்அதிக தூரத்தில் இல்லை.

அமைச்சரவை முடிவுகளை அமுலாக்குக

தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு மூன்று திங்களுக்கும் மேலாகி விட்டது. இச்சட்டத்தை அமுல் நடத்த இற்றைவரை தேசிய அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது தெளிவாக்கப்படவில்லை. ஆங்காங்கே சில அரசாங்கஅறிக்கைகள் தமிழ் மொழியிலும் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு தகவல் எதுவும் உருப்படியாகத் தெரியவில்லை.

பழைய அரசாங்க சேவையாளர்கள் சிங்களத்தகைமை பெறத் தேவையில்லை என்ற அமைச்சரவை முடிவும், சிங்களத் தகைமை பெறவில்லை என்பதற்காக கடந்த அரசாங்கத்தால் தடுத்துநிறுத்தி வைக்கப்பட்ட சம்பள உயர்வு மீண்டும் கொடுக்கப்பட வேண்டுமென்ற அமைச்சரவை முடிவும் இப்பொழுது அமுலுக்கு வந்துள்ளன. என்றாலும் சில திணைக்களங்களில் இற்றைவரை பழைய சேவையாளர்களின் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என்று ஒரு செய்தி கூறுகிறது. இதற்கு திறைசேரி காரணமா அல்லது சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் காரணமா என்பது தெளிவாக்கப்படவில்லை.

பழைய அரசாங்க ஆதரவாளர்களை உயர் அதிகாரிகளாகக் கொண்ட பல காரியாலயங்கள் இன்றும் அமைச்சரவை முடிவுகளை எந்தளவு தூரம் பிற்போட முடியுமோ அந்தளவுக்குப் பிற்போட்டு வருகிறார்கள். எதற்கும் திறைசேரி சுற்றுநிருபம் வரவேண்டுமென்று அவர்கள் காரணம் காட்டுகிறார்களாம். அரசாங்கவர்த்தமானியில் ஒரு விடயம் பிரசுரிக்கப் பட்டு விட்டால் சம்பந்தப்பட்ட அவ்விடயத்தை அமுல் நடத்த அதற்கான திறைசேரிச் சுற்றுநிருபத்தை எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை. ஆனால்பழைய அரசாங்க ஆதரவாளர்களான அதிகாரிகள் இந்த நடைமுறையைஇப்பொழுது பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

புதிய சேவையாளர்களுக்கு இப்பொழுது பல சிங்களப் பரீட்சைகள் நடைபெறுகின்றன பாடசாலை மாணவர்களுக்கு நடாத்துவது போன்று மூன்றும் வகுப்பு எட்டாம் வகுப்பு என றெல்லாம் பரீட்சைகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஆனால் அமைச்சரவையோ புதிய ஊழியர்கள் 'வேலை செய்வதற்கான சிங்கள மொழி அறிவு' பெற்று விட்டாற் போதும் என்று முடிவு செய்திருக்கிறது. அப்படியானால் ஒரே பரீட்சையின்மூலம் இத்தகைமையை பரீட்சித்து விடலாம். தேவையற்ற முறையில் பள்ளி மாணவர்களுக்கு பரீட்சை வைப்பது போன்று பரீட்சை நடத்துவது அவசியமற்றது. அமைச்சரவை முடிவுக்கு ஏற்ப இந்த முறை உடன் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

புதிய சேவையாளர்களிலும் குறிக்கப்பட்ட சில தரத்தினருக்கு சிங்களத் தகைமை அவசியமில்லை என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது. இற்றைவரை இந்த முடிவும் நடைமுறைக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சரவை வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அர்த்தமில்லை. அவை அமுல் நடத்தப் படுகின்றனவா என்பதையும்அமைச்சரவை கவனிக்க வேண்டும். அவை அமுல் நடத்தப் படவும் வேண்டும். இல்லாவிட்டால் சாதாரண இளைஞர் மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் அமைச்சரவைமுடிவு செய்வதற்கும் வித்தியாசம் இல்லாமல் அல்லவா போய் விடும்.

இதேபோன்று ஒரு மசோதா சட்டமாக்கப் பட்

(9-ம் பக்கம் பார்க்க)

ஜீ. சீ. ஈ. (சா. த.)

பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பரீட்சார்த்திகளுக்கு ஓர் விசேஷ அறிக்கை!

புது முறை பயிற்சிக் கோவைகள் வினா விடைப் போக்கில் ஒரு ஆசிரியக் குழுவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்றே உங்களுக்குத் தேவையான பிரதிகளை வாங்கி அதன் பலா பலன்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

- 101 கட்டுரைகள் 7-50
- தமிழ் பாஷை 5-00
- எண் கணிதம் 5-00
- குடியியல் 5-00
- சரித்திரம் 5-00
- இஸ்லாம் 5-00
- புவியியல் 5-00
- பொது அறிவும் பொது விவேகமும் 5-00

சர்வகலாசாலை போதனா கழகம்,
(U. T. I.)
540, மருதானை வீதி,
கொழும்பு.
தொலைபேசி:91699.

ஆடவர்களுக்கு மட்டும்....

கல்யாணம் கட்டப்போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.

வைத்தியாச்சாரி

பி. எம். திசாநாயக்க,
தபால் பெட்டி : 1281,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடை தருக

— பாரசீலன் —

என்னுடைய மாணவரே எனக்கு விடை தருக
சின்னதொரு காலம்! அங்கு சென்று
வருகின்றேன்
பின்னொருநாள் உம்முடனே பேசமுடிந்திடலாம்
என்னும் நினைவும் இதயத்தே மின்னுவதால்
இன்னொருகாற் கேட்டேன் எனக்கு விடை தருக.

'ஏலாது' என்றீரா இதிலே பொருத்தமில்லை.
காலம் கனக்கக் கதைத்தோம்: புதிய சுவைப்
பாட்டுக்கள் பாடி மகிழ்ந்தோம்; பலகணக்குப்
போட்டுக் கழித்துப் பெருக்கி விடை கண்டோம்.
நீட்டி வளரும் நெடுங்கணக்கே நம்வாழ்க்கை
கூட்டற் கணக்கில் கூடினோம்; இன்று
பிரித்தற் கணக்கு! பிரிதல் பொருத்தம்.
சிரித்த முகத்துடனே செய்திடுக அக்கணக்கை.

எத்தனைபேர் என்முன் இருந்தார்; படிப்பித்தார்.
அத்தனை பேரும் அகன்றார். இயற்கை அது.
இந்த வழியில் எனையும்நீர் போகவிடீர்
வந்த வழியால் மகிழ்வோடு செல்லுகிறேன்.
தந்த தமிழும் தழைத்து வளரும் எனும்
அந்த நினைவுடனே ஆறுதலாய்ச் செல்லுகிறேன்.

நான்மட்டும் தானே உமைவிட்டுச் செல்லுகிறேன்.
ஆன துணையாக ஆசிரியர் உள்ளாரே

எல்லோரும் உள்ளார்! எனக்கு விடை தருக
ஈரத் தமிழில் இனிமேலும் சொல்லிடலாம்
நேரம் நெடிய தடையை விதிப்பதினால்
நல்ல தமிழில்உமை நான்வணங்கிக் கேட்கின்றேன்
செல்ல விடுவீர் சிரித்து.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

தலவாக்கொல்லை அண்ட்ரசன் புதுக்காடு பணிய கல்பா பிரிவில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த சுமார் 175 தொழிலாளர்கள் 22. 2. 66 தொடக்கம் நடத்தி வந்த வேலை நிறுத்தம் சமரச விசாரணைக்கு விடுவதென்ற முடிவைத் தொடர்ந்து கடந்த 18 ம் திகதி கைவிடப்பட்டது.

வேலைநிறுத்தத்தின் போது அட்டன் உதவி தொழில் ஆணையாளரால் தோட்ட நிர்வாகத்தை பேச்சுவார்த்தைக்கு அழைக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. வெவ்வேறு சம்பந்தமில்லாத காரணங்களைக் காட்டி பேச்சு வார்த்தைக்கு நிர்வாகம் சம்மதிக்கவில்லை.

வேறு வழியின்றி கழகம் தொழில் ஆணையாளருக்கு முறையிட்டதன் பேரில் தோட்டத் துரைமார் சம்மேளனமும் பேச்சு வார்த்தைக்கு சம்மதிக்காததால், கழகம் சமர்ப்பித்த கோரிக்கைகளுள் மூன்றை அட்டன் தொழில் அலுவலகத்தின் கவனத்திற்குவிடுவதென்றும் 6 கோரிக்கைகளை சமரச விசாரணைக்குவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டதன் பேரில் 18 த்திகதிதொடக்கம் தொழிலாளர்கள் வேலைக்குத்திரும்பியுள்ளனர்.

ரிஷி லேகியம்
(கருணைக் கிழங்கு)

மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் சை கண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

டின் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனாம்.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

தமிழ்மறைத் தேர்வு

ஆண்டு தோறும் தமிழ் மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத்தேர்வு இவ்வாண்டு யூலைத்திங்கள் முதற் சனிக்கிழமையன்று (2.7.66) நடைபெறும்.

தேர்வுக்கு தோற்ற விரும்புவோர் 1-5-66 கு முன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 1-1-57 க்குப் பின் பிறந்தவர்கள் தொடக்கப் பிரிவுக்கும்; 1-1-52 க்குப்பின் பிறந்தவர்கள் கீழ்ப் பிரிவுக்கும்; 1-1-46க்குப் பின் பிறந்தவர்கள் மத்திய பிரிவுக்கும் தோற்றலாம். மேற் பிரிவுக்கு வயது கட்டுப்பாடில்லை.

பாடப்பகுதிகள்:

தொடக்கப்பிரிவு திருக்குறளில் முதற் பத்து அதிகாரங்கள்

கீழ்ப்பிரிவு திருக்குறளில் 11-30 அதிகாரங்கள்

மத்திய பிரிவு திருக்குறளில் 31-60 அதிகாரங்கள்

மேற்பிரிவு திருக்குறள் முழுவதும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கமும் இரண்டாம், மூன்றும், நான்காம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் பரிசில்களாக வழங்கப்படும் என்று தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாட்டார் திருவிழா நிர்வாகிகள்

கண்டி கட்டுகலை செல்வனாயகர் ஆலய வசந்த மண்டபத்தில் நாட்டார் திருவிழாப் பேரவைத் தெரிவு திருவாளர். மு. வேல்சாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. சென்ற ஆண்டு வரவு செலவுக் கணக்கு வாசித்து. ஒத்துக் கொள்ளப்பட்டதும் கீழ் கண்ட பேரவைத் தெரிவு நடைபெற்றது.

தலைவர் சொக்கலிங்கம். துணைத்தலைவர்கள்: நா. காந்தி. எ. செய்யது.

செயலாளர்கள்: எஸ். எஸ். நாதன், டீ பி சாமி, குயில் செயராமன்.

பொருளாளர்கள்: செ. சா. நாதன், சி. முருகேசு, அ. அழகர்சாமி.

செயற்குழுத் தலைவர்: வெண் சங்குவேல். செயற்குழுவில் 51 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

மடுவக்கொல்லையில் புதிய தமிழ்ப் பாடசாலை

மடுவக்கொல்லைப் பகுதியில் தமிழ்ப் பிள்ளைகளுக்கான இடநிலைப் பாடசாலையை நிறுவுவதற்காக இலங்கைத் தொழிலாளர் கழகம் முயற்சி எடுத்து வருகிறது. இப்பாடசாலையை நிறுவுவதற்கு கிளா போக் குரூப்பைச் சேர்ந்த மலை தோட்டப் பாடசாலையைத் தந்துதவ, விருப்பம் தெரிவித்ததாக அறிந்து இவ் விருப்பத்தை எழுத்து மூலம் வழங்குமாறு தோட்ட நிர்வாகத்தோடு இ. தொ. கழக பன்விலை மாவட்டப் பிரதிநிதி கடிதத் தொடர்பு கொண்டுள்ளார்.

இவ் விடயத்தை கூடிய சீக்கிரம் முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இ. தொ. கழகப் பொதுச் செயலாளர் திரு. க. சிவானந்த சுந்தரம் தோட்டக் கம்பெனியுடனும் கடிதத் தொடர்பு கொண்டுள்ளார்.

இதற்கிடையில் மலைநாட்டுத் தோட்ட தமிழ்ப் பாடசாலைப் பிரச்சினைகளைக் கவனித்து வரும் கிளிநொச்சிப் பாரதாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களுக்கும் இ. தொ. கழக காப்பாளரும் தமிழ் அரசுக் கட்சித் தலைவருமான திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பா. உ. அவர்களுக்கும் மேற்படி விடயத்தையிட்டுக் கல்வி அமைச்சருடன் நேரடித் தொடர்பு கொள்ளும்படி கழகப் பொதுச் செயலாளர் திரு. க. சிவானந்தசுந்தரம் கடிதம் எழுதியுள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் பா.உ. அவர்களும் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பா. உ. அவர்களும் இது பற்றி கவனித்து வருவதாக அறிவித்துள்ளார்.

சங்கப் பலகை

நிறை நிலா

ஆசிரியர்: இ. நாகராஜன்.

விலை: ரூபா மூன்று.

வெளியீடு: ராதாரமணன்,
யாழ்ப்பாணம்.

மனித குலத்தை நேசிக்கக் கற்றுக்கொண்ட மனிதாபிமான மிக்க ஒரு கலைஞனின் படைப்புகள் எப்படி இருக்குமோ, எப்படி இருக்கவேண்டுமோ-அதற்கு எடுத்துக்காட்டாக 'நிறை நிலா' அமைந்துள்ளது என லாம்.

நீண்ட நாட்களின் பின் ஈழத்து இலக்கிய உலகில் ஒரு நல்ல நூல் வெளியாகியுள்ளது என்ற உணர்வுடன், ஒரு படிக்கத் தகுந்த ஒரு நூலுக்காக நமது நேரத்தை செலவழித்தோம்என்ற மனநிறைவையும் தருகின்றது நிறை நிலா.

கதை என்று புறப்பட்டு கட்டுரையாகமாறும் படைப்புகளையும், தமிழ் என்று கூறி இழிசனர் வழக்காக மாறும் உரை நடைகளையும், கலை என்று கட்சி அறிக்கைகளையும் படித்துவந்த நமக்கு நல்லதொரு கதைக்கோவையை—கலைக்கோவையைத் தந்துள்ளார் நாகராஜன் அவர்கள்.

இவரின் கதைக்கோவையிலே மூன்றுவகைச் சிறப்புகளடங்கியிருக்கின்றன. அவை உருவம்—உள்ளடக்கம்—உரை நடை ஆகியனவாகும். சிறுகதையின் மூலவேர் இம் மூன்றும், இம் மூன்று இயல்புகளையும் சிறப்பாகக் கையாளுபவர்கள் நம்மில் ஒரு சிலரே ஆகும்.

இ. நாகராஜனின் ஒவ்வொரு சிறுகதைகளிலும்உருவம் அழகாக அமைந்து—பட்டை தீட்டப்பட்ட வைர மணிகளாகச் சிறக்கின்றன. இவரது படைப்புகளை வாசிக்கும்போது—ஒருமுறை பிரபல தமிழக விமர்சகர் க.நா.சு—அவர்கள் ந. சிதம்பரசுப்பிரமணியத்தின் கதைகளின் உருவம்பற்றிக் கூறியது இவருக்கும் மிகப் பொருந்தும் என்பது புலனாகின்றது.

'...இவரின் கதைகளிலே உருவம் எப்போதுமே அழகாக அமைந்து விடுகிறது. சிறுகதை எழுதுவதற்கு ஒரு ஆரம்பம், ஒரு நடுவு, ஒரு முடிவு மூன்றும் அமைப்பாக இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று சொல்வது மேலை நாடுகளின் மரபு. இம் மூன்றும் சிதம்பரசுப்பிரமணியத்தின் கதைகளில் நன்கு அமைந்துவிடுகிறது'—

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையிலும் நிறை நிலா வாசகர்களுக்கு ஒரு மகிழ்வையே அளிக்கின்றது எனலாம். இன்று ஈழத்து இலக்கிய உலகிலே சிறுகதையின் 'கரு' வாகஎதையெல்லாமோ கையாண்டு கதை படைக்கின்றார்கள். அதன் காரணத்தினாலேயே சிறுகதை இலக்கியமாகுமா என்ற ஆராய்வின் பரிசோதனைக்களத்தில், சித்திரவதையின் அலறலும், இரணகளத்தின் மொச்சையின் வாடையும் வீசும்நிலையிலே-; வரம்புக்குட்பட்டமைந்த 'கரு' ப பொருளமைதி தோன்ற பல கதைகள் இந்நூலிலே அமைந்துள்ளன எனலாம்.

வாழ்க்கைப் பயணத்தில் துணை'யாக வராத காதலியின் ரயில் பிரயாணத்துக்கு துணையாகும் ஒருவன், ஐந்தாம் தாரத்தை இழந்தபின்பும், கோயில்கொடியேற்றத்திற்காக ஆருவது மணம்புரியும் சுந்தசாமிக் குருக்களின் மாயை வாழ்வும், யாழ்ப்பாண வேலித் தகராறும், அடுத்தவீட்டுத் தம்பதிகளின் உல்லாச வாழ்வு நமக்கில்லையே என ஏங்கும்பெண் உண்மையை உணரும் அழகான தத்துவ நிலையும், புத்தனின் துறவுக் காட்சியும்—ஒவ்வொரு சொல்லோவியங்களாகவும், தத்துவவிசாரணைகளாகவும் விளங்குகின்றன. இதிலுள்ள ஒவ்வொரு கதைகளும் படித்து ரசிக்கவேண்டியவை.

நமதுஇலக்கிய இரசனைக்கு இன்பமூட்டுவதாக கதாசிரியனின் உரைநடை அமைந்துள்ளது. நறுக்குத் தெறித்தாற்போன்ற சொற்சிக்கனம்; அதே வேளையில் ஆற்றொழுக்கான நடை இது கவிஞன் ஒருவன் கதாசிரியனாக மாறும்போது ஏற்படுகின்ற இயற்கைப் பண்பு என்பதன் தத்துவ விளக்கமாகின்றது. அழகான உவமை, உருவகங்களால் கதை நடத்திச் செல்லும் பண்பு ஆசிரியரின் தமிழறிவையும், கற்பனா சக்தியையும் காட்டுகின்றது. நாமும் ஒவ்வொரு உவமைகளுடன் உறவாடி மகிழ்கிறோம். அத்துடன் அவற்றில் தத்துவ விசாரணைகளும் நிரம்பிக்கிடக்கின்றன. பதத்திற்குச் சில.'

'வெட்டிய அப்பிள் துண்டு நெற்றி; பழுத்துச் சற்றுக் காய்வுற்ற தக்காளியின்வண்ணம்.'

'காலம் தனது கூரிய உளியினாற் குடைந்து நாளும் பொழுதும் சதையை வழித்துவிட்ட பிற்பாடு மிஞ்சிக் கிடக்கும் எலும்புக்கூடும் பஞ்சுத்தலையும்.'

'அந்தியின் கிழடு தட்டிய ஒளிதேய்ந்து மறைப் பூமியில் இருள் அழுக்குப் பரவுகிறது.'

'நான்' என்ற பண்டத்தை திறந்து—சத்திர சிகிச்சை செய்து அதனுள் முட்டையிட்டுப் பல்கிப் பெருகியிருக்கும் நாசக் கிருமிகளை வெளிக்கு கொண்டுவந்துவிட்டால், தனிமனிதனைச் சுற்றிச் சுழன்றுவரும் ஆசா பாசத்தின் அடித்தளத்தை இலகுவில் அறிந்துவிடலாம்.'

—இத் தொகுப்பிலுள்ள கதைகள் 1955 விருந்து இன்றுவரை எழுதப்பட்டவையாகும். கடந்த பத்தாண்டுக்காலத்தில் விளைந்த அறுவடையாதலால்—இவரது இலக்கிய வளர்ச்சி—ஈழத்தின் கடந்தபதிதாண்டு இலக்கியப் போக்கின வரலாற்றுச் சாசனமாகவும் விளங்குகிறது. இது இலக்கிய ஆய்வாளருக்கு பெரிதும் பயன்படும் மொத்தத்தில்—

நிறைநிலாவின் பாற் கதிர்கள் ஒவ்வொன்றும் அமுத வர்ஷங்களே.—

—செம்பியன் செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பாலை நிலமாகுமா?

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழு யாழ்ப்பாணக் குடாநாடு அடுத்த 25 வருடங்களில் பாலை நிலமாக மாறக்கூடும் என்று தாம் அஞ்சுவது பற்றி ஆராய இஸ்றேலிய அரசாங்கத்திடமிருந்து ஒரு வல்லுனர் குழுவை அழைத்தது பற்றி ஆராய்ந்தது. அக்குழு 'இப் பிரச்சினை ஆரம்பத்தில் கருதப்பட்டதிலும் மோசமானதென்பதுடன் அரசாங்கம் உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்காதுவிடின் இது பெருமளவினை அடையும்' என்னும் அதிர்ச்சி தரும் முடிவைத் தந்தது.

புவிச்சரிதவியற் பட்டதாரி என்ற முறையிலும் இவ்விடயத்தில் ஆர்வமுடையவனென்ற முறையிலும் இவ்விரு இஸ்றேலிய வல்லுனர்களால் வெளியிடப்பட்ட அதிர்ச்சி தரும் இம் முடிவு கிடைக்கக்கூடிய விஞ்ஞானத் தரவுகளின் அடிப்படையில் நம்ப முடியாததும் மிகைப்படுத்தப்பட்டதுமென்றே நான் தாழ்மையாகக் கூறுவேன். இவ்விரு வல்லுனர்களினதும் சார்பில் அவர்களின் முடிவு அவர்களுக்களிக்கப்பட்ட மேலெழுந்த வாரியான தரவுகளினடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டுமென்றும், நிச்சயமாக யாழ். குடாநாட்டிற்கே உரித்தான நீரியல் நிலைமைகள் பற்றிய விஞ்ஞானத் தரவுகளினடிப்படையில் அமைந்தனவல்ல என்றும் கூறலாம்.

மழை வீழ்ச்சி

பெரும்படியாகக் கூறுமிடத்து மென்மையான மயோசீன் சுண்ணக் கல்லாலான முழு யாழ். குடாநாட்டையும் இலங்கையின் வடமேற்குக் கரையை ஒட்டிய ஒடுங்கிய வலயத்தையும் தவிர்ந்த முழு இலங்கையும் தொல்காலத்தின் கடினமான பளிங்குருப் பாறைகளாலானது என்பதை எல்லாப் புவிச்சரிதவியலாளரும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே குடாநாடு குறிப்பிடத்தக்க ஆழமுடைய பெரும் சுண்ணக் கற்திணிவைக் கொண்டிருப்பதுடன் அதன் மத்திய பகுதிகளில் கடல் மட்டத்தினின்றும் ஆகக் கூடிய உயர்வு ஏறத்தாழ 35 அடியாகவுமே காணப்படுகிறது. குடாநாட்டின் இச் சுண்ணக்கற் படுக்கைகள் பெரும்பாலும் சமாந்தரமாகவே காணப்படுவதுடன், அவை தரைக்கீழ் எதுவித குழப்பமுற்ற அறிகுறிகளைக் காட்டவுமில்லை. யாழ். குடாநாட்டின் புவிச்சரிதவியல் அம்சங்கள் பற்றிய தகவல்கள் டேவிசினாலும், வேலண்டினாலும் எழுதப்பட்டு லண்டன் பவிச்சரிதவியற் சங்கத்தினரின் காலாண்டுச் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையில் தரப்பட்டுள்ளது.

பொதுவாக இலங்கை வருடம் முழுவதும் நன்கு பரப்பப்பட்ட போதிய மழை வீழ்ச்சியைப் பெற்றாலும் தீவின் மிகச் சில பகுதிகளே தரையின் கீழ் வருடம் முழுவதும் வற்றாத நீர் நிரம்பலைக் கொண்டுள்ளன. இப் பற்றாக்குறைக்குப் பிரதான காரணம் பெருமளவினதான தரைக்கீழ் நீரை வைத்திருக்கவோ அல்லது சேமிக்கவோ சாதகமற்ற தீவின் மேற் பரப்பு, தரைக்கீழ்ப் புவிச்சரிதவியலே காரணமாகும். ஏனெனில் இத் தீவின் பெரும் பகுதி புராதன பளிங்குருப் பாறைகளாலான சிக்கலைக் கொண்டிருப்பதால் குறிப்பிடத்தக்க அளவு உருக்குலைந்த அல்லது சிதைவுற்ற பகுதிகள் தவிர்ந்த ஏனைய விடங்கள் நீரை வைத்திருப்பதற்கோ அல்லது செலுத்துவதற்கோ சாதகமற்றவையாகும்.

நீரில் உவர்த்தன்மை

இலங்கையின் முழுப் பகுதியிலும் குறிப்பாகக் குடாநாட்டின் தெற்கே நிலைமை இதுவேயாகும். ஆனால் யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையிலோ அங்குள்ள நீரியல் நிலைமைகள் தீவின் மற்றப் பகுதிகளிலும் வேறுபட்டவை. நுண் துளைகளையுடைய அதிமேல் மண்படையின் கீழ்க் கணிசமான அளவு தடிப்பில்காணப்படும் படையாக்கப்பட்ட சுண்ணக்கல் பெரிதும் நன்னீரை உறிஞ்சிக் கொண்டுள்ளது. ஆகவே இயற்கையாகவே குடாநாட்டின் எப்பகுதியிலும் நிரந்தரமாக நீர் நிரம்பியிருக்கும் சுண்ணக்கல் மண்படையின் கீழ் ஒரு சில அடிகள் தோண்டப்படும் போது கிணறுகள் உருவாகின்றன. குடாநாட்டின் ஆகக்கூடிய உயரம் 35 அடியே ஆதலால்வெவ்வேறு பகுதிகளில் தோண்டப்படும் கிணறுகளும் வேறுபட்ட ஆழங்களில் உள்ளன. இதனால் இயற்கையாகவே கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் கிணறுகள் உட்பகுதிகளிலுள்ளவற்றிலும் ஆழம் குறைந்தனவாகவுள்ளன. குடாநாட்டின் உட்பகுதிகளில் நிரம்பிய நிலையில் காணப்படும் மயோசின் சுண்ணக் கல்லின் மேற்படை பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து அதிகம் உயர்வாகவே காணப்படுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

கடற்கரை வலயங்களிலும் குடாநாட்டுக்கு அப்பாலுள்ள தீவுகளிலுமுள்ள கிணறுகளைப் பொறுத்தமட்டில் ஒரு புதுக் காரணி உருவெடுக்கிறது. இங்கு நிரந்தரமாக நீரை உறிஞ்சிவைத்திருக்கும் சுண்ணக்கற் படுக்கையின் கீழ்ப்படைகள் கடல் மட்டத்தின் கீழ்க் காணப்படுவதால் அவை இயற்கையாகவே அடித்துக் காணப்படும் கடலிலிருந்து உப்பு நீரூட்டப்பட்டுள்ளன. இதனால் இக்கடற்கரை வலயம் நெடுகிலும் கிணறுகள் தோண்டப்படக்கூடிய ஆழமும் இக் கிணறுகளிலிருந்து நன்னீரைப் பெறக் கூடிய அளவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஆழமற்ற இக்கடற்கரை யோரக் கிணறுகளிடையேயும், பெயர்பெற்ற 'தளமற்ற' புத்தூர்க் கிணற்றைப்போல் கிணற்றின் ஆழம் கடல் மட்டத்தினின்றும் அதிகம். ஒரு சில உட்பிரதேசக் கிணறுகளிடையேயும் மாத்திரமே உப்பு அல்லது உவர் நீர்ப் பிரச்சினை தோன்றும். ஆனால் கடல் மட்டத்திற்கு மேல் தம்கீழ்ப் படைகளைக் கொண்ட மற்றெல்லாக் கிணறுகளினதும் நீர் ஒரு நாளில் எத்தனை முறை இறைக்கப்பட்டாலுங் கூட அவற்றில் உப்பு அல்லது உவர்த் தன்மை ஒரு பொழுதும் எழமாட்டாது.

படவிளக்கம்

மேற் கூறப்பட்ட நீரியல் உண்மைகள் இதனுடனிணைந்திருக்கும் யாழ். குடாநாட்டின் விளக்கப்பட வெட்டு முகத்தில் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. அதில் மேற் பரப்பில் ஒரு நன்னீர்ப் படையையும் அதன் கீழ் உப்பு நீர்ப் படையையும் கொண்ட ஒரு கடற்கரைக் கிணறும் (கி1) உட்பிரதேசத்தில் நன்னீர்ப் படையொன்றை மாத்திரமே அதன் அடிவரை கொண்ட கிணறொன்றும் (கி2) உட்பிரதேசத்தில் கடற்கரைக் கிணறு போலவே நன்னீர்ப் படையொன்றை மேலும் உப்பு உவர் நீர்ப் படையை ஆனால் விளக்கப் படம் காட்டுவதைப் போலவே அதிக தடிப்பில் கீழும் கொண்ட 'தளமற்ற' புத்தூர்க் கிணறும் (கி3) காட்டப்பட்டுள்ளன.

இங்கு கிணற்றின் கீழ்ப்படை சராசரிக் கடல்மட்டக் கோடு இஆ' உவிலும் மேலே காணப்படுகின்றது. கீழ்ப்படை இக்கோட்டின் கீழ் செல்லுமெனக் கொண்டால் உவர்த்தன்மையினளவு கடற்கரையிலிருந்து கிணறுகளின் தூரம் அதிகரிப்பதற்கேற்பக்குறைந்து செல்கிறது என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

கி3:—பெயர்பெற்ற புத்தூர் நிலாவரைக் கிணறு மாகக் காணப்படும் கி2 வகைக் கிணறுகளைத் தொடர்பான இறைத்தலையும் தரைகீழ் நீர்வனத்தில் அவற்றின் விளைவுகளையும் நோக்கி எமது கவனத்தைத் திருப்புவோம்.

நிபுணர்கள் காட்டிய காரணம்

இப்பெரு வெளியேற்றம் சந்தேகமில்லாது தரைக்கீழ் நன்னீர்வனத்தில் தற்காலிகத்தைக் கொண்டிருக்குமெனினும் அடுத்த 10 அல்லது 25 வருடங்களில் இது ஒரு பாலை நிலமாக மாறும் எனக் கூறுவது எனது தாழ்மையான அபிப்பிராயத்தில் கறையான் புற்றிலிருந்து மலை ஆகியது என்பதிலும் குறைந்ததன்று. உண்மையில் குடாநாட்டின் தனித்தன்மை வாய்ந்த நீரியல் அமைப்புக்கள் பற்றிய விஞ்ஞானத் தரவுகளின்றியே இவ்விரு இஸ்றேலிய வல்லுனர்களும் இந்த அவசரமான முடிவிற்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் ஐக்கிய அமெரிக்க நாட்டில் மெக்சிக்கோவிலும் அல்லது அவுஸ்திரேலியாவில் நியூசவுத் வேல்சிலும் காணப்படுவதைப்போன்று உலகின் மற்றப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படுவதைப் போலவே யாழ். குடாநாட்டின் கிணறுகளும் ஆட்டீசியன் வகையைச் சேர்ந்தவையெனக் கொண்டனரெனலாம்.

ஆனால் எதிர்மாறாக யாழ்ப்பாணக் கிணறுகள் தன்மையில் ஒருபொழுதும் ஆட்டீசியனாகவல்லாது மிகவும் தனித்தன்மை வாய்ந்த தரைக்கீழ்ச் சேமிப்பு வகையாகவேயுள்ளது. இப்பொழுது யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழு இரு இஸ்றேலிய வல்லுனர்கள் முன்வைத்த மூன்று பிரதான வாதங்களில் நம் கவனத்தைச் செலுத்துவோம். அதாவது (1) மழைநீரைச் சேகரிப்பதற்கு ஏராளமான முன்னாள் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட ஆழமான தாழிகள் அல்லது குளங்கள்

(14-ம் பக்கம் பார்க்க)

கிணற்றுநீரின் தோற்றத்தைக் காட்டும் யாழ். குடாநாட்டின் விளக்கப்பட வெட்டுமுகம்.



1. மேற்பரப்பு மண்ணின் உருக்குலைந்தும் சிதைந்துமுள்ள நுண் துளைப்படை (அ ஆ' ஆ)
2. ஈரலிப்பான நிலையிலுள்ள தரைக்கீழ் மயோசின் சுண்ணக்கற்படை. இப்படை (ஆ ஆ'இ) கடல் மட்டக் கோடு இஆ'உ விற்கு மேல் காணப்படும்.
3. முன்னையது போன்று அதே சுண்ணக் கல்லின் கீழ்ப்படை. ஆனால் கடல் மட்டக் கோட்டின் கீழ் உள்ளது.

மு. கு:- ஈரலிப்பான அ அ' சுண்ணக்கற் படையின் மேற் பகுதியிலிருந்து கீழே செல்லச் செல்லத் தரைக்கீழ்ச் சுண்ணக்கற் படுக்கைகளில் காணப்படும் ஈரலிப்பின் அளவும் தொகையும் ஆழத்தின் விகிதாசாரத்திற் கேற்பத் தொடர்ந்து அதிகரிக்கும் என்பதை இங்கு விளக்கிக்கொள்ளல் அவசியமாகும்.

சி. பி. வைரமுத்து

கி1— மேற்பரப்பில் ஆழமற்ற ஒரு நன்னீர்ப் படையையும் அதனைத் தொடர்ந்து கீழே மற்றொரு உப்பு/உவர் நீர்ப் படையையும் கொண்ட ஒரு கிணறாகும். கடற்கரைக் கண்மையிலுள்ள எல்லாக் கிணறுகளிலும் இக்கீழ்ப் படை நீரின் உப்புத்தன்மை அதிகமாகவேயிருக்கும். ஆனால் உவர்த்தன்மையின் அளவு கடற்கரையிலிருந்து இக்கிணறுகளின் தூரம் அதிகரிக்கும் விகிதத்திற்கேற்பக் குறைந்து செல்கிறது.

கி2— மேற்பரப்பில் நன்னீர்ப் படையையும் அதனைத் தொடர்ந்து கீழே மேற்பொதுவான உள்நாட்டுக் கிணறாகும். இது கொண்டுள்ளது. நீரியற்காரணிகளினடிப்படையிலானதெனது கருத்துப்படி சந்தேகமில்லாது காணப்படும் இத்தகைய ஒரு தரைக்கீழ்க் குகைப் பாதையே (1) தொடர்ச்சியாக நீர் இறைக்கப்பட்டபோதும் இக் கிணற்று நீர் மட்டம் பெரிதும் மாறாதிருப்பதையும் (2) தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு நீர் வெளியேற்றப்பட்டால் உப்பு/உவர் நீர் வெளிவருகுதலையும் விளக்கும். இவ்விரண்டாவது காரணி நிச்சயமாக மேல் நன்னீர்ப்படை படிப்படியாகத் தொடர்ந்து பயன்படுத்தப்படும்போது தரைகீழ்க் குகைப்பாதை வழியாகக் கிணற்றுள் சிறிது சிறிதாக மேலெழும் கடல்நீர் காரணமாகவேயிருக்க வேண்டும்.

இப்பொழுது மற்றைய இருவகைக் கிணறுகளை நன்றாகச் சேர்த்ததிலும் அதிகம். இதனைத் தரைக்கீழ்க் குகைப் பாதை தொடுக்குமிடம்வரை மிக ஆழமான ஒரு நன்னீர்ப் படையை

> யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடும் என்ற பயம் அர்த்தமற்றது. குடாநாட்டின் தனித்தன்மை வாய்ந்த நீரியல் அமைப்புக்கள் பற்றிய விஞ்ஞான ஆய்வு இல்லாதோரே இப்படிப் பயங்காட்டி வருகிறார்கள். இஸ்ரேலிய வல்லுனர்கள் இதுபற்றி அவசர முடிபுக்கு வந்திருந்தனர் என்பது தெளிவு. உலகின் ஏனைய பகுதிகளிற் காணப்படுவதுபோல் யாழ்ப்பாண நீரியல் அமைப்பும் இருப்பதாக இவர்கள் கணக்குப் போட்டு விட்டார்கள் எனலாம் என்கிறார் இலங்கைப் புவிச்சரியவியற் பட்டதாரியான இக் கட்டுரையாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1966 ஏப்ரல் மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

தமிழுக்கெனத் தனிப் பிரிவு

அரசகருமமொழித் திணைக்களத்தில் தமிழ்மொழிக்கென தனியாக ஒரு பகுதியை நிறுவவேண்டுமென்று தமிழரசுக்கட்சி செய்துவந்த கிளர்ச்சி வெற்றிபெற்றுள்ளது.

தமிழ்மொழி விசேட சட்டவிதிகளை அமுல்நடத்துவதற்காக இத்தகைய ஒரு தனிப்பிரிவு அவசியமென்பதைத் தமிழரசுத தந்தை திரு. செல்வநாயகம் தலைமையிற் தமிழரசுப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஒரு கோஷ்டி நீதி அமைச்சரிடம் வற்புறுத்தியதை யொட்டி தமிழ்பிரிவை நிறுவ அமைச்சர் இணங்கியுள்ளார். இத் தமிழ்பிரிவு ஒரு தமிழ் உதவி ஆணையாளர் தலைமையில் இயங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசகருமமொழித் திணைக்களம் கூட்டாட்சி காலத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை அமுல்நடத்துவதற்காக எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகள் அரசாங்கத் திணைக்களங்களில் எத்தகைய ஒரு குழப்ப நிலையை தோற்றுவித்தது என்பது அனைவரும் அறிந்த விசயமே. இத்திணைக்களம் கண்மூடித்தனமாக அரசாங்க அலுவல்களில் சிங்கள அமுலைத் திணித்ததால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டதுடன், தமிழ்பேசும் ஊழியர்கள் அன்று பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அரசகருமமொழித் திணைக்களத்தின் தமிழ்ப்பகுதி தீவிர சிங்கள அமுலில் ஈடுபட்டிருந்த ஓர் ஆணையாளரின் தலையில் சிறந்தமுறையில் பணியாற்ற இயலாதிருந்தது விமப்பன்று தமிழ்மொழிக்கோ, அரசாங்க அலுவல்களில் தமிழ் மொழியின் உபயோகத்துக்கோ இத்திணைக்களத்தில் பணியாற்றிய தமிழ் அதிகாரிகள் ஆக்கபூர்வமான சேவையைச் செய்ததாகக் கூறிவிடமுடியாது அத்துறையில் அவர்களுக்குப் போதிய அறிவோ திறமையோ இல்லாதிருந்தது காரணமாயிருக்கலாம்.

இத்திணைக்களத்தில் கடந்தகாலத்தில் நூல்கள் சில தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகவும், அச்சுவாகனமேற்றப்படாது அப் பிரதிகள் சிலகாலம் மூலையில் கிடந்ததாகவும், பின்னர் அவை எப்படியோ மறைந்துவிட்டதாகவும் முன்பு கூறப்பட்டது. இப்பகுதி எவ்வாறு செயலாற்றுகிறதென்பதற்கு இது ஓர் உதாரணம். முக்கியமான நூல்களை மொழிபெயர்ப்பதில் அவர்கள் அக்கறை காட்டவில்லை என்பது கண்கூடு. இதுபற்றி தமிழறிஞர்களும், கல்விமான்களும் செய்த புகார்களையும் அவர்கள் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

மொழித்திணைக்களத்தால் தமிழ் கலைச்சொற்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இச் சொற்களில மாற்றங்கள் செய்யக் கூடாதென்ற தமிழரசுக் கோரிக்கையை நீதி அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையேஅரசகருமமொழித்திணைக்களத்திலுள்ள சில நபர்கள் சிங்கள தீவிரவாதிகள் சிலருடன் சேர்ந்து நாசவேலை செய்யத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சில தமிழ் கலைச்சொற்களுக்குச் சிங்களத்தில் உபயோகப்படுத்தும் வடமொழிச் சொற்களைக்கொண்டு திருத்தம் செய்கின்றனராம். இது தமிழ்மொழியின் தூய்மையைக் கெடுப்பதற்காக வேண்டுமென்றே செய்யப்படும் விசமத்தனம் என்பதில் ஐயமில்லை.

கலைச்சொல் பட்டியலில் காணப்படும் ஒரு சொற்றொடர்தான் 'இலங்கை மத்திய வங்கி' என்பது. இதனைப் புறக்கணித்துவிட்டு, சிங்களப் பெயரான 'ஸ்ரீலங்கா மகா வங்கி' என்ற சொற்களைத் தமிழிலும் உபயோகிக்க வேண்டுமென்று பிடிவாதம் காட்டுகின்றனர் வங்கி நிர்வாகிகளும் அரசகருமமொழித் திணைக்களத்தின் அதிகாரிகளும். இது தமிழ் சொற்களைச் சிங்கள மயமாக்கும் முயற்சி. அரசாங்கத்தின் கொள்கைக்கு இத்தகைய முயற்சி மாறானது என்பதை அறிந்தும், அதனை அமுல் நடத்தவே முயற்சி செய்கின்றனர். இத்தகைய முயற்சிகளை முறியடிக்க மத்திய வங்கி தமிழ் ஊழியர்கள் ஒரு போராட்டத்தையே நடத்துகின்றனர். நமக்கு வேண்டியது தூய தமிழ் சொற்களேயன்றி, சிங்களத்—தமிழ் சொற்களல்ல.

அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழுக்கெனத் தனியாக ஒரு பிரிவு இயங்குமாயின், இந்த நாசவேலைகளையும், ஒழுங்கீனங்களையும் முறியடித்துவிடலாம். இத்தகைய ஒரு பிரிவு இல்லாத காரணத்தால் மத்தியவங்கியின் தமிழ் பகுதி வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வங்கியின் நாணய விதி அதிகாரச் சட்டம், வங்கியின் வழிகாட்டி முதலியன இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படாதிருப்பது ஒரு புறமிருக்க, வங்கியின் 1964ம் வருட நிர்வாக அறிக்கை கூட இன்னும் தமிழில் வெளிவரவில்லை. இதிலிருந்து தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் எவ்வளவு தூரம் ஸ்தம்பித்துள்ளது என்பது தெளிவு.

இந்த ஒழுங்கீனங்களைத் தவிர்த்து, மத்தியவங்கி உட்பட இதர அரசாங்கத் திணைக்களங்களிலும் தமிழ்மொழிச் சட்ட விதிகளை சரிவர அமுல்நடத்த வேண்டுமானால், அதற்கென அரசகருமமொழித் திணைக்களத்தில் தனிப்பிரிவு இருக்க வேண்டியது அவசியமாகும்.

உத்தியோக மொழித் திணைக்களத்தின் ஆணையாளர் தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கத் திணைக்களங்களுக்கு எவ்வாறு வழிகாட்டி வந்தாரோ, சிங்கள அமுல் எவ்வளவுதூரம் முன்னேறியுள்ளது என்பதை எவ்வாறு கவனித்துவந்தாரோ, அதேமாதிரி, தமிழ்மொழி விசேட சட்டவிதிகளை அமுல் நடத்துவதற்கு வழிகாட்டும் அதிகாரத்தையும், தமிழ்மொழி அமுல் எவ்வளவுதூரம் முன்னேறியுள்ளது என்பதை அடிக்கடி ஆராய்ந்து பார்க்கும் அதிகாரத்தையும் உத்தியோகமொழித் திணைக்களத்தில் நிறுவப்படவிருக்கும் தமிழ் பிரிவின் தமிழ் ஆணையாளருக்கு வழங்கப்படவேண்டும். சுருங்கக்கூறின், சிங்களமொழி அமுலைப் பொறுத்தவரையில் திணைக்கள ஆணையாளர் எந்தஅதிகாரங்களைப் பெற்றிருக்கிறாரோ, அதே அதிகாரங்களைத் தமிழ்மொழி அமுலைப் பொறுத்தவரையில் தமிழ் பிரிவின் ஆணையாளர் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ்மொழி சட்டவிதிகளைச் சரிவர அமுல் நடத்துவதற்கு இந்த ஏற்பாடுகள் மிகவும் அவசியமாகும்.

தமிழ்பேசும் மக்கள் கட்டுப்பாடாகத் தமிழரசுத் தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு நின்றதின் விளைவாகவே தமிழ் மொழி விசேட சட்ட விதிகளை பெறமுடிந்தது. அடுத்துள்ள பெரும்பணி இச்சட்ட விதிகளைச் சரிவர அமுல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுதான் அதற்கான முதற்படியாகவே அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழ் பிரிவு நிறுவப்படவிருக்கிறது. தனிப்பிரிவு நிறுவப்பட்டால்மட்டும் போதாது அப்பிரிவில் கடமையாற்றுவதற்காகத் தமிழார்வம் கொண்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும் தமிழ்ப் பிரிவுக்குத் தலைமை தாங்குவதற்காக (உதவி ஆணையாளர்) சரியான ஒரு நபரைக் கண்டு பிடிப்பது மிக மிக முக்கியமாகும். தமிழ் பேசும் மக்களும், அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும் தமிழரசுக் கட்சியும் இவ்விடயத்தில் விழிப்புடனிருந்து தமிழ் மொழிச் சட்ட விதிகளை விரைவில் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென வற்புறுத்துகின்றோம்.

தமிழ்த் தொழிலாளர் ஒற்றுமைக்கு வேட்டு

முதலாளிகளின் பாதுகாவலர் தொழிலாளர் இரட்சகரா?

தொழிற் சங்கங்களை அரசியலுக்குப் பயன்படுத்துவதை எப்போதுமே நான் எதிர்க்கிறேன்', என்று கடந்த இரு மாதங்களுக்குமுன்னர் பாராளுமன்றத்தில் கூறிய யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இப்பொழுது 71 தொழிலாளர்களுடன் 17 தொழிற் சங்கங்களைக் கொண்ட ஒரு தொழிற் சங்க சம்மேளனத்தை உருவாக்கியுள்ளார். இச் சம்மேளனத்தின் தலைவராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

எல்லோரும் பொன் பூண என் மகளோ பார்த்திருக்க, வாடி மகளே! உன் தலையில் வறையோட்டைக் கவிழ்த்து விடுகிறேன்' என்பது நாட்டு மொழி. தமிழரசுக் கட்சியினரும் ஏனையவர்களும் தொழிற் சங்கங்களை வைத்திருக்கும் பொழுது நான் மட்டும் சும்மா இருப்பதா என்ற ஆவேசத்துடன திரு. ஜீ. ஜீ. அவர்களும் 17 தொழிற் சங்கங்களையும் (பெயரளவில்) அவற்றிற்கான ஒரு சம்மேளனத்தையும் அமைத்திருக்கிறார்.

முதலாளிகளின் பாதுகாவலர்

இலங்கை ஒரு சனநாயக நாடு. இங்கு எவருக்கும் தொழிற்சங்கத்தை அமைக்க உரிமையுண்டு. அதற்காக தொழிற் சங்கக் கோட்பாடுகளை உணராதவர்கள், ஆண்டாண்டு காலமாக முதலாளிகளின் உரிமைகளுக்குப் பாதுகாவலர்களாக இருந்தவர்கள் தொழிற் சங்கம் அமைப்பதா?

அகில இலங்கை ரீதியில் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டார்கள், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர். இப் பிரச்சினை நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப் பட்டது. அப்பொழுது முதலாளிகள் சார்பில தோன்றி வாதிட்ட முதல் நியாயவதி சாட்சாத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களே. இதே போன்று பல சந்தர்ப்பங்களில் திரு ஜீ. ஜீ. தொழிலாளர்களின் நலன்களுக்கு மாறான நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு பற்றி இருக்கிறார்.

போட்டி மனப்பான்மை

வர்த்தக மீன் பிடி அமைச்சராக இருந்த காலத்தில் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் தொழிலாளர்களின் நலன்களுக்கு விராதமான முறையில் எத்தனை நடவடிக்கைகளை எடுத்தார் என்பதை இந்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் மறந்திருக்க முடியாது. ஏன் பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு இக்காலத்தில் உலைவைத்த பெருமையில் திரு. ஜீ. ஜீ. அவர்களுக்கும் பங்கு உண்டல்லவா?

கடந்த பொதுத் தேர்தலின் போது பொ. கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஒருவர், இப்பொழுது இ. போ. சபையில் உயர் பதவி ஒன்றில் இருந்து கொண்டு பஸ் தொழிலாளர்களுக்கு இழைத்து வரும் இடர்ப்பாட்டை பஸ் தொழிலாளர்கள் அறிவர்.

இத்தகைய குணாதிசயங்களைக் கொண்ட 'மாகனம் பொருந்திய' திரு ஜி. ஜி. அவர்கள்தான் இப்பொழுது 17 தொழிற் சங்கங்களை 71 தொழிலாளர்களுடன் உருவாக்கியிருக்கிறார் தொழிலாளர்களின் உரிமைகளின் பாதுகாவலனாக. திரு. பொன்னம்பலம் என்று மாறினாரோ யாம் அறியோம்! ஆனால் இன்று பெயரளவில் உருவாக்கப்பட்டிருக்கும் தொழிற் சங்கங்களும், சம்மேளனமும் போட்டி மனப்பான்மையுடன், தமிழ் தொழிலாளர்களைக்கூறு போட்டு சக்தியற்றவர்களாக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே உருவாக்கப்பட்டதென்பதை மறுக்க முடியுமா?

திரு. ஜி. ஜீ. அவர்களின் எந்த அரசியல் நடவடிக்கையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியில் தலை காட்டியது கிடையாது. இப்பொழுது தொழிற்சங்க அமைப்பும் அப்படியே. தமிழ்த் தொழிலாளர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும் வாழவில்லை. மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். இலங்கையிலேயே மிகக் கூடுதலான தொழிலாளர்கள் அதுவும் பச்சைத் தமிழ்த் தொழிலாளர்கள் மலைநாட்டிற்றான் வாழ்கிறார்கள். எனவே திரு. பொன்னம்பலம் மலைநாட்டிலும் தொழிற் சங்கம் அமைக்க முற்படுவாரா?

மலைநாட்டுத் தொழிலாளர்களைக் கொண்டதொழிற் சங்கம்ஒன்றில்லாத சம்மேளனம் என்றுமே முழுமைபெற முடியாது. இதைத் திரு. பொன்னம்பலம் உணராது இருக்கலாம். ஆனால் தமிழ்த் தொழிலாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

திரு. ஜீ. ஜீ. என்றுமே மலைநாட்டில் அடியெடுத்து வைக்க முடியாது. அவர் அடியெடுத்து வைக்கப் போவதும் இல்லை. இந்த நிலையில் 71 தொழிலாளர்களுடன் இன்று அவர் அமைத்திருக்கும் தொழிற் சங்க சம்மேளனம் முழுமை பெற்ற ஒன்றாகிவிட்டதா?

ஐக்கியம் குலைந்தது யாரால்?

திரு. ஜீ. ஜீ அவர்களுக்கும் அவரதுக்கு 'தொழிற் சங்கத் தலைவர்களுக்கும்' தொழிற் சங்கத் துறையில் உள்ள அறிவுச் குன்றியத்தைக் காட்ட நல்ல ஒரு உதாரணமாக அவரது சம்மேளனமே அமைந்திருக்கிறது. தனியார் துறைத் தொழிற் சங்கமும், பொதுத் துறைத் தொழிற் சங்கமும் என்றுமே ஒரு சம்மேளனத்தில் இணையமுடியாது அப்படி இணைவது தொழிற் சங்க சம்பிரதாயத்திற்கு முரணானது. இந்நாட்டு சட்ட முறைகளும் அதற்கு இடங்கொடுக்காது. இந்த உண்மையைச் 'சட்டமேதை, தொழிலாளர் இரட்சகன்' திரு. ஜீ. ஜீ. அவர்களால் அறிய முடியவில்லை. 'தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்குச்சேதம்' என்பது திரு ஜீ. ஜீ. மாட்டில் இன்று உண்மையாகி விட்டது.

ஐ. நா. சபை சென்றுஎதிர் முகாமில் நிற்கும் பெரிய வல்லரசுகளை ஒன்று படுத்தி பெரிய சாதனையை உலக அரங்கில் நிலைநாட்டிய திரு. பொன்னம்பலம் (இது அவர் கூறியது) இலங்கைத் தமிழர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை என்று கவல்வதாக அண்மைக்காலக் கூட்டங்களில் கூறியிருக்கிறார். தமிழர் ஐக்கிய முன்னணி பற்றிப் பேசுவதும் அதைப் பின்னர் உடைத்தெறிவதும் திரு. ஜீ ஜீ. யின் கடந்த கால உயிர் இலட்சியம். உண்மையில் திரு. ஜீ. ஜீ. தமிழர்களின் ஒற்றுமையை விரும்பியிருந்தால் 71 தொழிலாளர்களுடன் 17 தொழிற் சங்கங்கள் நிறுவியிருப்பாரா?

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலைத் துறைமுக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது அரசாங்க அலுவலகம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

★ மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையோரமாக மட்டக்களப்பிலிருந்து சம்மாந்துறைக்கு பிரதான வீதிகள் திறக்கபபட வேண்டும். இது மேற்குக் கரையோரத்தை அபிவிருத்தி செய்வதற்கு மிகவும் முக்கியமானது. இப்பிரதான பாதை திறக்கப்பட்டபின்பு இப் பகுதியில் பஸ் சேவை ஆரம்பிக்க முடியும். கிழக்கு மாகாணத்தின் போக்குவரத்துக் கஷ்டங்கள் இதனால் பெருமளவு குறையும்.

★ மட்டக்களப்பு வாவியின் கிழக்கு பகுதியையும் மேற்குப் பகுதியையும் இணைப்பதற்காக, பாலங்களும், தாம்போதிகளும் தகுதி வாய்ந்த இடங்களில் நிறுவப்பட வேண்டும். இப்பாலங்களையும் தாம்போதிகளையும் மண் முனைத்துறை வலையறவு கிட்டங்கி வெருகல் பனிச்சங்கேணி ஆகிய இடங்களில் நிறுவலாம்.

★ சுப்ரீம்கோர்ட் நீதியரசருக்கென இல்லங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இல்லாமையால், வழக்கு விசாரணைகளுக்கு மக்கள் கண்டி, திருகோணமலை, பதுளை ஆகிய இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்தக் கஷ்டங்களைப் போக்குவதற்காக, சுப்ரீம்கோட் நீதியரசரின் இல்லங்கள் நிறுவப்பட வேண்டும்.

★ வாழைச்சேனை, கல்லாறு, கறுகம்பை ஆகிய இடங்களில் மீன்பிடித்துறை முகங்கள் நிறுவப்பட வேண்டும்.

★ கல்லோயாவிலிருந்து கிராமங்களுக் கூடாக விவியோகம் செய்யப்படும் மின்சாரம் எல்லாக் கிராமங்கட்கும் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

★ தந்திப் போக்குவரத்து தொலைபேசி நிலையம் ஒன்று மட்டக்களப்பில் நிறுவப்பட வேண்டும்.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் பல குளங்கள் திருத்தப்படாது பாழடைந்து கிடக்கின்றன. இவற்றைத் திருத்துவதனால், விவசாயத்துறையை மேலும் வளம்படுத்தலாம். திரு. மாணிக்கவாசகர் கல்குடாத் தொகுதியின் பிரதிநிதியாக இருந்த காலத்தில் இந்தக் குளங்கள் திருத்தப்பட வேண்டுமெனப் பலமுறை முன்னைய அரசாங்கத்துடன் வாதாடியும் அவை நிறைவேற்றப்படவில்லை. இந்தக் குளங்கள் உடனடியாகத் திருத்தப்படுவதுடன், புதிய குளங்களும் தோண்டப்பட வேண்டும்.

★ மட்டக்களப்பில் ஒரு உபவானொலி நிலையம் நிறுவப்பட வேண்டும்.

★ திருமலைத் துறமுகத்துக்கு பிரயாணிகள் கப்பல் வரக்கூடிய முறையில் அங்கு ஒரு இறங்கு துறை அமைக்கப்பட வேண்டும்.

★ திருமலையைத் தொழில் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

★ திருகோணமலைத் துறைமுகம் நவீன முறையில் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும். அதன் மூலம் மேலதிக கப்பல்களை ஏற்றுமதி இறக்குமதிக்காக திருகோணமலைக்கு வரச்செய்யலாம். இதனால், திருமலை வாசிகளுக்கு துறைமுகத்தில் வேலை வாய்ப்புக்கள் ஏற்படும்.

★ திருகோணமலையிலிருந்து தென்னை மரவடி வரையுள்ள பிரதான பஸ் போக்கு வரத்துப் பாதை திருத்தியமைப்பதுடன் விஸ்தரிக்கப்படவும் வேண்டும்.

★ திருமலை மாவட்டத்தின் சகல கிராமங்களுக்குமிடையே தொடர்பான போக்கு வரத்து வசதியை ஏற்படுத்துவதற்காக தேவையான இடங்களில் பாலங்கள் தாம்போதிகள் அமைக்கப்பட வேண்டும்.

★ கட்டுக்குளம் பகுதியில் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

★ அரசாங்க அலுவல்கள் ஒரே இடத்தில் இருக்கக்கூடியதாக செக்ரடேறியட் கட்டிடம் ஒன்று திருமலையில் நிறுவப்பட வேண்டும்.

★ திருமலை—கொழும்பு, சடுசதி, பஸ், புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

★ சலி, சன்டிச்கோவ் ஆகிய இடங்களில் மீனவர்களுக்கென வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

★ திருமலையில் மீன்பிடித் துறைமுகம், மீன் பிடிப் பயிற்சிக் கலாசாலை முதலியன நிறுவப்பட வேண்டும்.

★ கிராமங்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

★ மூதூர்த் தொகுதி மீனவர்களுக்குக் கடன் வசதிகள், குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

★ மூதூரில் ஓட்டுத் தொழிற்சாலை, செங்கற் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்.

★ கட்டைபறிச்சான் துறை கிளிவெட்டி துறை கிண்ணியாத் துறை மூதூர்த் துறை ஆகியவற்றிற்கு பாலங்கள அமைத்தல்.

★ வீதிகள், போக்குவரத்துச் சேவை சீர்செய்யப்படுதல் வேண்டும், கிண்ணியா கந்தளாய், மூதூர் வெருகல், திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு மேலும் பஸ்கள் அனுப்பப்பட வேண்டும்.

★ விஞ்ஞான போதனையுடன் கூடிய மத்திய மாவித்தியாலயம் அமைக்கப்பட வேண்டும்.

★ மூதூரில் மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

★ நீர்ப்பாசன வசதிகள் அதிக அளவில் செய்து தரப்பட வேண்டும்.

அமைச்சரவை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் அதுவும் அமுல் நடத்தப்படவேண்டும். அதற்கான சட்ட அந்தஸ்து வழங்கப்படவும் வேண்டும். இல்லாவிட்டால் பாராளுமன்றமே கேலிக் கூத்தாகி விடும். எனவே தமிழ் மொழிச் சட்டத்தை உடன் அமுல் நடாத்துவதுடன், அமைச்சரவை முடிவுகளையும் செயற்படுத்த தேசிய அரசு முயற்சி எடுக்க வேண்டும். இதில் காலதாமதம் செய்வதாயின் விபரீதம் விளையலாம் என்பதைத் தேசிய அரசுக்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

தமிழுக்கு தனிப்பகுதி

அரசகரும மொழித்திணைக்களத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமிழரசுப் பா. உறுப்பினர்கள் குறிப்பாக கிளிநொச்சிப் பா. உ., திரு. கா.பொ.இரத்தினம் எடுத்து வந்த நடவடிக்கையைத் தொடர்ந்து நீதி அமைச்சருக்கும் தமிழரசுப் பா. உறுப்பினர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அண்மையில் சட்டமாக்கப்பட்ட தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுலுக்குக்கொண்டுவருவது பற்றியும், இதனைக் கவனிக்க தனிப் பகுதியொன்றுநிறுவப்படவேண்டுமென்றும் தூதுகுழுவினர் வற்புறுத்தியதைத் தொடர்ந்து நீதி அமைச்சர் அதற்கான நடவடிக்கைகளைஉடன் எடுப்பதாகவும், இப் புதிய பிரிவை சகல அதிகாரங்களும் கொண்ட ஒரு தமிழ்த் தனி ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் இயங்க ஒழுங்குகள் மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

வடபகுதியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பூநகரி-மன்னார் பாதையை உடனடியாக அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் வண்ணம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் திரு. திருச்செல்வம் மராமத்து அமைச்சரிடம் கேட்பார் என்று தெரிகிறது.

பூநகரி, வேரவில் பகுதியில் உள்ள மக்கள் அமைச்சரை மலர்ந்தமுகத்துடன் அமைதியான முறையில் வரவேற்று தமக்குப் பொதுவாக உள்ள குறைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

தமிழ்த் தொழிலாளர்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற் சங்கத் துறையில் இடதுசாரிகளின் ஆதிக்கத்தை முறியடித்த பெருமை இலங்கையடங்கலாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரியது. கொழும்பிலிருந்து பருத்தித்துறை வரை தமிழ்த் தொழிலாளர்களுக்கு மொழிவழித் தத்துவ அடிப்படையிலதொழிற் சங்கங் கண்டபெருமை இ.த.அ. கட்சிக்கே உரியது.

தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் நிலவிய இடதுசாரிகளின் ஆதிக்கத்தை முறியடிக்க இ. த. அ. கட்சித் தலைவர்கள் பட்ட இடர்ப்பாடுகள் பல. இன்று கொழும்புத் துறைமுகத்திலேயே இடதுசாரிகளின் ஆதிக்கத்தை வெற்றியுடன் முறியடித்து மொழிவழித் தொழிற் சங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள் தமிழரசார். துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் இச்சாதனைகளில் ஒன்று.

இத்தனை இடர்ப்பாடுகளுக்கு மத்தியில தமிழ்த் தொழிலாளர்களை ஓர் அணியில் மொழிவழித் தத்துவ அடிப்படையில தமிழரசார் திரட்டியிருக்கும் பொழுது, எத்தகைய அடிப்படையும் இன்றி 71 தொழிலாளர்களுடன் ஒரு தொழிற்சங்க சம்மேளனத்தை சயபிரதாயத்திற்கு முரணான முறையில் நிறுவி தமிழ்த் தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கமுற்பட்டிருக்கிறார் முதலாளிகளின் பாதுகாவலன் திரு.ஜீ. ஜீ. பொன்னம்பலம். இவருக்கு தமிழர் ஒற்றுமை பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

சதியில் சிக்க வேண்டாம்

தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமாக அதுவும் தமிழ்த் தொழிலாளர்களின் நலன்களுக்காக விரோதமாக பல நடவடிக்கைகளில் நேரிடையாக பல சந்தர்ப்பங்களில் இறங்கிய திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதற்காக தொழிற் சங்கம் அமைக்கிறார்? இவரின் நடவடிக்கையால் தமிழர் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுவதுடன், தமிழ்த் தொழிலாளர்களும் கூறு போடப்படுகிறார்கள்.

தொழிலாளர்கள் கூறு போடப்பட்டால் முதலாளிகள் கை ஓங்கும். தொழிலாளர்கள் உரிமைகள் படிப்படியாகப் அபகரிக்கப்படும். எனவே தமிழ்த் தொழிலாளர்கள் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சதித் திட்டத்தில் சிக்கக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

திருமணம்

கதிரவேலுப்பிள்ளை - லீலாவதி

சி. கதிரவேற்பிள்ளை, நியாயவாதி, பா. உ. கோப்பாய் அவர்களுக்கும் முன்னாள் மலேயா ஜெகூர் சிவில் சேவைப் பகுதியைச் சேர்ந்த மறைந்த திரு. கே. செல்வத்துரை திருமதி செல்வத்துரை ஆகியோரின் புதல்வியான லீலாவதி பத்மா செல்வத்துரை அவர்களுக்கும் ஏப்ரல் 9ம் திகதி சனிக்கிழமை காலை 11 மணியளவில் திருக்கேதீச்சரத்தில் சைவசமயாசாரப்படி திருமணம் நடைபெறும். தம்பதிகள் 11ம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கும் 7 மணிக்குமிடையில் கோப்பாய் "மகாவளவு" இல்லத்தில் இருப்பார்கள். நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!

காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

மேற்கு செஞ்சுரி வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 7651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ

எமது சிறுகதை

அன்பான கன்னா,

இன்று உன்சடிதம் கண்டதும் எனது ஊகம் சரியாகிவிட்டது! ஓர் அற்ப விஷயத்தைப் பென்னம் பெரிய வெற்பாக-அதாவது ஒரு பெரிய மலையாக உன் உள்ளக்கமலத்தில் தூக்கிவைத்து நசுக்கிக் கொண்டிருந்திருக்கிறாய் இல்லையா...? ஆசையினாற்றான் என்றுமில்லாதவாறு அன்று நான் புறப்படும் போது அழமுடியாமலும்; அடக்கமுடியாமலும் திண்டாடித் தவித்துக் சடைக் கண்ணில் இரண்டுசொட்டுக்களைப் பிரசவித்து உன் கன்னங்களை ஏந்திய என் இரு கைகளிலும் உருளவிட்டாய் போலும்!

நான் அன்றுமட்டுந்தான் என்ன புதுமையாகவா பயணம் புறப்பட்டேன்? கடந்த மூன்று வருடமாகத்தானே பாடசாலைத் தவணை விடுமுறையின் பின் புறப்படுகின்றேன். அப்போதெல்லாம் மூன்றுமாதம் பிரிந்திருக்கப்போகிறோமே யென்று பிரிவுத்துயரால் உன்மனம் பொருமினாலும்; உன் பொன்னான முகத்தைஎன் முகம் நெருங்கும்போது; உன் பவளவுதட்டில் நெளிந்து வளைந்து விளையும்... அந்தப் புன்னகை; அன்றுஇல்லாமற்போனது ஆச்சரியந்தான்!

ஏழை ஆசிரியனுக்கு வாழ்க்கைப்பட்டவாழைக் குருத்துப்போன்ற உன்பருவப் பார்வைக்குப் 'பிரிவு' ஒத்துவராதெனப் பலமுறை நான் எனக்குள்ளேயே சிந்தித்ததுண்டு. மனையோடு; வாசலோடு; வாழும் ஆசிரியர்கள் தங்களுக்கு மாற்றம் வேண்டாமெனக் காலத்துக்குக் காலம் கர்ச்சிப்பதால், 'அசப்பட்ட கழுதைக்கு அட்டமத்துச் சனி' என்பதுபோல் மலையகத்திற் காலமெல்லாம் கடமை புரியக் கடப்பாடுடைய ஆசிரியர்களுள் நானும் ஒருவனா...? என்று என்னை நானே கேட்டுக்கொண்டு நிரந்தரமற்ற உன் பிரிவை நொந்து பெருமூச்செறிந்ததும் உண்டுதான்.

ஆனால்...; அதற்கும், நீ அன்று அழுது வழியனுப்பியதற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு நான் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே உனது 'மனம்' ஏதோ இனமறியாத புதிரொன்றை விடுவித்துக் காண்பதற்குத் தவித்ததை நான் அறியாமலில்லை. அந்த நாட்களில் வழமைக்கு மாறாக வாட்டமானமுகத்தோடுதான் என்னோடு இயந்திரமாகப் பழகினாய். உன்முகத்தில் செழிப்பையே காணமுடியவில்லை! தவிர்மைத் துயரை இனிமைப் படுத்த நீ செய்யும் குறும்புகள்; குளிர் மொழிகள் இல்லை! என்அங்கமெல்லாம் ஆசை அலைகளை, நடமாடும்போதே மோதி எழச்செய்வாயே! அந்த அன்புத் தென்றல் அவிந்து காணப்பட்டது ஏன்...?

இதற்கு இரண்டு நாட்களுக்குமுன்பு; நாம் திருவிழாவுக்குப் புறப்படும் போது புரூப்போலத்தானே புறப்பட்டுகோயில் வீதியெல்லாஞ் சுற்றிப் பறந்து திரிந்தோம்.

ஆனால்.....;

திருவிழா முடிந்து வீடு திரும்புகையில் நிகழ்ந்த அச்சந்திப்பின் பின்புதான் உன்னிடம் இந்த மாறுதலைக் கண்டேன். அப்பொழுதுஎனக்கேற்படாத சிந்தனை; பாடசாலைக்குப் புறப்படும் போது—நீ என்னை வழியனுப்பிய நிலையைக்கண்ட போது—சுடர்விடத் தொடங்கியது! என்ஊகம் இன்று மெய்மையடைந்தது கண்டு எனக்குள்ளே சிரிக்கும் இவ்வேளையில் உன் அமைதியானஉள்ளத்திற் கல்லெறிந்து கவக்கிய அந் நிகழ்ச்சியை நினைந்து வேதனைப்படுகிறேன்.

கனகா, கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாக மாட்டாது. கன்னியரெல்லாம் களங்கமில்லாத கன்னியராக மாட்டார்கள். உடலாலில்லாவிட்டாலும், உள்ளத்தாலாவது நிறம் மாறத்தான் செய்கிறார்கள். இன்றைய உலகத்தில் சாயம் வெளுத்த சற்கள் பல சந்தையில் கண்ணாடிப் பெட்டிகளிற் காட்சியளிப்பதைக் கண்டிருக்கிறாயல்லவா? அதே காட்சிப் பொருளாக இன்றைய வரில்பெரும்பாலானோரின் குமரப்பருவம் ஜொலிக்கிறது. ஆனால் தங்கம் இருக்கிறதே, அது தங்கம் தங்கம்தான்! எத்தகைய 'கிலுட்டு'ப்பொருட்களுள் இருந்தாலும் தங்கத்தின் பண்பு கெட்டுவிடாது. கண்ணுக்குப் பேதம் தெரியாவிட்டாலும், காலப்போக்கில் பாவனையின்போது தங்கத்தின் பண்பு வெட்டைவெளிச்சமாகிவிடும்.

நீ யிருக்கிறாயே; நீ புடம் போட்ட தங்கம். உன்னுடைய புறஎழிலுக்குத் தங்கத்தை உதாரணங் கூறுவதைவிட அக அழகுக்கு உவமானமாகக் கூறுவது சாலவும் பொருத்தம். உனக்குப் பெயர் வைக்கும் போது, உன்பெற்றார்; என் மாமன் மாமியர்; எவ்வளவு பொருத்தமாகப் பெயர் வைத்துள்ளனர் என்று எண்ணும்போது அவர்கள் பெயரில் ஓர் காவியமே புனைந்து பெருமைப்படுத்தலாம் போல் இருக்கிறது. படாடோபமும்; 'பச்சை' நாகரீகமும் மலிந்த இன்று, வெறும் பகட்டுக்காகவன்றி; பட்டப் படிப்புக்காகவன்றி; உன் பண்பான பிஞ்சு உள்ளத்தையும், இனிமையும் எழிமையும் பொலியும் இளமையையும், சொந்தமாக்கி

'பாண்டியூரன்'

உன் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டேனே, நீ ஒரு தங்கக் கட்டி என்பதனாற்றான் என்பதைக்கூட நீ அன்று பறந்திருந்தாய். உன் மீது பிழையேயில்லை. அன்றைய நிலையில் நீ என்னை அவதானிக்கும் போது இடையில் நின்ற வர்ணக் கண்ணாடியின் பிழையது. ஆகையினாற்றான், உன் 'கனகம்' என்ற பெயர் அதன் பொருளாக அமைந்த தங்கத்துக்குச் சிறப்புத் தருகிறதென்று நிரூபிக்கிறேன்.

உன்னோடு சேர்ந்து வாழும் போதெல்லாம் அன்பின் மேலீட்டால் எதையும் அறிய நேரம் கிடைப்பதில்லை. நமக்குத்தான் வேறு விவகாரங்களைச் சிந்திக்க நேரம் ஏது? நீதான் எல்லா நேரங்களையும் பறித்துக் கொண்டு விடுவாயே! உன் பிரிவால் தனிமையாக மலையெழிற் சூழலிலிருந்து சிந்திக்கும் போது தான் என் கற்பனைச் சிற்பமாக வடிக்கப்படுகிறாய், உன் அழகு; குணம்; அதற்கேற்ப அமைந்த பெயர்' யாவும் எனக்குப் பெருமிதத்தோடு கூடிய ஆதாரக் கடலைப் பொங்கச் செய்கின்றது.

யாரோ, ஓர் ஆங்கிலக் கவிஞனை, அவன் மனைவி இறப்பதற்குச் சொற்ப காலமிருக்கும் போதுதான் அறிந்தாளாம்! அது போலில்லாமல்; உன் கணவனை ஓர் கவிஞனுக்கிய பெருமையை நீ மனைவியாகும் முன்பே பெற்றுவிட்டாய்! ஆமாம்; என்னை ஆசிரியன் மட்டுமின்றி ஓர் கவிஞனாக்கியவளும் நீதானே. கவியின் பிறப்பிடமே கன்னியர்தானும்! இளமை, அழகு, இனிமை என்பவற்றைக் குழைத்து உருவாக்கிய 'உண்மை' தானே கவிதை. ஆதலால் கன்னி! ஆகையாற்றான் தமிழைக் கன்னித் தமிழென்றார்கள்.

உண்மை, நன்மை. அழகு என்பவற்றுக்குத் தன் உள்ளத்தைப் பறிகொடுப்பவன் கவிஞன். காலத்தை உண்டு; காலத்தைக் கடந்து நிற்கும், காலத்தோடொட்டிய கற்பனா சிருஷ்டிகளின் கடவுள் அவன். அவனுக்கு எல்லாம் சமம். கடவுளுக்கும் அப்படித்தானே. விகற்பமற்ற உளம் படைத்தவன் கவிஞன். நான் ஓர் கவிஞனெனபது ஒரு புறமிருந்தாலும் ஓர் ஆசிரியன் என்பதால் மானவரைச் சமமாகக் கருதுபவன். எனவேதான் அன்று உன் உள்ளத்தை நோகச் செய்ததாக நீ கருதுவதான அவ்வுரையாடலும் சந்திப்பும் நிகழ்ந்தது.

கமலா! அவள் என் மாணவி என்பது ஒருபுறமிருந்தாலும்; உன்சகோதரி என்பதை நீ அப்பொழுது மறந்து விட்டாய். உன் தாய் பெற்றாலும்; தாயின் உடன் பிறந்த சகோதரி பெற்றாலும் கமலா உன் சோதரி தானே. உனது கணவனாக நான் ஆகியதால் அவளுக்கு அத்தானாக இருக்க வேணடிய தாயிற்று. மூன்று வருடங்களுக்கு முன் அவளை நான் வகுப்பில் சந்தித்திருப்பேன். திருவழாவுக்குத் தன் ஊரிலிருந்து அன்று வந்த வழியில் நம்மைச் சந்தித்து விட்டாள். உங்களுக்குள் குடும்பப் 'போதாமை' யிருந்தாலும், நான் தனது ஆசிரியன் என்பதாலும் அத்தான் என்ற ஆசையினாலும் உரிமையாகச் 'சலசலவென்று' கொட்டிக் கதைத்ததோடல்லாமல் கடலைச்

அடுத்த இதழில்

க. பரராஜசிங்கம்

எழுதும்

'வாய்க்கால்'

என்னும்

சிறுகதை

இடம் பெறும்

சுருளும் தந்து கனம் பண்ணினாள். அடக்கமாகப் புழங்கும் உனக்கு அவளது பழக்கம் அலுப்புத்தந்ததை அப்போது அறிந்தேன். ஆனால் இவ்வளவு ஆளமாகப் பதிந்து உன்னை வருத்துமென்று உணரவில்லை.

அவள் 'படிப்பு' என்ற இறக்கைகளைக் கட்டிப் 'பருவம்' என்ற பட்டத்தை 'சுதந்திரம்' என்ற நூலில், சமுதாயம் என்ற வெளியிற் பறக்க விட்டுக் கொண்டு திரிவதால், அவ்வளவு 'சோஸியலாகப்' பழகத் தெரிந்து விட்டாள்! 'உணர்ச்சிப்' புயல் வீசினால் 'பட்டம்' எவ்விடத்தில் இறக்கைகளை யிழக்குமென்று அறிய அவளால் இப்போதுமுடியாதுதான். அதற்காக, ஓர் ஆசிரியர் குருவனியாக மாறமாட்டான்; கவிஞன் கயவனாக மாறமாட்டான். எனது கவிதைகளைப் பிரதியெடுக்கும்போது நான் தானாக உண்மைகளை நீ கண்டு கூறுவதை மறந்து விட்டாயா? 'சாகக் கொடுத்தாலும் போகக் கொடுக்க மாட்டாள் உத்தம மனைவி' என்னும் நமது நாடோடிப் பழமொழியின் 'வளம்' உன்னைப் பொறுத்த மட்டில் உதிரத்தோடு ஓடுவதால் அன்று அதையெல்லாம் நீ மறந்திருப்பாய்; இல்லை! அவனை எரித்துப் பொசுக்கியிருப்பாய்!

என்னைப் பொறுத்த மட்டில்; என்னிடம் அவள் பாடங்கேட்ட அந்த நாட்களிற் கூடக் கமலாவைப் பிடிக்காது. என்னசெய்வது சந்தித்து விட்டோமே என்று அவள் 'வளவள' வென்று பெய்த மழைப் பேச்சில் நனையவேண்டியேற்பட்டுவிட்டது. எத்தனைமுறை வகுப்பிலிருந்து என் சிற்றத்துக்கு ஆளாகிச் சிந்திக் குவித்திருக்கிறாள் தெரியுமா? வகுப்பில் அவளுக்கு நிறையப் 'பழைய' 'புதிய' இலக்கியங்களைப் புகட்டியும் பயனற்றதாகி விட்டது. அவளுடைய சுவனமே அந்த ஆங்கில 'ரீச்சர்' பரிமளாவின் பக்கம் தான் குவியும். ஆங்கிலம் இரண்டொருசொல் தெரிந்து விட்டால்; அதரத்தில் சிவப்புப் பூசி விட்டால்; அறை குறை நிர்வாண அடை உடுத்தி விட்டாற் போதுமென்ற அசட்டு நாகரீகத்துக்கு அடிமையாகி விட்டாள். அகன் விளைவு...! இப்போ தெரியாது. பாவம் அவளை மன்னித்து விடு, பிழைத்துப் போகட்டும். இப்பொழுதாவது நீ அவளைப் புரிந்து கொண்டாயே! அதற்கான சந்தர்ப்பத்தை ஆக்கிய அந்தத் திருவிழாவை வாழ்த்துகிறேன்.

இவ்விடயத்தைக்கடந்த இருவாரமாக உன் இதயத்துள் வைத்திருந்து எழுதி விட்டாயே; அம்மாடீ! உன் இதயம் வெடித்து விடாமல் இருந்தது நான் செய்த புண்ணியமாக்கும். உன்மனப் புழுக்கம் சாந்தியடைந்து விட்டதா? எந்த விடயத்தையும் உன் கணவனிடம் திறந்து பேசும் உரிமை உனக்குண்டுமனதை அழுத்தும் அனுபவங்களை அப்படியே ஆளத்திற் புதைத்து விட்டால்...! உன்உளத்துக்கும் உடலுக்கும் தான் ஆபத்து, உனது உளத்துக்கும் உடலுக்கும் நோவென்றால்; எனக்கும் அப்படித்தானே இருக்கும். ஏனென்று கேட்கிறாயா? மனம் 'ஒன்று' தானே, உனக்கு வாட்டமென்றால் என் வாழ்வுக்குத்தான் செழிப்பேது? கவிதைக்குத் தான் வளமேது? எங்கே; இப்போது சிரி பார்ப்போம். போதும்! போதும்! சிரிக்கிறாய் என் கண்ணாள்! சிரிக்கிறாயென் கருத்துள்! சிரிக்கிறாய் என் கவிதையுள்!

இப்படிக்கு,
உன் அன்புக் கணவன்
கணேஷ்.

மனைவியின் ஊடலைத் தீர்க்க அன்புக் கணவன் கடிதம் எழுதுகின்றான்—

ஏழையாசிரியனுக்கு வாழ்க்கைப்பட்ட அவளுக்கு, கடிதச் செல்வத்தால் சமாதானப்படுத்துகிறான், அவன்.

—சுவையான கடிதம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடல் பெற்ற கோணேசர் ஆலயம்

பங்குனி உத்தரத்தன்று கொடியேற்றுவிழா நடைபெறுகிறது

இலங்கையில் கிழக்கு மாகாணத்திலே திருகோணமலை மாவட்டத்திலே திருக்கோணேசர் ஆலயம் அமைந்திருக்கின்றது. இவ்வாலயத்தின் பிரமோற்சவ விஞ்ஞாபனம் (கொடியேற்று விழா) நிகழும் விசுவ வருஷம் பங்குனி மீ 22-ம் திகதி திங்கட்கிழமை 4-4-66 நடைபெறவிருக்கிறது.

திருக்கோணேஸ்வரத்தில் கோயில் கொண்டருளிய கோணேஸ்வர நாதனையும் இறைவியாகிய மாதுமையாள் அம்மையையும் இந்திரன் முதலிய தேவர்களும், திரு மூலர் முதலாய முனிவர்களும், இராவணன் முதலாய மன்னரும் வணங்கி அருள் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இத் திருத்தலத்தையுடைய இவ்வூருக்குப் பல திரு நாமங்கள் வழங்குகின்றன. அவை கோகண்ணம், திருக்குன்றுமலை, திருகோணமலை, தெட்சண கைலாயம், தென் கயிலை, திருமலை என்பவைமாம். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் கோணமலையமர்ந்த பெருமான் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார்.

ஆயிரங்கால் மண்டபம், அழகிய வீதி பாபநாச தீர்த்தம், வானுயர்ந்த கோபுரம், கண்ணைக் கவரும் விக்கிரகங்கள் ஆகிய வெல்லாம் போர்த்துக்கீஸ தளபதியாகிய கொன்ஸ்ரைன்-இ-சா என்பவனால் கி. பி. 1627-ம் ஆண்டிலே அழிக்கப்பட்டனவென்றும், கோயிற் திருவுருவங்களில் பிரதானமானவற்றை அந்தணர் இரகசியமாகப் பாதுகாப்புள்ள இடங்களில் மறைத்து வைத்தனர் என்றும் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றி பழைய வரலாறுகள் கூறுகின்றன.

சர்பந்தர் பாடல்

இத் திருப்பதியைப் பற்றி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பதினொரு பாடல்கள் பாடியருளினார். இவற்றுள் ஏழாவது பாடல் மறைந்துவிட்டது. ஒவ்வொரு பாடலும் மிகச் சிறப்பாக விளங்குகின்றன. இங்கே ஒருபாடலைத் தருகின்றேன்.

நிரைகழ லரவும் சிலம்பொலி
யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர்
பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி
விடையர்
கரைகெழு சந்துங் காரகிற்
பிளவும்
அளப்பரும் கனமணி
வரன்றிக்
குரைகடலோதம் நித்திலம்
கொழிக்கும்
கோணமா மலை
யமர்ந்தாரே

இப்படியாக ஒவ்வொரு பாட்டின் விளக்கத்திலிருந்து முன்னர் திருகோணமலை எவ்வாறு அமைந்திருந்ததென்று எங்களுக்கு அறியக்கூடியதாக இருக்கின்றது. இத்திருப்பதிக்குச் செல்லும் நுழைவாயிலில் கோட்டை அமைந்துள்ளது. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. கோட்டை வாயிலிலிருந்து கோணேசர் ஆலயத்திற்குச்செல்லும் வீதி சுமார் இரண்டுமைல் நீளத்திற்கு ஏற்றமும், இறக்கமுமாகச் செல்கின்றது.

1950 ஆண்டு ஆடிமாதம் பட்டணதெருவில் நகர சங்கத்தார் கிணறு வெட்டிய போது தெய்வாதீனமாகப் பழைய திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர் 1952ம் ஆண்டு இத்திருவுருவங்கள் ஈழ நாடு முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அதன் பின்னர் கோணேசர் மலையில் வழிபாட்டுக்காக அபிடேகம் செய்யப்பட்டு பழைய கோயில் இருந்த இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய திருக்கோயிலில் திருவிருக்கை செய்யப்பட்டது.

ஏரம்பு சரவணபவன்

இத் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்யப்பட்ட கோணேசருக்கு கிரமமாக பூஜை நடைபெற்றுக்கொண்டிருந்தன. விசேடமாக, தைப் பூசம், பங்குனி உத்தரம், கார்த்திகை விளக்கீடு, மார்கழி திருவாதிரை ஆகியநாட்களில் விசேஷ அபிஷேகம், பூஜை ஆகியன நடைபெற்று வந்தன. பல வருடங்களின் பின்னர் கோணநாயகருக்கு ஆலயம் ஒன்று கட்ட தீர்மானித்து ஆலயம் எழுப்பும் முயற்சியில் திருமலை மக்கள் முனைந்தனர். இவ் ஆலயகட்டிடவேலை ஆரம்பமாகி பல வருடங்களின் பின்னரே கோணேசர் ஆலயம் முழு உருவத்தைப் பெற்றது.

கொடியேற்று விழா

இம்மலையில் திறமையான கோவில் ஒன்றைகட்டி எழுப்புவர் என்று ஒருவரும் மனதால் எண்ணியிராத செயல் 1963ம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்றுவிட்டது. பலரின் முயற்சியும் அயராத உழைப்புமே இதற்குக்காரணமாகும். தென்கைலாயத்திலே எழுந்தருளியிருக்கும் கோணை நாயகருக்கு 1964ம் வருடம் பங்குனி உத்தரத்தன்று முதன் முதலாக கொடியேற்று விழா நடைபெற்றது. இவ் விழாவன்று திருக்கேதீச்சரத்திலுள்ள பாலாவி என்றழைக்கப்படும் தீர்த்தச் சுனையிலிருந்துமெய்யன்பர்கள் தீர்த்தத்தை கொண்டுவருவர். இத் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்டபின்னரே கொடி பேற்றுவிழா ஆரம்பமாகும்.

சென்ற வருடம் முதல்வருடத்தில் நடைபெற்றது போல் ஆயிரக்கணக்கானபக்தர்கள் தரிசிக்க, பல வேதியர் வேதமோத சிறப்பாக இவ்விழா நடைபெற்றன. பங்குனி உத்தரம் மூன்றாவது கொடி. இன்று மூன்றாவது கொடி. பேற்றுவிழா நடைபெறப் போகின்றது. சென்ற இரு ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்றதுபோல இவ்வாண்டும் நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக

இந்துக்களின் புனிதமிக்கதலங்களில் ஒன்றாக விளங்குவது திருகோணமலையில் அமைந்துள்ள கோணேசர் ஆலயமாகும். கோணேசர் ஆலயம் பழம் பெருமை மிக்கதும், திருஞான சம்பந்தநாயனாரால் பாடப் பெற்றதுமான தலமாகும். கோணேசர் ஆலயத்தின் கொடியேற்றுவிழா பங்குனி உத்தரத்தன்று (4-4-66) ஆரம்பமாகிறது. இதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

புதுக் கோவிலின் புனித வரலாறு

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கும் நடைபெறுகிறது

வளநாட்டின் கண்ணே தமிழ் மணமும் சைவமணமும் கமழும் யாழ்ப்பாண நகருக்கு இரண்டு கல் தொலைவில் சாங்கேசன் துறை நெடுஞ்சாலையில் அமைதியான சூழ்நிலையில் கொக்குவில் என்ற ஊர் இருக்கிறது. ஆயிரங்கோடி காமர் அழகெலாம் ஒன்றுசேர்ந்தொழுகும் முருகப்பெருமான் இங்கே சிறீ. கிருபாகர சிவசுப்பிரமணியன் என்ற பெயருடன் வள்ளி தேவசேனா சமேதனாய் திருக்கோயில் கொண்டருளியுள்ளான் என்றும் இளையோனாகிய எம்பெருமானுக்கு எடுத்த இக்கோயில் நூறாண்டுகட்கு முன் தோன்றியதாயினும், சொற்ப நாட்களிற் கட்டப்பட்டமையினால் அன்றும் இன்றும் 'புதுக்கோயில்' என்றே பொதுமக்கள் நாவிற் பயின்று வருகின்றது.

முருகன் வழிபாடு

முருகன்வழிபாடுதொன்று தொட்டே நம்மக்கள் உள்ளத்தை வசீகரித்து வந்திருக்கிறது. முருகன், தன் அன்பர்களையெல்லாம் அவரவர் நிலைக்கு ஏற்பவலிய வந்து அடைந்து, அவர்கள் மீது அருளாட்சி செலுத்துகிறான் என்பதும், கலியுகவரதனாகவும், கண்கண்ட தெய்வமாகவும் காட்சி வழங்கி, அனைவரையும் ஆட்கொள்ளச் சித்தமாயிருக்கிறான் என்பதும் முருக பக்தர்களின் பெருநம்பிக்கையாகும்.

"விண்கண்ட தெய்வம்
பல்கோடி உண்டேனும்,
விளம்பில் உன்போற்
கண் கண்டதெய்வம்
உளதோ"

என்று சகலகலாவல்லி மாலையிற் குமரகுருபரர் குறிப்பிடுவது முருக வேளைத்தான் என்பர் சான்றோர்.

செ. நடராசா

சிறிகிருபாகர சுப்பிரமணியர் கோவில் கொண்டருளிய கொக்குவிலும் அப்பெருமானது அருள்விளங்கும் ஒரு திருத்தலமேயாம்! ஆயினும் காலக்கிரமத்தில் இதன்புகழ் மங்கிப்போனமையால் அநேக புண்ணிய சீலர்கள், தங்கள் உடல்பொருள் ஆவி அனைத்தையும் ஈந்து இவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்வதில் இதுபொழுது முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். இவ்விறை பணி இனிது நிறைவு பெற்று, மூலமூர்த்தி யாகிய சிவசுப்பிரமணிய பெருமானுக்கும் மற்றும் விநாயகர், வைரவர் முதலிய பரிவார மூர்த்திகட்கும், அஷ்டபந்தனம் செய்து, விமானங்கள் புதுக்கி, மகா கும்பாபிஷேகம் மகோன்னதமாக நடைபெறுகிறது.

பிரியதெய்வம்

இந்துக்களின் பிரியதெய்வமாகிய கோபால கிருஷ்ணரையும், பரிவார மூர்த்திகளில் ஒருவராக இவ்வாலயத்தில் நிறுவவேண்டுமென இப்பதியில் வாழ்ந்த முன்னையோர் நீண்டகாலமாக விரும்பினர். அவர்கள் ஆவலையும் நிறைவேற்றிப், புன்னைமரத்தின் கீழ்ப் பசுக்கள் குழாம் புடை சூழ்ந்து நிற்க, அதரங்களிற் குழலைத் தாங்கி அமுத கீதம் பொழியும், ஆனந்த சொரூபனான கிருஷ்ணபிரானின் சிறந்த மூர்த்தமாகிய சிறீ கோபாலகிருஷ்ணரையும் இன்று இவ்வாலயத்திற் பிரதிஷ்டை செய்து விழா எடுத்து மகிழ்கின்றனர் கொக்குவில் மக்கள்.

கும்பாபிஷேக மலர்

சங்க காலம், தொல்காப்பியர் காலம் தொட்டு, வழிபடப்பட்டுவந்த குறிஞ்சி நிலத்துச்சேயோனும், முல்லை நிலத்து மாயோனும் இன்றும் எமது வழிபாட்டை உகந்து அங்கீகரித்து அருளல் வேண்டுமெனக்கருதி, இப் புண்ணியதினத்திலே மேற்படி கோவிற் பரிபாலன சபையார் 'கும்பாபிஷேக மலர்' ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்கள். எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படும் இம்மலரை, ஞானக் களஞ்சியமும் அருட்பெருங் கடலுமாகிய ஜகத்குரு சங்கராச்சாரியார் சந்நிதானம் அருளிய ஆசியும், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் திருமுருக கிருபானந்தவாரியாரும் இன்னும் பல பெரியோர்களும் எழுதிய கட்டுரைகளும் அலங்கரிக்கின்றன வென்றால், புதுக்கோயிற் கிருபாகரன் புதுமைதான் என்னே!

கொக்குவில் கிராமத்தில் புதுக் கோவில் என்று அழைக்கப் படும் சிறீ கிருபாகர சுப்பிரமணியர் கோவில் நூற்றாண்டுகட்கு முற்பட்ட பழமை வாய்ந்த புகழ் மிக்க கோவிலாகும். கொக்குவில் மக்களால் இக்கோவில் சமீபத்தில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு சிறப்பாக குடமுழுக்கும் நடைபெற்றது. குடமுழுக்கையொட்டி வெளியிடப் பட்ட மலரில் இக்கட்டுரையை எழுதியுள்ளார் திரு. செ. நடராசா.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'உந்த ஏற்பாட்டுக்கு அண்ணை ஒத்து வருவாரென்டு நான் நினைக்கேல்லை...' என்று அன்னலட்சுமி தன்னுடைய அபிப்பிராயத்தைக் கூறினாள்.

'புள்ளைவாயிருந்தால் வங்காளம் வரை போயிட்டு வரலாம். முன் துண்டிலை எல்லாம் ஆண்பனையள் தானே நிக்குது? கோட்டுக்குப் போலுலும் கிணத்துத் துண்டு எடுக்கிற ஆள் மற்றத் துண்டுக் காரருக்குக் காசுய குடுக்க வேணும் எண்டு தீர்ப்புச் சொல்லுவாங்கள் இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் அவன் கேக்க மாட்டானே?'

நவரத்தினத்தைத் தன்னுடைய மகனையாலே சமாளிக்க முடியுமென்ற நம்பிக்கை செந்தில்நாதனிடம் இல்லாதுபட்டாலும், செல்லப்பாக்கிய ஆச்சி கற்பித்துத் தந்த நியாயங்களைச் சொல்லிப் பார்க்கலாமென்று நினைத்தார் 'ஊர் அப்பு காத்துமாரோடை திர்ஞ்சு காணி விஷயங்களிலை உள்ள நெளிவு சுழிவெல்லாம் அவனுக்கு வலு வடிவாத் தெரியும்.'

செந்தில் நாதனைக் கண்டதும், வாயெல்லாம் பல்லாக நவரத்தினம் வரவேற்றான். 'என்ன மச்சான் கனகாலத்துக்குப் புறகு இஞ்சாலைப் பக்கம். வாருங்கோ, வாருங்கோ...'

நவரத்தினத்தின் மனைவி மங்கை, 'அண்ணையே, அவர் தானே எங்களை மறந்து போனாரே...' என்று சொல்லிய வண்ணம் பாயை விரித்தையிலே விரித்தாள்.

'என்ன தங்கச்சி செய்யிற? நான் ரெண்டாறு நாள் லீவிலைதானே வாற? வீட்டு அலுவலுகளைப் பாக்கவே நேரம் சரியாப் போயிடும்.'

மெய்யப்பா, அண்ணனுக்குத் தேத்தண்ணி கலக்கட்டோ?' என்று கேட்டபடி மங்கை அடுக்களைப்பக்கம் விரைந்தாள்.

'நான் அதெல்லே வாங்கியந்து வைச்சிருக்கிறன். நீர் கெதியா இறைச்சிக் கறியை ஆக்கும்.'

'மச்சானும் இண்டைக்கும் நானிட்டை இறைச்சி வாங்கினதாக்கும்.'

'ஓம், மச்சான். இப்ப இந்தக் கோயிலுகளிலை வெட்டாமல் விடடாப்புறகு ஏன் கேப்பான்? கடையளிலை வெட்டுறதுகள் பறி ஆடோ, செம்மறி ஆடோ ஆருக்குத் தெரியும். கிடாய் இறைச்சி தன்னுற சோட்டை டோசு வேணுமெண்டால் இப்பிடி ஆரேன் பங்குவைச்சாத்தானே' என்று கூறிக்கொண்டே, வீட்டுக்குள்ளிருந்த சாராயப் போத்தில் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து பாயிலை வைத்தார். 'எணேய், ரெண்டு கிளாஸ் எடுத்தாலை' என்று மனைவியைப் பணித்தார்.

'இதென்ன மச்சான் கறுத்தக் கழுத்தான் எடுத்துவைச்சிருக்கிறாய்?' என்று அவர் கேட்பதற்கிடையில் கிளாஸுகள் வந்து சேர்ந்தன.

'நான் உதுகள் அதிகம் பாவிக்கிறேலலை."

'எனக்குத் தெரியாதே? இது நெடுகிலுமே? ஆசை அருமையா வந்திருக்கிறியள். இந்த வருஷத்துக்கு, வருஷப் பிறப்புக்குக்கூட வரேல்லை.'

காணி விஷயத்தைத் தொடங்குமுன்னரே, செந்தில்நாதனை கறுத்தப் போத்தலில் கைவைக்கச் செய்துவிட்டான் நவரத்தினம். அவரும் லௌகிக விஷயங்களில் மண்டையைப்போட்டு உடைப்பவரல்லர் ஆச்சியின் வற்புறுத்தலிலேயேவந்திருக்கிறார். கொஞ்சம் 'பாவிச்சால்' தான் "கூச்சம் நாச்சம்' இல்லாமல் பேசலாமென்று நினைத்துக்கொள்ளுகின்றார்.

'அம்மா இப்படி ஓரவஞ்சகம் காட்டப்படாது. உங்களுக்குச் சீதனம் தந்த வளவிலை நான் ஏதேன் பங்கு கேட்டனானே. இதிலையும் சரி பாதி புறிக்க ஒப்புக்கொள்ளுறன்தானே? என்னை மனுஷி ஏதேன் கொண்டந்தவளை? அவளின்னை அண்ணன்மாரி இப்பவும் என்னைக் கண்டால் அடிச்சுக் சொல்லுவம்எண்டு சொல்லித் திரியிறாங்கள். நானும் ஒரு ஆசையிலை அவளை கலியாணம் பிக்கொண்டந்தனான். அவளை நடுத்தெருவிலையே அந்தரிக்க விடுறது? அவள் உங்களின்னை செந்தத் தங்கச்சி எண்டு வைச்சுக் கொள்ளுங்கோ. என்னசெய்வியள்?...என்னை பிச்சைப் பாட்டுக்கு ஏத்தாமல் தான் உந்தக் குடிலைக் கட்டி வைச்சிருக்கிறன். இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு ரூபாய்

ஆண், பெண்
இருபாலாருக்கும்
தன்மைக் குணம், பேய் தோஷம், எலும்புருக்கி நோய், வயிறு நெஞ்சு எரிவு, நச்சுத்தன்மையான சாப்பாடு வயிற்றிலிருத்தல், மெலிவடைதல், உடல் அலுப்பெட்சணம், ஆகிய வந்தறை மர்ம வழியில் காலக் கிரமத்தில் குணப்படுத்திப் பார்ப்போர் பரவசமடையும் விதத்தில் உடலை மாற்றி விடுவேன்.
விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.
வைத்தியாச்சாரி
பி. எம். தியாகராஜா
த. பெ. 1281,
கொழும்பு.

SUTHALAYAN'S
ASTHMA DROPS
ஆஸ்தலையன்ஸ் ஆஸ்மா டிரோப்ஸ்
இலைப்பு (ஆஸ்துமா) நோயை விரைவில் சுகப்படுத்தும் நவீன மருந்து. நானா விதமான இருமல்கள், க்ஷயரோகம், நெஞ்சுச் சளி, (ப்ரோங்கைடிஸ்) முதலியவைகளுக்கும் சிறந்தது. ஊசி மருந்தாலும் Injection தற்கால சாந்தியாவதும் செய்ய முடியாதபடி மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கும், மிகக் கடுமையான நிலைமையிலும், இம் மருந்தை ஒரு முறை கொடுத்தாலும் குணம் கிடைக்கிறது. பொறுக்க முடியாத வருத்தங்களையும், துன்பங்களையும் உண்டாக்கும் இக் கொடிய வியாதியை (ஆஸ்த்மா) நீண்ட காலமாகாமலிருந்தால் விரைவிலும், மிகவும் நாள்பட்டவைகளானாலும் சில வாரங்கள் தொடர்ந்து சாப்பிடுவதாலும், திரும்பி வராதபடி சம்பூரணமாகக் குணப்படுத்துகிறது. ஆஸ்த்மா வியாதிக்கு இது ஒரு சிறந்த மருந்து என்பதைப் பாவிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்.
அளவு:- 15, 20 - சொட்டுகள் தினம் இரு முறை.
விலை: 1அவுன்ஸ் ரூ. 7-ச.50
குறிப்பு: எல்லாவித வியாதிகளுக்கும் வைத்தியம் செய்யப்படும்.
நேரம்: மு. ப. 7-30, 10-30
பி. ப. 3-30, 8-30
ஸைஎன் குரு மெடிக்கல் ஹால
60, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

சித்திரைத் திருநாளில் திரைக்கு வரும் படங்கள்

இம்மாதத்திலே புது வருடப் பிறப்பிற்கு வெளிவர ஐந்து படங்கள் தயாராகி வருகின்றன. எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி நடிக்கும் 'அவன் பித்தனா?, சிவாஜி, கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடிக்கும் 'கந்தன் கருணை', எம். ஜி. ஆர், சரோஜாதேவி, புதுமுகம் பாரதி நடித்து வரும் பத்மினி பிக்சர்ஸ் 'நாடோடி', கண்ணதாசன் தயாரித்து வரும், சிவாஜி, பத்மினி, முத்துராமன், தேவிகா, நடிக்கும் 'தாயே உனக்காக', சரஸ்வதி புரொடக்சன்ஸ் 'பெரிய மனிதன்' ஆகிய ஐந்து படங்களும் அனேகமாக புதுவருடத்தன்று திரையிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிலவு. கிழக்கு மேற்காக வேலியைப் போட்டால் விட்டையுமல்லோ இடிக்க வேணும்? அந்தக் கிழவிக்குத் தான் கண்ணில்லை யெண்டாலும், நீங்கள் படிச்சனியளல்லோ? வடக்குத் தெற்காத்தான் எல்லை போடுவம். கிணத்துத் துண்டு எங்களுக்கு. உங்களுக்கு மேல் துண்டு கிடைக்குது. திறமாய்க் காய்க்கிற பெண் பனையெல்லாம் மேல்துண்டு அடிவள விலைதானே நிக்கு. கிணத்துக்கானபங்குக்காசையும் தந்திடுறம்...' என்றுநவரத்தினம் பல நியாயங்களைச் சொன்னான்.

'டேஸ்'ருக்காக இறைச்சிக் கறியை ஒரு 'பீரீ'ஸில் அள்ளிகொண்டு வந்து வைத்த மங்கை, கண்களைக் கசக்கி, சேலைத்தலைப்பைக் கண்களில் ஒற்றி, 'எனக்கு ஆரண்ணை இருக்கினம். கூடப் புறந்த சனியங்கள் என்னை அந்தரிக்க விட்டிட்டு விடுப்புப் பாக்குதுகள். மாமீட்டை நீங்கள் தான் சொல்லி நான் காவடி எடுத்து வைச்ச இந்தக் குடிசையைக் காப்பாத்தித் தரவேணும்' என்றுதன்னுடைய அழுகையால் அவருடைய உளத்தைத் தொட்டாள்.

போத்தலும் கதையும் சேர்ந்துகொள்ள, செந்தில் நாதன் ஒரு முடிவை ஏற்றுக் கொண்டார். 'வடக்குத்தெற்காக ஒரு வேலி. கிணறுள்ள பக்கம நவரத்தினத்திற்கு.'

செல்லப்பாக்கிய ஆச்சி செந்தில்நாதன் செய்துவந்த முடிவைக் கேட்டதும் தன்னையே இழந்துவிட்டாள். மருமகன் என்று மரியாதை வைத்துமெல்லப்பேசும் சுபாவத்தைக்கூட இழந்துவிட்டாள்.

'எனக்குத் தெரியுமே உப்பிடி நடக்குமெண்டு. அந்த நெல்லியடியாள்—அவள் தான் அந்த அரிசிப்பல்லுக்காரி, மருந்து போட்டுத் தானே புருஷனைப் புடிச்சவள். குலுக்கிச் சிரிச்சு சொக்குப்பொடி போட்டு அவள் காணியைப் புடுங்கிப்போடுவாள். கோவணம் ஒருதுண்டு எங்களுக்கு அவையளுக்கு ரெண்டுமேட்டுக்குப் வாசல். இனி, பேச்சுவார்த்தை இல்லை. கோடேறி வழக்காடிப் பாக்கிறதுதான்.....'

செந்தில் நாதனுக்குத் தான் படுபிழை விட்டுவிட்டது இப்பொழுதுதான் விளங்கிற்று.

இவராசியக் தெரியுமா?

மார்ச்சு 24 வியாழக்கிழமை

இனத் துவேஷத்தைத் தூண்டுவோர் மீது கடுமையான தண்டனை வழங்க வழிசெய்யும் புதிய சட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

தமிழ்ப் பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களின் வாக்கு மூலங்களைத் தமிழிலேயே பதிவு செய்ய ஒழுங்குகள் செய்யுமாறு சிலிநொச்சிப் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டிருக்கிறார்.

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள சரசாலை என்னுமிடத்தில் புதிய ஒரு நெசவாலையை திரு. வி. என். நவரத்தினம் பா. உ திறந்து வைத்துள்ளார்.

மார்ச்சு 25 வெள்ளிக்கிழமை

யாழ் மேயர் திரு. எஸ் நாகராசாமேல் நிறைவேற்றப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபையின் நேற்றைய விசேட கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

மட்டக்களப்புக்கு, 21 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபை அந்தஸ்து வழங்கப்பட்ட வேண்டுமென உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷன் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது.

ஹட்டன், கொட்டகல, வட்டகொட, தலவாக்கொல்லை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து கூட்டங்களில் கலந்து கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் கனகு. மு. திருச்செல்வம், மலைநாட்டு மக்கள், வடகிழக்கு மாகாணங்களில் சென்று குடியேறும் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

மார்ச்சு 26 சனிக்கிழமை

தமிழ் மொழிச் சட்டத்தை ஒழுங்கான முறையில் அமுல் நடாத்துவதற்கென அரசகருமமொழித் திணைக்களத்தில் தமிழுக்கென ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டுமென அரசாங்கத்தைக் கோருவதென தமிழரசுப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது'

பெப்புரவரி புரட்சிச் சதி விசாரணையின் பயனாக பதினொரு ராணுவ அதிகாரிகள் கட்டாய விடுதலையில் அனுப்பப் பட்டுள்ளார்கள்.

கோப்பாய்த் தொகுதிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர், அச்சுவேலியிலுள்ள தோப்பு என்ற இடத்தில், 40 வீடுகள் கட்டி சிறுபான்மைத் தமிழருக்கு வழங்க முடிவு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இராசாங்கஅமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு திருமலை எம். பி திரு. எஸ். எம். மாணிக்கராசா திருமலை மாவட்ட அபிவிருத்தி குறித்து பல திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கிறார்.

மார்ச்சு 27 ஞாயிற்றுக்கிழமை

தமிழ்மொழிச் சட்டத்தை அமுல் நடாத்த அரசகருமமொழிப்பகுதியில் தனியொரு பிரிவு ஏற்படுத்தப் படவேண்டும் என்ற தமிழரசாரின் கோரிக்கையை நீதியமைச்சர் திரு. விஜயமன்ன ஏற்றுக்கொண்டுள்ளார். தமிழரசுத்தந்தை தலைமையில் தமிழரசு பா. உ. க்களுக்கும், நீதியமைச்சருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஏப்ரல்மாதம் 16ம் திகதி கோலாலம்பூரில் தொடங்கும்போது, அதைமலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் ஆரம்பித்து வைப்பார்.

மார்ச்சு 28 திங்கட்கிழமை

தமிழரசுக்கட்சி சமஷ்டிக் கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகப் போவதில்லையென சோப்பாயில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் கனம். மு. திருச்செல்வம் கூறியிருக்கிறார்.

பல அரசாங்க அலுவலகங்களில் தமிழ் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோமஸ்வரன் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மார்ச்சு 29 செவ்வாய்க்கிழமை

தமிழரசுக்கட்சியின் அடுத்த மாநில மாநாட்டை சூன் 23ம் திகதிவரை ஒத்திப்போட தமிழரசுச்செயற்குழு தீர்மானித்துள்ளது.

தீண்டாமைப் பேயை ஒழிக்காவிட்டால் சிறுபான்மைத் தமிழர்கள், மதம் மாறுவதுடன் மட்டுமல்லாது வேற்றுமொழியைக் கற்று இனம் மாறவும் கூடுமென்று கோப்பாயில் பின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நவீன நகரம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

மார்ச்சு 30 புதன்கிழமை

இலங்கைக்கு மேற்கு ஜெர்மன் மேலதிகமான பொருளாதார உதவிகள் வழங்க முன்வந்திருக்கிறது.

1962ம் ஆண்டுப் புரட்சிச்சதி வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த இராணுவ அதிகாரிகள், இலைப்பாற இருக்கிறார்களென வெளிநாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

மார்ச்சு 31 வியாழக்கிழமை

இன, மத வெறியைத் தூண்டுவோருக்கு சட்டமூலம் தண்டனையளிக்க வகைசெய்யும் மசோதாவை, நீதிமந்திரி திரு. ஏ எப். விஜயமன்ன சென்ட்சபையில் சமர்ப்பித்திருக்கிறார். இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளெனக் காணப்படுவோருக்கு 2 வருடத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனையும், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இன்று தனது 68 வது பிறந்தநாளைக்கொண்டாடும் தமிழரசுத் தந்தை திரு சா. ஜே. வே. செல்வநாயகம், கடுமையான உழைப்பினால் தமிழ்மொழிச்சட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்ததென்றும், தொடர்ந்து முயற்சி செய்து முழு உரிமைகளையும் அடையவேண்டுமெனவும் தனது பிறந்தநாட். செய்தியில் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசிய வசூலில் மூன்றிலொரு பகுதி

நடிகர் சங்கத்துக்கு எம்.ஜி.ஆர் அளிப்பார்

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தென் இந்திய நடிகர் சங்கத்துக்கு தமது மலேசிய விஜயத்தின்போது சேரும் பணத்தின் ஒரு பகுதியை நன்கொடையாக அளிப்பதாக வாக்களித்துள்ளார்.

தென் இந்திய நடிகர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக விளங்கும் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நீண்ட காலமாக அதன் தலைவராக இருந்து பணிபுரிந்து வந்தது தெரிந்ததே. சிலகாலமாக சில கருத்து வேறுபாடுகளினால் தெ. இ. ந. சங்கத்துடன் அதிக தொடர்பு இல்லாமல் இருந்த எம். ஜி. ஆர். இப்பொழுது மீண்டும் அதன் பொதுச் செயலாளராகச் சமீபத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். எம். ஜி. ஆர். அவர்கள் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து தெ இ. சங்கம் புதிய பொலிவோடும் வலிவோடும் செயற்படுமெனத் தெரிகிறது. சமீபத்தில் பத்மஸ்ரீ பட்டம் பெற்ற நடிகர் திலகத்துக்கும், பானுமதிக்கும் தெ. இ. ந. சங்கம் நடாத்திய பாராட்டு விழாவிலே பேசிய எம். ஜி. ஆர், தெ. இ. ந. ச. முன்னேற்றத்துக்கான பல வழிகளைக் கூறியிருக்கிறார்.

தமது மலேசிய விஜயத்தின்போது தன்னுடன் ஒரு நடிகையும், ஒரு சிரிப்பு நடிகரும் கூட வர இருப்பதாகவும், மலேசியாவில நாடகங்கள் நடாத்தி பணம் வசூல் செய்யப்போவதாகவும், அந்தப் பணத்தில் மூன்றிலொரு பகுதியை தெ. இ. ந. சங்கத்துக்கு தருவதாகவும் எம். ஜி. ஆர். அவர்கள் வாக்குறுதியளித்துள்ளார்கள்.

ஏப்ரல் திங்கள் 12-ம் திகதியன்று பமயலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் தவத்திரு யோகி வருணனந்தா தலைமையில் நடைபெறவிருக்கும் 'செந்தாமரை' மாத இதழின் ஐந்தாண்டு நிறைவு விழாக் கதம்ப நிகழ்ச்சியில் கன்னுக்கு விருந்தளிக்கவிருக்கும் 'கலையரங்க' மாணவிகளின் நடனத் தோற்றம்.

நடிகைக்கு சேலை கட்டிய எம். ஜி. ஆர்

சென்ற மாதம் சென்னைக்கு சோவியத் பாலே நடனக் குழுவினர் வந்திருந்தார்கள். அவர்களுக்கு தென் இந்திய நாகர் சங்கம், சாரதா ஸ்டுடியோவில் ஒரு வரவேற்பும், விருந்தும் அளித்தது. அந்த விருந்தில் தமிழக முன்னணி நடிகர், நடிகையர் அனைவருமே பங்கு பற்றினார்கள். விஜயகுமாரி வெள்ளித் தட்டில் தந்தத்தாலான நடராசர் சிலையையும், சரோஜா தேவி ஒரு வெள்ளித் தட்டையும் அன்பளிப்பு செய்தனர். ரஷ்ய நடிகைகளுக்கு கைத்தறி சேலைகளும், நடிகர்களுக்கு வேட்டி, சால்வையும் வழங்கப்பட்டன. ஜி. சகுந்தலா, புஷ்பவல்லி, விஜயகுமாரி, சாவித்திரி ஆகியோர் ரஷ்ய நடிகைகளுக்கு புடவை கட்டிவிட்டவர்.

ஒரு ரஷ்ய நடிகை புடவை கட்டத் தெரியாமல் தவிப்பதைக் கண்டார் எம். ஜி. ஆர். மேடைமீது சட்டென பாய்ந்தார். அந்த ரஷ்ய நடிகையிடம் புடவையை வாங்கி, அழகாகக் கொய்யகம் வைத்து உடுத்தி விட்டார் மக்கள் திலகம். ஏனைய நடிகைகள் வெட்கித் தலை குனியும்படி எம். ஜி. ஆர். புடவை கட்டிவிட்ட மாதிரி சிறப்பாக இருந்தது.

தங்களை மறந்து கட்டித் தழுவியபடி மலர் மஞ்சத்திலே இப்படி காட்சிதரும் இந்த இளங்காதலர்கள் வீர அபிமன்யு படத்தில் சந்திக்கலாம்: ஏ. வி. எம். ராஜன், காஞ்சனா.

சர்வர் சுந்தரம் நாகேஷின் கதையா?

இப்பொழுது இலங்கையில் திரையிடப்பட்டு மகத்தான வெற்றியிட்டிக் கொண்டிருக்கும் 'சர்வர் சுந்தரம்' கதை உருவானது எப்படி?

நாகேஷ், ஒருநாள் 'மேஜர் சந்திரகாந்த' என்றநாடகம் பார்க்கப் போயிருந்தார். அந்தநாடகம் நாகேஷுக்கு ரொம்பப் பிடித்து விடவே, தவறாமல் ஒவ்வொரு நாடகத்துக்கும் சென்று வந்தார் அவர். இந்த நாடகத்தில் விடிந்து விட்டது என்பதை விளக்க பத்திரிகைக் காரச் சிறுவன் வீட்டினுள் பத்திரிகை போடுவது போன்ற ஒரு காட்சி வருகிறது. ஒரு நாள் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த நாகேஷ், பத்திரிகை போடும் பையனாக தாமே மேடையில் தோன்றினார். நாகேஷ் மேடையில் கண்டதும் மக்கள் கூட்டம் ஆரவாரித்து வரவேற்றது. இதை அவதானித்த பாலச்சந்தர், நாடகம் முழுவதுமே நாகேஷ் வந்தால் நன்றாக இருக்கும் என்று முடிவு செய்தார்.

இதை நாகேஷுக்கு எடுத்துச்சொன்னார் பாலச்சந்தர். ஆனால், நாகேஷ் தனக்குத் தாயைப் பார்க்கக்கூட முடியாதபடி வேலைத் தொந்தரவு இருப்பதையும் கடைசியில், தாயார் இறந்து விட்டதையும் பாலச்சந்தரிடம் கூறினார். பாலச்சந்தரின் மூளை வேலை செய்தது. ஏன் நாகேஷுடைய சொந்த வாழ்க்கையையே கொஞ்சம் கற்பனையை கலந்து நாடகமாகக் கூடாதுஎன சிறதித்தார். அந்த எண்ணத்தில் எழுந்தது தான் 'சர்வர்சுந்தரம்'

தபிரோ தபிர் என்று கூவியபடி ரயில்வே ஸ்டேசனில் தபிர் விற்கும் தேவிகாவை 'அன்புக் கரங்களில்' சந்திக்கலாம்.

கந்தன் கருணை

ஏ. எல். எஸ். வண்ணத்தில் தயாரித்துவரும் 'கந்தன் கருணை' வேகமாக வளர்ந்து வருகிறது. சமீபத்தில் வள்ளியும், தோழிகளும் பாடி ஆடுவதாக ஒரு காட்சி படமாக்கப்பட்டது. வள்ளியாக ஜெயலலிதா நடிக்கின்றார்.

'குறிஞ்சியிலே பூமலர்ந்து
குலுங்குதடி தன்னாலே
குறுந்தறுத்த வண்டிரண்டு
பறக்குதடி முன்னாலே'

என்ற பாடலை ஜெயலலிதாவுக்காக பி. சுசீலாபாடியிருக்கிறார். இப்படத்தில் சிவாஜி கணேசன் வீரவாகுவாகத் தோன்றுகிறார். ஏ. பி. நாகராசன் டைரக்ட் செய்கிறார்.

சிவாஜி கணேசன் புதிய படம் தயாரிக்கிறார்

புதிய பறவை படத்தைத் தயாரித்த சிவாஜி கணேசனுக்குச் சொந்தமான சிவாஜி பிலிம்சார் அடுத்து ஈஸ்மென் கலரில் ஒரு புதிய படத்தை இம்மாதம் முதல் தயாரிக்கத் தொடங்கியுள்ளனர்.

கண்ணன் காட்டிய வழி என்ற இந்தப் புராணப் படத்துக்கான கதை, வசனம், டைரக்ஷன் ஏ. பி. நாகராசன் பொறுப்பேற்றுள்ளார்.

இப்படத்தில் முக்கிய பாகங்களில் சிவாஜி கணேசன், பத்மினி, பி. ஆர். விஜயா ஆகியோர் நடிக்கவிருக்கிறார்கள். படத்தின் இசையை கே. வி. மகாதேவன் கவனிக்கிறார்.

"கண்ணன் பிறந்தான் எங்கள்
மன்னன் பிறந்தான்
வண்ணத் தோரணம்
மின்னிச் சுடர் விட
மாதர் கோகுலம்
வாழ்ந்து வளர்ந்திட"

—கண்ணன் பிறந்த நாள் விழாக் காட்சிக்காக கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள இப்பாடலை சூலமங்கலம் ராஜலெட்சுமி கோஷ்டி [illegible] ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டது.

நடக்கவிருப்பவை

கண்டியரசன்

கொழும் சிவசக்தி கலையரங்கினரின் ஐந்தாவது தயாரிப்பான 'கண்டியரசன்' நாடகம் இத்திங்கள் 12-ம் திகதி திங்கட்கிழமையன்று யாழ். நகர மண்டபத்தில் அரங்கேற்றப்படவிருக்கிறது. இந்நாடகத்தை திரு. இ. ஜெகசோதி அவர்கள் நெறிப்படுத்தியிருக்கிறார். பிரமாண்டமான காட்சியமைப்புக்களுடன் இந்நாடகம் தயாரிக்கப்பட்டிருப்பதாக தயாரிப்பாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்த் திரையுலகின் கலங்கரை விளக்கமாக விளங்கும் எங்களைப் போன்ற இனையான சோடியை வேறு எங்கும் காண்பதுண்டா என்று கூறுகிறார்களோ மக்கள் திலகமும் கன்னாம்பையங்கிளியும்? படம்:— கலங்கரை விளக்கம்.

கட்டுக் குடுமியுடன் பட்டிக்காட்டானாக காணப்படும் சிவாஜிகணேசனை பூசாரி நாகேஷ் என்ன கூறி இப்படிப் பயமுறுத்துகிறார்? படம்:- சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'நவராத்திரி'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

மருந்துவக் கலாநிதி என். கந்தையா

திருமதி காளியம்மை,
அக்கரைப்பற்று.

கே: என் கால் படம் ஒரே திமிர்குத்து, கடுக்கிறது. கடுப்பு விரைப்பாக இருக்கிறது. நடக்க முடியவில்லை. மிகவும் கஷ்டப்படுகின்றேன் வயது 35 தகுந்த பரிகாரம் கூறுங்கள்.

ப: இது அநேகமாக, அதிக பிள்ளைப்பேறு உடையவர்களுக்கு நரம்புச் சோர்வு காரணமாகவும் பெலவீனம் காரணமாகவும் போதிய உணவின்மையினாலும் ஏற்படுமெனலாம்.

கறிவகைகளுடன் இலுப்பை எண்ணை பாவிப்பதுசிறந்த பயனை அளிக்கும், அத்துடன் மேற்கண்ட இடங்களில் அவ்வெண்ணையை பூசுவதும் நன்று- முட்டை, பால், அளவுடன் பாவித்துவரவும்.

செல்வி கமலவேணி,
கொழும்பு-9

கே: நான் ஒரு பள்ளி மாணவி. வயது 16 மிகவும் பருத்திருக்கின்றேன். பாடசாலை சகமாணவிகள் கேலி செய்வதால் துக்கப்படுகின்றேன். இதற்கொரு ஆலோசனை தருவீர்களா?

ப: உடல் பருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. 'எனினும் உண்டி சுருக்குதல் பெண்டிர்க் கழகு' என்பதற் கிணங்க மிதமாக உண்ணவும். கொழுப்புப் பொருட்களை நீக்கவும் பயறு, கொள்ளு முதலியவை நன்று.

பி. இராமையா,
பசறை.

கே: எனது இருகாலின் கெண்டைத் தசையில் நரம்புகள் சுருண்டும், கை கால்களிலுள்ள நரம்புகள் நன்றாகவும் இருக்கின்றன. இதனால் ஏதும் ஆபத்துண்டோ என்னவோ எனப்பயமாக இருக்கின்றது. இதுபற்றி யான் கவலைப்படுகின்றேன். என் வயது 28 மணமாகவில்லை.

ப: கார் இரத்த ஓட்டம் தடைப்படுவதனால் இப்படி ஏற்படுகின்றது. இதை, ஆங்கிலத்தில் Veri cox Vein என அழைப்பர். நின்று வேலை செய்வோருக்கும் மதுபானம் மிதமிஞ்சி அருந்துவோருக்கும் கெற்பனிகளுக்கும் கல்லீரம் வியாதியினருக்கும் இப்படி ஏற்படுதல் உண்டு. எனவே என்ன ரோகம் என அறிந்து அந்த வியாதிக்கு மருத்துவம் செய்தல் வேண்டும். சுருண்டுள்ள பகுதிகளை நன்கு இறுக்கமுள்ள துணியால் சுற்றிக் கட்டுதல் நன்மை பயக்கும்.

என் .கே. நாதன்,
செங்கலடி.

கே: எனது உடல்மெலிந்து எலும்புகள் தெரிகின்றன. கண்கள் குழிவிழுந்து இருக்கின்றன. மணமாகவில்லை. வயது 26. தகுந்த பரிகாரம் கூறுங்கள்.

ப: உங்கள் உடலை நேரடியாக ஒரு வைத்தியரைக் கொண்டு பரிசோதிப்பதும், மார்புக் கூட்டை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்ப்பதும் சிறந்தது.

அல்லது நீங்கள் ஏதாவது மனோவியாதியால் அதாவது, ஏக்கம், பயம், அமையின்மை, இழந்த காதல் வயப்பட்டீரா என ஆராய்ந்து பார்த்தல் அவசியம்

இவையாவும் இல்லையெனக் கண்டால் உங்கள் சீரணஉறுப்புகள் சரியாக தொழில் செய்கின்றனவா?

இவையாவும் சரியெனக்கண்டால், நல்ல சத்துள்ள உணவு வகைகள், பால், முட்டை, பருப்பு வகைகள்- கிழங்கு வகைகள், தானியவகைகள் தாராளமாகப் பாவிப்பதோடு இவற்றை அன்புடன் தரக்கூடிய அடிசிற்கலையாளும் வேண்டற்பாலது.

நிந்தாவூர்ச் செல்வன்,
நிந்தாவூர்.

கே: நான் ஒரு பள்ளி மாணவன். இடைக்கிடை பச்சை முட்டை அருந்து வேன். படுக்கைக்கு சென்றால் தொண்டையுள் சளி அடைக்கின்றது. இதனால் இடைக்கிடை களைக்கவேண்டியிருக்கின்றது. இதை நீக்க ஒரு வழி கூறுவகள்?

ப: பச்சை முட்டை அருந்துவது அவ்வளவு நன்றல்லவெனினில் முட்டையில் ஏராளமான நோய்க்கிருமிகள் இருக்க ஏதுவுண்டு. அத்துடன் பச்சை முட்டையும் நன்றாக அவிந்த முட்டையும் செமிப்பதற்கு அதிக நேரத்தையும் எடுக்கும் எமதுடலியல் தனமையால் ஏராளமான நோய்க்கிருமிகள் உடலை அடைந்தாலும் அவை மடிந்து மாழகின்றன. சிலருக்கு இவைகள் நோயை ஏற்படுத்துகின்றன.

உமக்கு கபப்பிரகோபத்தினாலும், உணவு வகை வேறுபாடாலும் சுவாசக்குழாய் தாபிதமடைந்துள்ளது. எனவே தோடம்பழம் நெல்லிபழம் போன்ற பழவகைகள் நிறைய உண்ணவும். அதிமதுரத்தை மெல்வதாலோஅல்லது அவித்த குடிநீர் குடிப்பதாலோ சுகப்படுத்தலாம். பசும்பால் நன்றல்ல

எம். எல். ஏ. றவூப்,
ஏறாவூர்.

கே: நான் காதுவலியினால் சுமார் 10 வருடங்களாக கஷ்டப்படுகின்றேன்; எந்நேரமும் சீழ்வடிகின்றது. எனது வயது 23 இதைத் தீர்க்க முடியாதா?

ப: நீங்கள் நீண்டகாலம் காதுவலியால் பாதிக்கப்படுவதால் தக்கவொரு காதுநோய் நிபுணரின் நேரடிப் பரிசோதனையும் அத்தோடுசிகிச்சையும் வேண்டற்பாலது என்பது எனது அபிப்பிராயம்.

உ. தர்மலிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: எனது நெஞ்சில் சில தினங்களாக ஒரு விதமான படர் வியாதி தோன்றியுள்ளது. அதைத் தீர்க்க வழி கூறுங்கள்.

ப: இரவில் ஒரு சிறங்கை பாசிப்பயறை ஊறவைத்து, காலையில் நன்கு அரைத்துப் பூசிக் குளிர்ந்த நீரில் குளிக்கவும். சவர்காரம் பாவித்தல் கூடாது. தொடர்ந்துஇருகிழமை குளித்து வரவும். மச்ச மாமிசம் தவிர்க்கவும் தக்க பலன் கிடைக்கும்.

கணேசன்,
கல்முனை

கே: எனது வயது 15 ஆறு மாத காலமாக அதிகமாகச் சாப்பிட்டவுடன் இடப்பக்கம் வலிக்கின்றது. என்ன செய்ய வேண்டும்.

ப: அதிகமாகச் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும் இரவில் அரிசிச்சாதத்துக்குப் பதிலாக மெல்லிய உணவு எடுக்கவும். அதிகமான உறைப்பு புளி இவற்றை தவிர்க்கவும் உண்டபின் ஓய்வு அவசியம் வேண்டற்பாலது மலசல ஒழுங்கு மிகப்பிரதானம்.

எஸ். எம். சுந்தரலிங்கம்,
விராலிப்பத்தனை.

கே: எனது வயது 20 திருமணமாகவில்லை. காறித் துப்பும் போது சளியும் இரத்தமும் வருகின்றது. யாது செய்ய வேண்டும்.

ப: 'கெமொப்ரைசிஷ்ர்' அதாவது இரத்தத் துப்பலாக இருக்கலாம். இதற்கு துப்பும் இரத்தம் கறுப்பாக இருத்தல் வேண்டும். சிவந்த நிறமாக இருந்தால் மிகவும் கிட்டிய ஸ்தானத்தில் இருந்து வரலாம். நுரையீரல் சம்பந்தமான வியாதியிலும் இப்படியான தொந்தரவு ஏற்படும் இதற்கு ஆடா தோடை இலைச்சாறு தேன் இவை இரண்டையும் சம அளவு கலந்துஅடிக்கடி சிறிய அளவில் உண்டு வரலாம். இருமல் வரவர அதிகமாகவும், துப்பலுடன் சளியும் இரத்தமும் இருக்குமெனக்கண்டால் நேரடி வைத்தியம் சிறந்தது.

இ. வடிவேல்,
பாண்டிருப்பு.

கே: எனக்கு வயது 18 இன்னும் வயதுக்குத் தக்க பெருப்பம் இல்லை. தயவு செய்து ஆலோசனை தரவும்.

ப: சில சுரப்பிகளின் சுரப்புகள் குறைவதனாலும், அல்லது சுரப்பின்மையாலும் வயதுக்குத் தகுந்த பெருப்பம் இல்லாதிருக்கலாம். நல்ல சத்தான ஆகாரம் உண்ட பொழுதிலும், சீரண உறுப்புகள் சரிவரத் தொழில் செய்யாமையால் உடல் மெலிவு ஏற்படலாம். அல்லது தொடர்ந்த நீடித்த வியாதியின் காரணமாகவும் உடல் இளைக்கலாம் அல்லது மெலியலாம். எனவே இவற்றில் எக்காரணமென அறிவதற்கு தகுந்த வைத்தியரின் நேரடிப் பார்வை மிகமிக வேண்டற்பாலது.

இ. பாலசுந்தரி,
அளவெட்டி.

கே: நான் 12 வயதில் பெரிய பிள்ளையானேன். இப்போ வயது 18. ஒழுங்காக மாதவிடாயாகும். ஆனால் நன்கு படுவதில்லை. வலியும் உண்டு. உடல் பெருகுகின்றது. மெலிவதற்கு ஆலோசனை தரவும்.

ப: கருப்பையில் பல கோளாறுகள் ஏற்படலாம். அவற்றிலொரு கோளாறு காரணமாக மாதவிடாய் நன்கு நடைபெறுதிருக்கலாம். சிலருக்கு வழக்கமாக வே குறைவாக மாதவிடாய் ஏற்படலாம். தகுந்த முறையில் மாதவிடாய் நடை பெறுததன் காரணமாக உடல் பருக்க ஆரம்பமாகின்றது. இதற்கு தகுந்த தேகாப்பியாசம் வேண்டற்பாலது. அத்துடன் அடிக்கடி உண்ணும் வழக்கம் கூடவே கூடாது. மிதமாக உணவருந்தல் நன்று.

உங்கள் நோய்?
'சுதந்திரன்'
த. பெ. எண். 1183,
கொழும்பு-12.

யாழ்ப்பாணம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டியுற்றிருத்தலால் தற்போது குடாநாட்டின் மழைநீர் முழுவதும் கடலுள் ஓடிவிடுதல் (2) தரைக்கீழ் நன்னீர் வளங்கள் அவை திருப்பியூட்டப்படுவதிலும் விரைவாகப் பயன்படுத்தப்படுதல் (3) குடாநாட்டில் பல நன்னீர்க் கிணறுகள் உவராகவும், குடிநீர்த் தேவைகளுக்குத் தகுதியற்றனவாகவும் மாறல், என்பன. இவற்றை நீரியல் நோக்கில் ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

இறைக்கும் நீர் விலாகவில்லை

முதலாவது காரணியை எடுத்துக் கொள்ளும்போது யாழ். குடாநாடடில் வருடாந்தப் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் விழும் சராசரி மழையின் ஒரு பின்னம் மாத்திரமே கடலுள் வடியுமென்பதை அதிகமாக எல்லாப் புவியியலாளரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஏனெனில் முழுக் குடாநாடும் ஒரு கடல் மட்டச் சமநிலமாக மாத்திரமல்லாது மேற்பரப்பு, அயல் மேற்பரப்பு மண்கள் மழைநீரை உட்புகவிடக் கூடியனவாகமுள்ளன. எனவே வருடாந்தப் பருவப் பெயர்ச்சி மழைகள் மண்ணின் நுண்துளைப் படைகளின்கீழ் தாழ்ந்து தரைக்கீழ் மடோயாசின் சுண்ணக்கற் படைகளை ஒரு ஈரலிப்பான நிலையில் வைத்திருக்க உதவுகிறது. ஆகவே நடைமுறையில் கடலுள் மழைநீர் வடிதலுக்கும் டச்சுக்காரரினால் கட்டப்பட்ட குளங்களில் மண்டி அடைதலுக்கும் ஒரு விதச் சம்பந்தமுமில்லை. மிக அதிகமான மழை அல்லது வெள்ளப் பெருக்கு போன்ற விதிவிலக்கான காலங்களில் மாத்திரமே மழைநீர் கடலுள் கொண்டு செல்லப்படுகிறது. அதுவும் மேற்பரப்பு அயல் மேற்பரப்பு மண்கள் நன்கு உறிஞ்சப்பட்ட பின்பு மாத்திரமேயாகும்.

இரண்டாவது காரணிக்கு வரும்போது குடாநாட்டின் கிணறுகளிலிருந்து இறைக்கப்படும் எல்லா நீரும் விரயமாகவில்லை யென்பதைத் தெளிவாக மனதில் கொள்ள வேண்டும். ஏனெனில் சுண்ணக்கல் மண்களின் அதிநுண் துளைத் தன்மை காரணமாக நடைமுறையில் நீர்ப்பாசனத் தேவைகட்காக மேற்பரப்புக்குக் கொண்டுவரப்பட்ட முழுநீருமே மண்ணுள் மீண்டும் தாழ்ந்து விடுகிறது. ஆகவே நெடுநாட்டத்தில் வருடாந்த வடகிழக்குப் பருவக் காற்று மழைகள், கயப்பயிர்களினால் உறிஞ்சப்பட்டதும், அயன வெப்பம் காரணமாக வளிமண்டலத்துள் ஆவியாக்கப்பட்டதுமான சிறிதளவு நீரை விடத் தரைக்கீழ் மீண்டும் அமிழும் நீர்ப்பாசனம் போன்றவற்றிற்கு வெளியிறைக்கப்பட்ட நீரும் சேர்ந்து குடாநாட்டின் தரைக்கீழ்ச் சேமிப்புக் கொள்திறனில் ஒரு சமநிலையை ஏற்படுத்தப் பெரிதும் போதுமானதாகும்.

கிணறுகள்

எனவே குடாநாட்டில் காணப்படும் காலை நிலைத் தன்மைகளினதும் கமஞ்செய் முறைகளினதும் கீழ், அண்மைய எதிர்காலத்தில் அல்லது ஒரு சந்ததியின் பின்னர் தானும் குடாநாடு ஒரு பாலை நிலமாகுமென்று காரணமின்றி அஞ்சுதற்கு எனது தாழ்மையான சொந்த அபிப்பிராயத்தில் உண்மையில் எந்தவித அடிப்படையுமேயில்லை. உண்மையில் அதற்கு எதிர்மாறாக மிகஅதிகமான கிணறுகளும், கமங்கள் போன்றனவற்றிற்கு அவற்றின் நீரின் மேலதிக நீர்ப்பாசனமுமே ஒரு வெப்பப் பாலை நிலைமாக இருந்திருக்க வேண்டியகுடாநாட்டை ஒரு பசுந்தரையாக ஏற்கெனவே மாற்றியதுடன் தொடர்ந்து மாற்றவும் செய்யுமென்றால் மிகையாகாது. ஆனால் மறுபுறத்தில் இவ்விரு வலலுனர்களினதும் பாரதூரமான ஜோசியம் நடைமுறையில் நிகழக்கூடிய ஓர் சூழ்நிலை தற்போதைய வடகீழப் பருவப் பெயர்ச்சிக் காற்றுகள் தொடர்ச்சியாகச் சில வருட காலத்தில் குடா நாட்டிற்குப் பூரணமாக ஒரு வித மழையையும் கொண்டு வராதிருத்தலேயாகும். இது நிகழ்வது உண்மையில் மிக அரிதாகவே.

இறுதியாக மிகவும் சிக்கலான பிரச்சினையாகி பல நன்னீர்க் கிணறுகள் உவர் நீராகவும் இதனால் அந்நீர்கள் குடிநீர்த் தேவைகட்குத் தகுதியற்றதாகவும் மாறுதலை நோக்குவோம். இக்கிணறுகள் இவ்வாறிருள் தலுக்குரிய காரணங்கள் முன்னையதொரு பந்தியில் ஏற்கெனவே ஓரளவு விளக்கப்பட்டுள்ளது. குடாநாட்டின் கடற்கரை வலயம் நெடுநிலமாக ஏறத்தாழக் குடாநாட்டின் அப்பாலுள்ள சிறு தீவுகளின் எல்லாக் கிணறுகளிலுமே இத்தன்மைகள்பொதுவானவையாகக் காணப்படுகின்றன. இக்கிணறுகளின் ஆழம் பொதுவானகடல்மட்டக் கோட்டிலிருந்ததலும் அவை கடலுக்கண்மையிலிருத்தலுமே இதற்குக்காரணமாகும். இதன் விளைவாக அதிகமான கிணறுகள் மேற்பரப்பில் ஒரு மெல்லிய நன்னீர்ப்படையை மாத்திரமும் அதனைத் தொடர்ந்து கீழ் உப்பு அல்லது உவர் நீரான இரண்டாவது படையையும் கொண்டுள்ளன. எனவே மேல் நன்னீர்ப்படையின் மேலதிக உபயோகம் இக்கிணற்று நீர்கள் உவராக மாறுவதிலேயே முடிகிறது. யாழ்—குடாநாட்டின் பிரதான நிலப்பகுதியில் இத்தகைய கடற்கரையோரக் கிணறுகளின் நீர் உவராகவும் குடிப்பதற்குத் தகுதியற்றதாகவும் மாறும்போது அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நன்னீர்கொண்டபொது அலலது அயல் கிணறுகளுக்குப் பொதுவாகச் செலவர். ஆனால் அதிட்டவசமாகப் பிரதான நிலப்பகுதிக்கு அப்பாலுள்ள எல்லாத் தீவுகளிலுமே நீண்டகோடைமாதங்களில் ஏறத்தாழ எல்லா ஆழமற்ற கிணறுகளுமே உவராக மாறும்போது உண்மையில் குடியானவர்கள் பெரும் இடர்களுக்குட்படுகின்றனர். எனவே இச்சிறு தீவுகளில் மாத்திரமே நீர்ப்பங்கீடு நடைமுறைக்கு வருகிறதேயல்லாமல் யாழ் குடாநாட்டின் பிரதான நிலப்பகுதியிலல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

மண்ணிற்கு மேலே...

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

இன்பத்தின் எல்லையிலே துன்பம் தோன்றுவது போலப், பகலின் முடிவிலே இரவு தோன்றியது. தேவதாரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்த மோல்டன் வழக்கம் போலத் தனது கவி ரசனையில் மூழ்கிப் போயிருந்தார். இன்ஸ்பெக்டர், உயர் தர அதிகாரி அனைவரும் வந்திருந்தனர். அவர்களைப் பற்றி மோல்டன் சிறிதும் லட்சியம் செய்யவில்லை.

டாங்கி வீட்டின் பின்புறம் திறந்தப் பட்டிருந்தது. அதன் குழாய் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தது, தியணைக்கும் என்ஜினும் வீட்டிற்குப்பின் பக்கம் திறந்தப் பட்டிருந்தது. பறக்கும் தட்டினுள்ளிருப்பவர்களுக்கு, இந்த ஏற்பாடுகள் தெரியாமல் இருப்பதற்காகவே யாவும் மறைவாக வைக்கப்பட்டிருந்தன.

இரவு ஒன்பது மணி, ஐம்பது நிமிடம். இன்னும் சில நிமிடங்களே பறக்கும் தட்டு வர, இருந்தது. அந்த அதிகாரி டாங்கியிலே ஏறி உட்கார்ந்து கொண்டார். இன்ஸ்பெக்டர் கீழேநின்றார். யாவும் தயாராக இருந்தன.

'ஹொய்ங்... ங்... ங்... ங்...' மோல்டனின் குடும்பத்தையே சிர்குலைத்த வீணை நாதம் மெதுவாகக் கேட்க ஆரம்பித்தது, இழக்குத் திசையில்; யாவருடைய கண்களும் அங்கே நோக்கின. அந்த வீணை நாதம் அதிகரித்துக்கொண்டே வந்தது. பின்னர் மூவர்ண ஒளியையும் வீசிய வண்ணம் அது மோல்டனது வீட்டை நோக்கி வந்தது. மோல்டன் அதிசயத்துடன் அக்காட்சியைப் பார்த்தார்; ஆம்! அவர் புதிய மனிதர் தானே!

'ஹொய்ங்...ங்...ங்' பறக்கும் தட்டு விரைவாக வந்தது. அது சுழன்ற வேகத்தினால் அந்த ஒளிக்கதிர்கள் அதைச் சுற்றி வெள்ளொளி வளையமாக மிளிர்ந்தன. பறக்கும் தட்டு வீட்டிற்கு முன்னால் சுமார் 500 அடி தூரத்தில் மிக உயரத்தில் நின்று சுழன்றது. அதனுடைய சுழற்சி வேகம் சிறிது நேரத்தின் பின் குறைக்கப்பட்டது, அதனுடைய சுழற்சி வேகம் குறைந்த பின்னர், அது சற்றுக் கீழே பதிந்தது அப்பொழுது— காதரின் கலங்கிய கண்களுடன் நோக்கிக்கொண்டிருந்தாள். மோல்டன் எதுவும் புரியாமல் அதிசயக் கண்களுடன் நோக்கிக்கொண்டிருந்தார். பறக்கும் தட்டின் கதவு திறக்கப்பட்டதும் அதனுள்ளிருந்து ஒரு பெண்ணுருவமொன்று 'பாரசூட்'டிற் கட்டப்பட்டு வெளியே தள்ளப்பட்டது. 'பாரசூட்' அழகாக விரிந்து மெதுவாக அசைந்தாடிய வண்ணம் நிலத்தில் இறங்கியது. அது நிலத்தைத் தொட்டது தான்தாமதம்... டாங்கிபலமுறைகுரைத்தது. 'டு மீல்...டு மீல்... டு மீல்' டாங்கியின் குழாயிலிருந்து நெருப்புப் பந்துகள் போன்ற குண்டுகள் பறக்கும் தட்டை நோக்கிப் பறந்தன. அதே கணம் பறக்கும் தட்டின் சுழற்சி வேகம் அதிகரிக்க அது மேலே உயர்ந்தது. அப்பொழுது அதனுள்ளிருந்து இன்னுமொரு 'பாரசூட்' வெளியே தள்ளப்பட்டது. அதைக்குண்டுகள் துளைத்தன. அத்துடன் சுட்டப்பட்டிருந்த பொருளைக் குண்டுகள் துளைத்ததும், 'ஐயோ அம்மா' என்ற ஓலம் களம்பி அந்த வயற்பிரதேசத்திலே எதிரொலித்தது.

அந்த மரண ஓலத்தைக் கேட்டதும் அதுவரையாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த மோல்டனின் முகத்திலே பலவிதமான உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. அவருடைய கண்களில் திடீரென்று ஒருபுதியஒளி தோன்றியது. மறுகணம், 'ஐயோ! என் மகளே!' என்று கதறிய வண்ணம் அந்தக் கிழிந்து விழுந்த இரண்டாவது 'பாரசூட' டையும், உடலையும் நோக்கி ஓடினார். காதரினும், ஜான்மைனும் மயங்கி விழுந்தனர்.

திகைத்துப் போய், டாங்கியை இயக்கக்கூட மறந்து ஒருகணம் எதுவும் புரியாமல் வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார், அந்த உயர்தர அதிகாரி ஆனால் மறுகணம் டாங்கியை இயக்கினாலும் பயன் இல்லை என்ற உண்மை அவருக்கு விளங்கி விட்டது; ஏனெனிற் பறக்கும் தட்டு மிகவேகமாகச்சுழலுவதனால் அதன் மீது தாக்கும் குண்டுகள், வழுக்கித் திசைதப்பிச் சென்றனவே யல்லாமல் எவையும் அதனைப் பழுது செய்ய முடியவில்லை. இதனை உணர்ந்தவண்ணம் நிமிர்ந்த உயர்தர அதிகாரியின் கண்களுக்கு தூரத்திலே சென்று மறையும் ஒரு புள்ளி தான் கண்சிமிட்டிக்கேலி செய்தது. மகத்தான தோல்வியுடன் டாங்கியை விட்டு இறங்கிய அவர், கண்களிற் துளித்த நீர்க்குமிழிகளைத் துடைத்து விட்டு இன்ஸ்பெக்டர் எங்கே என்று தேடினார். இன்ஸ்பெக்டர் மயக்கமடைந்து வீழ்ந்து கிடந்தார். இப்பொழுது மூர்ச்சை தெளிவதாகத் தெரியவில்லை. இவ்வளவு பேரையும் திகிலடையச் செய்த அந்த மரண ஓலம் யாருடையது என்று அறிவதற்காக அவர் அந்த இரண்டாவது 'பாரசூட்'டை நோக்கி ஓடினார். ஆனால் அந்தோ! அங்கே—

மோல்டன் [illegible] மடியில் லோமைனைத் தூக்கிக்கிடத்திய வண்ணம் புலம்பிக்கொண்டிருந்தார் அவரருகே ஸ்டெலின் வாயடைத்துப்போய் நின்று கொண்டிருந்தான். இதைக் கண்ட அதிகாரி லோமைனைப் பார்த்தார். அவரால் அந்த காட்சியைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை! கோர்டையை இடித்துத் தகர்க்கப் பாவிக்கப்படும் பீரங்கிக் குண்டுகள் அக்குழந்தையின் உடலைத் துளைத்துச் சென்றிருந்தன!

"பாரதியாரும் மறுமலர்ச்சியும்"

வே. கிருஷ்ணபிள்ளை

தமிழ் நாட்டின் அரசியல் நிலைமை அமைதியின்றி இருள்சூழ்ந்து மண்டிக் கிடந்த சமயத்திலே இதற்கோர் முடிவுகட்ட வேண்டுமென்று மக்கள் கருதிக் கொண்டிருந்த வேளை உதித்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியாரால் தமிழுக்கு பெருமைவரக் கூடியதாய் இருந்தது. தமிழ் மக்களுக்கு அடிபோது ஒரு ஊக்கத்தையும், நெஞ்சில் வீரசக்தியையும், கொடுத்தது பாரதியின் மறுமலர்ச்சியென்று தான் சொல்ல வேண்டும். பாரதி அவருடைய வாழ்நாள் முழுவதும் தேசத்திற்காகவும், சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவும், தமிழ் மக்களுக்காகவும் உழைத்தார். அவரது எண்ணங்கள் கவிதை உருவாக மாறி மக்களின் இதயங்களில் பரவலாயிற்று.

நாட்டுப்பற்றில்லாத மனிதனை மனிதனெனல் பெரும் பிழை. அவன் ஒரு விலங்கு. தான பிறந்த மண் தன்னை ஈன்ற தாய்க்குச் சமன். தாயைப் பேணவும், தாய் நாட்டைப் பேணி நடக்கவும் மனிதத்தன்மை உடையவன் எவனும் தயங்கக்கூடாது. அப்படித் தயங்கினால் அவனை மனிதனெனச் சொல்லக் கூடாது. இது பாரதியின் ஆணித்தரமான கருத்தாகும்.

'கண்ணையும் தியையும் சேர்த்து, நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்து, தெள்ளுத்தமிழ்ப் புலவோர்கள் பல- தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்'.

வண்மையைப் பொசுக்கும் 'தீ' செந் 'தீ' கவித் 'தீ'. தமிழினத்தின் உயிர் நாடியான புலவரின் குரலில் காற்றின் தூய்மையும், வான வெளியின் விரிவும் இருந்தது. இவற்றைப் பாரதி மேலே பாடலாக பாடியிருக்கின்றான்.

இப்பேர்பட்ட தமிழினம் தன்காலத்திலே இருந்த நிலையை கண்டான் பாரதி. கொதித்தது அவன் நெஞ்சம் உடனே "நெஞ்சுபொறுக்குதில்லையே" என்றுபாடினான். இத்தகைய தாழ்ந்த நிலையைக் கண்டு உருகினான்.

பாரதி ஆணுக்குப் பெண் சமம் என்று கூறுகின்றார். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்பன மறைந்து இருவருக்கும் ஒரே நீதி என்ற நிலை வரவேண்டுமென்று ஆசைப்பட்டான் பாரதி.

மக்களிடையே தொழில்களில் புதுமையும், மலர்ச்சியும் செறிய வேண்டும். பற்பல தொழிற்சாலைகள் நிறுவ வேண்டும். இதனால் நாடு பெருமை எய்த வேண்டுமென்பது இக்கவிஞரின் கருத்தாகும்.

இங்கு நடிப்புச் சுதேசிகளைப்பற்றி கூறுகின்றார்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி, வஞ்சனை செர்வலராடி கிளியே! —வாய்ச்சொல்லில் வீரரடி'

இக்கவிதையைப் பாருங்கள் நேர்மை உள்ள வாழ்வு இல்லாதவர்களாய் வாய்ச் சொல்லினால் மட்டும்பொது மக்களை ஏமாற்றி வஞ்சிக்கின்ற நடிப்புச் சுதேசிகளின் போலிவாழ்க்கையைவெறுத்துக்கூறுகின்ற பாரதியின் உள்ளத்தைக்காண முடிகின்றது. பாரதியின் கவிதைகளையும், சேவைகளையும் ஒருபோதும் மக்கள் மறக்கமாட்டார்கள். வாழ்க பாரதியின் புகழ்!

காந்தியார் சைக்கிள் ஓட்டினார்

காந்தியார் சபர்மதி ஆச்சிரமத்தை நடத்தியகாலம். ஒரு நாள் ஒரு பொதுக் கூட்டத்துக்கு வருவதாக வாக்களித்திருந்தார். நண்பர் ஒருவர் மோட்டாரில் அழைத்துச் செல்வதாய் இருந்ததால் அதைநம்பி மற்றப்பணிகளில்ஈடுபட்டிருந்தார்.

கூட்டம் ஐந்து மணிக்கு. நேரம் நெருங்கி விட்டது. நண்பர் வரவில்லை. செல்ல வேண்டிய தூரமோ 2 மைல். இனி தயங்குவதில் பயனில்லை என்று முடிவு கட்டி விரைந்து நடக்கத் தொடங்கினார். நேரம் நெருங்க நெருங்க ஓட்டமாக மாற்றினார் நடையை,

எதிரே ஒருதொண்டர் சைக்கிளில்வந்து கொண்டிருந்தார். காந்திஜியைக் கண்டதும் அவர் கீழேஇறங்கி எங்கேதனிமையாகச் செல்கின்றீர்கள் என்று கேட்டார்.

நான் அவசரமாக ஒரு கூட்டத்துக்குச் செல்ல வேண்டும். உங்களால் ஒரு உதவி செய்ய முடியுமா?

என்ன செய்யவேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன் என்றார் தொண்டர். உங்கள் சைக்கிளை எனக்கு கொடுக்க வேண்டும் என்றார். காந்தி.

இதோ எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சைக்கிள் விடத் தெரியுமா? என்று தொண்டர் வியப்புடன் கேட்டார்.

அதற்கு பதில் கூறுவது போன்று சைக்கிளை வாங்கி அதன் மேல் ஏறிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தார். சரியாக ஐந்து அடித்தது. காந்திஜியும் கூட்டம் நடக்கும் இடத்தில் சைக்கிளை விட்டு தொப்பென்று குதித்து இறங்கினார்.

இரா. கைலாசநாதன்

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணம் படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யின் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

வளர்மதி
சுதந்திரன் மாணவர் மன்றம்
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 1

பெயர் _____

பாடசாலை _____

முகவரி _____

_____

_____ _____
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 7ம் திகதி வியாழன் முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)

மொடேன் (பண்டாரவளை) **மொடேன்** (பதுளை) **விஜிதா** (அட்டன்) **தீவொளி** (நுவரெலியா)

★ ஒரு பெண் ஒன்பது நாளில் ஒன்பது விதமான மனிதர்களைச் சந்திக்கும் உணர்ச்சிமிக்க கதை!

★ இரு திலகங்களின் இணையற்ற நடிப்புக்கு எடுத்துக்காட்டு!

சிவாஜி கணேசன், சாவித்திரி, வி. கே. ராமசாமி, நாகேஷ், சாரங்கபாணி, மனோரமா

மற்றும் பலர் நடிக்கும்



விஜயலட்சுமி பிக்சர்ஸ்

நவராத்திரி

கதை-வசனம்-டைரக்ஷன்: ஏ. பி. நாகராஜன் பாடல்கள்: கண்ணதாசன்

இப்பொழுது காட்சியளிக்கிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை)

ரொக்ஸி (வெள்ளவத்தை)

வின்ட்சர் (யாழ்ப்பாணம்)

வேல்ஸ் (கண்டி)

நெல்சன் (திருமலை)

இம்பீரியல் (மட்டக்களப்பு)

தாஜ்மகால் (மாத்தளை)

றீகல் (நீர்கொழும்பு)

எம். ஜி. ஆர்—சரோஜாதேவி
நாகேஷ்-மனோரமா-நம்பியார்
நடிக்கும்

கலங்கரை விளக்கம்

4வது வாரம்!

செல்லமகால் (கொழும்பு)

மற்றும் திரைகளில்

சிவாஜி கணேசன்,
தேவிகா,
நாகேஷ்,
பாலாஜி,
மணிமாலா
மனோரமா
நடித்த

அன்புக் கரங்கள்

இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!

சென்ட்ரல் (மருதானை) ★★★★ **றியோ** (கும்பனித்தெரு)

(குளிர் சாதனம் பொருத்தியது)

தினசரி: 2-30, 6, 9-30 ஏப்ரல் 2, 3, 4: காலை 10 மணிக்கும்

தினசரி: 3, 6-15, 9-30 ஏப்ரல் 2, 3, 4: காலை 10-30 மணிக்கும்

ஹிஜ்ரத் எல் ரசூல்

(அழகு ஈஸ்ட்மன் கலரில்)

அத்துடன்

ரூட்டு ரு மெக்கா

(ஹஜ் யாத்திரை பற்றிய விபரங்களடங்கிய படம்)

விரைவில்! சிலோன் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் திரைகளில்!

விஜயா கொம்பைன்ஸ் **எங்க வீட்டுப் பெண்** டைரக்ஷன்: சாணக்கியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] ஸ்தாபனத்தினால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் ஏப்ரல் மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.